www.tamilarangam.net

களத்தில்



மொழியும், கலையும், கலாச்சாரமும் வளம் பெற்று, வளர்ச்சியும் உயர்ச்சியும் அடையும்போதே, தேசிய இனக்கட்டமைப்பு இறுக்கம் பெறுகிறது; பலம் பெறுகிறது. மனித வாழ்வும் சமூக உறவுகளும் மேன்மை பெறுகின்றன. தேசிய நாகரீகம் உன்னதம் பெறுகிறது.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

(23.09.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (195) அன்பளிப்பு : 60 p

# சிங்களப் படைகளின் நாசகாரத் திட்டம்

இராணுவ நடவடிக்கைகள் மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளான மணலாறு - வவுனியா - மன்னார் மாவட்டங்களில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவ சந்திரிகா அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இந்த ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து தமிழர்கள் உயிர் காப்பிற்காக இடம்பெயர்ந்தோடிய செயலை சிங்களப் பேரினவாதம் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றது.

இத்தகைய குடியெழுப்பிக்கலைப்பு மூலம் மணலாற்று மண்ணின் பெரும்பகுதியில் வெலிஓயா என்ற பெயரில், ஏற்கனவே சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு விட்டன. அந்தக் குடியேற்றங்களுக்கு அருகே இருக்கின்ற தமிழரின் வயல்களையும் காணிகளையும் சிங்களவருக்குப் பகிர்ந்தளிக்க படையினர் முயல்கின்றனர்.


அத்துமீறிய சிங்களக்குடியேற்றம் என்ற தமிழர் தரப்பின் குற்றச்சாட்டு உலக அரங்கில் நிரூபணமாகாமல் இருப்பதற்காக தனது குடியேற்ற முயற்சிகளுக்கு, சிங்கள் அரசானது பல்வேறு பெயர்களைச் சூட்டியுள்ளது.

ஆரம்பத்தில், விவசாயக்குடியேற்றங்கள் என்ற பெயரில் சிங்களக்குடியேற்றங்களை தமிழர் நிலத்தில் நடாத்தியது. முடிக்குரிய காணிகளை மக்களுக்கு பகிர்ந்தளித்தல் என்ற போர்வையில் தமிழினத்தின் முடிக்குரிய நிலங்களை கையகப்படுத்திய சிங்கள அரசாங்கம் அவற்றை சிங்களவர்களுக்குப் பகிர்ந்தளித்தது. பின்னர் காலஓட்டத்தில், அவற்றின் அருகே இருந்த தமிழர் கிராமங்கள் குடியெழுப்பிக்கலைக்கப்பட்டு அவையும் சிங்களக்குடியேற்றங்களாக மாற்றப்பட்டதற்கு ஏராளமான உதாரணங்கள் உண்டு.

அதன்பின்னர், தொழிலாளர்களுக்கு குடியிருப்புகளை அமைத்தல் என்ற கோதாவில் வடக்கு - கிழக்கில் உள்ள தொழில் நகரங்களிலும் (திருகோணமலை - அம்பாறை) கரையோரப் பகுதிகளிலும் (கொக்கிளாய் - நாயாறு) சிங்களவர் குடியமர்த்தப்பட்டனர்.

இப்போது, படைமுகாம்களின் பாதுகாப்பிற்காக என்ற ரீதியில் தமிழர் நிலத்தில் சிங்களக்குடியேற்றங்களை அமைக்க அரசாங்கம் முயல்கின்றது.

பலாலி படைத்தளத்தை சூழவுள்ள சுமார் 40 ச.கி.மீற்றர்கள் பரப்பளவான பகுதியை அபகரித்து - அதை சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் முயற்சி ஒன்று அண்மையில் அம்பலமாகி இருந்தது. அந்த நாசகாரமுயற்சிக்கு ஏற்பட்ட பலத்த எதிர்ப்புக் காரணமாக முயற்சியை கைவிடும்படி சந்திரிகா அம்மையார் அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.



தமிழர் நிலம் விழுங்க விரியும் பேரினவாதப் பெருவாயை கிழித்தெறியத் திரள்கிறது தமிழர்சேனை!

உலகத் தொடர்புச் சாதனங்களின் பார்வையில் சதா தென்பட்ட வண்ணமுள்ள குடாநாட்டின் மையத்திலேயே சிங்களவர்களைக் குடியமர்த்த அரசு முயற்சிக்கின்றது என்றால், வன்னி - மன்னார் பெருநிலப்பரப்பில் சிங்களப் பகுதிகளை அண்டியுள்ள தமிழர் நிலங்களை சந்தடியின்றி கபளீகரம் செய்வதற்கு அரசு எவ்வளவு தூரம் முயற்சிக்கும் என்பதை ஊகித்தறியலாம்.

ஆக்கிரமிக்கப்பட்ட நெடுங்கேணிப்பகுதியில் தமிழர் காணிகளை - வீடுகளை சிங்களவர் உபயோகிக்கத் தொடங்கிவிட்டனர் என்ற செய்தி மக்கள் அறிந்ததே. இதே போன்று, மன்னார் மாவட்டத்தில் முன்னர் ஏற்படுத்தப்பட்ட 'சஜவத்த' என்ற சிங்களக் குடியேற்றக் கிராமம் மீண்டும் படையினரின் ஆக்கிரமிப்பிற்குள் சென்றுள்ளது. இங்கே பழையபடி சிங்களவர்களைக் குடியமர்த்த படையினர் முயன்று கொண்டிருக்கின்றனர்.

தமிழர் நிலங்களை அபகரித்து அவற்றை சிங்களமயமாக்குவது பேரினவாதத்தின் நீண்ட நாள் ஆசை. இந்தக் குடியேற்றங்களைப் பயன்படுத்தி தமிழர் தாயகத்தின் நிலத்தொடர்பை சிதைக்கும் சூழ்ச்சியையும் பேரினவாதம் செய்கின்றது. அல்லை - கந்தளாய் மற்றும் கல்லோயா சிங்களக் குடியேற்றங்கள் - நில அபகரிப்புடன் கிழக்கு மாகாணத்தின் நிலத்தொடர்பை பிரித்துச் சிதைக்கும் நோக்கத்தையும் கொண்டவையாகும். இதேபோல வடக்கு - கிழக்கின் நிலத் தொடர்பைத் துண்டித்து தமிழர் தாயகத்தைக் கூறுபோட மணலாறு குடியேற்றங்களை அரசு பயன்படுத்துகின்றது. குடாநாட்டை வன்னிநிலப்பரப்பிலிருந்து துண்டிப்பதற்காக ஆனையிறவு - வெற்றிலைக்கேணி நிலப்பரப்பில் பாரிய சிங்களக்குடியேற்றத்தை அமைக்கும் திட்டம் ஒன்றைப் பேரினவாத அமைப்பு ஒன்று பகிரங்கமாக வெளியிட்டிருந்ததையும் இங்கு நினைவுகூரவேண்டும்.

இந்த சிங்களமயப்படுத்தலால் அரசு சந்திக்க இருக்கும் சர்வதேச அழுத்தங்களிலிருந்து தன்னைப்பாதுகாப்பதற்காக ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் அபிவிருத்திப் பணி என்றும் - மக்கள் சேவை என்றும் கண்துடைப்பிற்காக சிலவேலைகள் செய்து உலகத்தை திசைதிருப்பி தமிழ் மக்களையும் ஏமாற்ற சந்திரிகா அரசாங்கம் முயல்கின்றது.

புலிகள் இயக்கத்தின் உருவாக்கமும் - வளர்ச்சியும் தான் வேகமாகப் பரவிவந்த சிங்களக் குடியேற்றங்களை எமது மண்ணில் தடுத்து நிறுத்தியது. சிலவற்றைக் குடியெழுப்பிக் கலைத்திருந்தது. புலிகளின் இராணுவ பலத்தை அதிகரிப்பதன் மூலம் சிங்கள அரசு தற்போது முடுக்கிவிட்டுள்ள நிலக்கபளீகர முயற்சிக்கு தமழ் மக்கள் தகுந்த பதிலடி கொடுக்க முன்வரவேண்டும். எமது இளைஞர்களும் இளம்பெண்களும் புலிகளுடன் இணைந்து - ஆயுதப் போரில் கலந்துகொள்வதன் மூலமே இதைச் சாதிக்க முடியும். தவறினால் ஈழத்தமிழினத்திற்கு பேராபத்தை அது தேடிக் கொடுக்கும்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.tamilarangam.net



# திருகோணமலையும் அமைதியும்

திருகோணமலையை ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாச்சார நிறுவனம் ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச அமைதி தினத்தையொட்டி அமைதி நகரமாகப் பிரகடனம் செய்துள்ளது. இதனையொட்டி திருகோணமலை புனித மரியாள் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பண வைபவத்தில் சிறீலங்காவின் அமைச்சர்கள் கலந்து சிறப்பிக்க சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா வாழ்த்துச் செய்தி அனுப்பி மகிழ்ந்துள்ளார். வடக்கு கிழக்கின் கவர்னர் மேஜர் ஜெனரல் அசோக்கா ஜயவர்த்தனா திறப்புக் கோர்வை ஒன்றை திருகோணமலை நகரசபைத் தலைவரிடம் கையளித்து திருகோணமலையை அமைதி நகராகப் பிரகடனப் படுத்தியதாகவும் அன்புவழிபுரத்தில் அமைதி நகர் என்று ஒரு பெயர்ப்பலகை ஒன்றை சிறீலங்கா அமைச்சர் மங்கள சமரவீரா திரைநீக்கம் செய்து வைத்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொடுத்தவனே பறித்துக் கொண்டாண்டி! என்று தமிழில் பழைய தத்துவ சினிமாப்பாடல் ஒன்று பிரபல்யம் பெற்று விளங்கியது. இன்று அதேபாணியில் பறித்தவனே பெயரிட்டுக் கொண்டாண்டி! என்று புதிய பாடல் பாடத் தோன்றுகிறது சிங்கள அரசாங்கமும் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாச்சார நிறுவனமும் சேர்ந்து நடாத்தும் இந்த அமைதி நகர் நாடகத்தை பார்க்கையில்.

அமைதிப்பூமியாக திகழ்ந்த திருகோணமலையின் அமைதியைப் பறித்த சிங்கள அரசாங்கமே அதனை அமைதி நகராக மாற்றுவதாகக் காட்டும் இந்த நாடகத்திற்கு சர்வதேச நிறுவனமான கல்வி விஞ்ஞான கலாச்சார நிறுவனம் மேடை அமைத்துக் கொடுப்பதை எந்த தமிழனும் ஏற்றுக் கொள்ளமாட்டான். அத்துடன் அந்த மேடையில் வைத்து சிறீலங்கா அமைச்சர் மங்கள சமரவீர திருகோணமலையை சிறீலங்கா வர்த்தக தலைநகரமாக மாற்றப்போவதாக அறிவித்துள்ளமை ஆக்கிரமிப்பாளன் ஒருவன் தான் ஆக்கிரமித்துள்ள பூமியில் இருந்து விடுத்துள்ள சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் எதிரான ஆக்கிரமிப்பு பிரகடனம். தமிழீழ மக்களின் தாயகத்தின் தலைநகரமாக உள்ள திருகோணமலையை அவர்களின் விருப்பு இன்றி தமிழ் மக்களின் பொதுச்சித்தத்திற்கு எதிராக அந்நிய ஆக்கிரமிப்பு அரசாக தமிழீழ மக்களால் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சிறீலங்கா வர்த்தக தலைநகரமாக்கப் போவதாக அறிவித்துள்ளமை இனஅழிப்பின் ஒரு செயற்பாடாகவே உள்ளது. மனித உயிர்களை மட்டுமல்லாது அவர்கள் வாழ்வை இருக்கையை மறுக்கக்கூடிய செயல்களைச் செய்வதும் இனஅழிப்பே என்பது இனஅழிப்பு குறித்து ஆழமான ஆய்வுகளைச் செய்த ஐக்கிய நாடுகள் சபையின் பிரபல்யம்மிகு மனித உரிமைச் செயற்பாட்டாளராகிய லியோ கூப்பரின் நூற்கருத்து. அவ்வகையில் பார்க்கையில் இனஅழிப்பினை தடுத்து நிறுத்துவதற்கு பொறுப்பு வாய்த்த நிறுவனமாகிய ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பான கல்வி விஞ்ஞான கலாச்சார நிறுவனம் சிறீலங்காவின் இனஅழிப்பு செயற்திட்டமாகிய திருகோணமலையை வர்த்தக தலைநகரமாக்குவதற்கான செயற்திட்டத்திற்கு துணைபோகும் செயலாக திருகோணமலையை அமைதி நகராக அறிவித்துள்ளதாகவே தமிழர்கள் கருதுகின்றனர். யுத்தம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அதில் எவ்வகையில் தலையிட்டாலும் அது சர்வதேச தலையீடாகவே கொள்ளப்படல் வேண்டும் என்பது ஆய்வாளர்களின் கருத்து. இன்று தமது சுயநிர்ணய உரிமையைக் கொண்டு இலங்கைத் தமிழ் மக்கள் தமது தமிழீழத் தாயகத்தை மீள அமைப்பதற்கான தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவிற்கு முன்னேறி உள்ள நிலையில் தமிழீழத் தாயகத்தினை சிறீலங்கா வர்த்தக தலைநகராக்க போவதாக அறிவித்துள்ளமை அதன் இராணுவ நடவடிக்கையின் ஒரு அங்கமாகும். சிறீலங்காவின் இராணுவ நடவடிக்கைகளை வளப்படுத்த பலப்படுத்த கூடிய வகையில் திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய முயற்சிக்கின்றது. இதற்கு யப்பானிய அரசாங்கத்தின் உதவித் தொகையான 150 பில்லியன் ரூபாக்களை சிறீலங்கா ஒதுக்கியுள்ளதாகவும் சிறீலங்கா அமைச்சர் அறிவித்துள்ளார். இது யுத்தத்தை தொடருவதற்கு சிறீலங்காவின் இராணுவ கடற்படை விமானப்படையினருக்கான கடற்தளம் ஒன்றை சிறீலங்கா யப்பானிய நிதியுதவியில் அபிவிருத்தி செய்யும் செயற்பாடாகவே அமைகிறது.

தமிழர்களைப் பொறுத்த வரை இந்த அமைதி நகர் நாடகத்தை அவர்களின் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான திட்டமிட்ட சதிச்செயலாகவே கருதுகின்றனர். திருகோணமலை தமிழர்களின் பாரம்பரிய பூமி. தமிழர்களின் பண்பாட்டு கலாச்சார வளர்ச்சியின் ஊற்று. சைவமதத்தின் புனிதர்கள் எனப் போற்றப்படும் நாயன்மார்களால் பாடப்பெற்ற திருக்கோணேஸ்வர ஆலயத்தைக் கொண்ட நகர். திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டிருப்பதாலேயே அதனை தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வர காலனித்துவ சக்திகள் முயன்றனர். திருகோணமலைத் துறைமுகத்தின் புவியியல் நிலை அதனை தென்னாசியாவின் அதிமுக்கிய இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நகராக கருதவைத்து எப்பொழுதுமே ஆதிக்க சக்திகளின் கழுகுக்கண்களை திருகோணமலையின்பால் திரும்பச் செய்வது வரலாறாக உள்ளது. இரண்டாம் உலக மகாயுத்த நேரத்தில் பிரித்தானியா திருகோணமலையை தனது கடற்படைத் தளங்களில் ஒன்றாகவும் விமான எரிபொருள் நிரப்பு தளங்களில் ஒன்றாகவும் பயன்படுத்தியது. திருகோணமலையின் நிலாவெளி மண்ணில் உள்ள இல்மனைற் கனிப்பொருள் மூலம் அணுசக்தி தொழிலுக்குத் தேவையான முக்கிய மூலப்பொருள்களில் ஒன்றான யுரேனியம் உள்ளது.

இத்தகைய முக்கியத்துவங்கள் நிறைந்த திருகோணமலை முற்றிலும் தமிழர்களைக் கொண்ட நகரமாக பிரித்தானிய காலனித்துவத்தின் ஆரம்பக் காலத்தில் விளங்கியமையை அக்காலத்து பிரித்தானிய அதிகாரிகள் எழுத்தாளர்கள் ஆய்வாளர்களின் குறிப்புக்கள் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. யாழ்ப்பாண அரசர்கள் திருகோணமலை கோணேஸ்வரப் பெருமானுக்குக் கொடுத்த முக்கியத்துவங்களும் வன்னிச் சிற்றரசு திருகோணமலையில் பரவியிருந்தமைக்கான வரலாற்றுச் சான்றுகளும் திருகோணமலையில் தமிழர்களின் அரசும் தமிழர்களும் வாழ்ந்து வந்தமைக்கான சான்றுகளாக உள்ளன.

சிங்களப் பெரும்பான்மை அரசாங்கத்தை பிரித்தானியக்



காலனித்துவம் உருவாகச் சந்தர்ப்பம் அளித்த நாள் முதல் திருகோணமலையை சிங்கள நாட்டின் பகுதியாக்கும் செயல்களை சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் தமது அரசியல் செயற்திட்டங்களாக கொண்டு செயற்பட்டு வந்துள்ளன. சிங்கள அரசாங்கங்களின் இந்த இனஅழிப்பு நடவடிக்கைகளுக்கு அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையே போர்க்கப்பட்டு வந்துள்ளன. அபிவிருத்தி திட்டங்கள் என்ற பெயரில் திருகோணமலையில் குடியேற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அவை சிங்களக்குடியேற்றங்களாக செயற்படுத்தப்பட்டன. இந்த சிங்களக் குடியேற்றங்களில் குடியேற்றப்படவென சிங்கள அரசாங்கங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பாரிய சிங்கள குற்றவாளிகளாகவும் சிங்களக் காடையர்களாகவும் இருந்தனர். இவர்களுக்கு சிங்கள அரசாங்கங்கள் தனது படைகளின் பாதுகாப்பை வழங்கின. இதனால் இவர்கள் இக்குடியேற்றத் திட்டங்களைச் சுற்றி வாழ்ந்த தமிழர்களை அவர்களின் பாரம்பரியமான வீடுகள் காணிகளில் இருந்து அச்சுறுத்தல்கள் வன்முறைகள் மூலம் வெளியேற்றி அவர்களின் கடல்படு பொருளாதார அமைப்புக்கள் நிலம்சார் பொருளாதார அமைப்புக்கள் தொழில் வர்த்தக முயற்சிகளைத் தமதாக்கிக் கொண்டனர். இவ்வாறாக உருவாக்கபட்ட சிங்களக் குடியேற்றங்களால் திருகோணமலையின் இயற்கையான சனத்தொகை அமைப்பு மாற்றப்பட்டு திருகோணமலை சிங்களவர்களையும் உள்ளடக்கிய தேர்தல் தொகுதி எனக் கூறி சேருவெல என்ற புதிய சிங்களத் தொகுதி ஒன்று சிருஸ்டிக்கப்பட்டது. அத்துடன் திருகோணமலை தேர்தல் தொகுதியிலும் சிங்கள வாக்குகள் பிரதிநித்துவத்தை நிர்ணயிக்கும் தன்மை உருவாக்கபட்டது. இத்தகைய சிங்கள மயப்படுத்தல் தமிழர் தாயகத்தை பாராளுமன்றப் பெரும்பான்மையை பயன்படுத்தி ஆக்கிரமித்தல் போன்றவைகளின் விளைவாகவே திருகோணமலையின் அமைதி சீர்குலைக்கப்பட்டது. சிங்கள அரசாங்கங்களின் படைகளின் துணையுடன் சிங்களக் குடியேற்றவாசிகளால் தமிழர்கள் விரட்டி வதைக்கபட்டு வந்த இந்தக் கொடுமைகள் எல்லாம் யுத்தத்தின் விளைவுகள் அல்ல. யுத்தம் சிறீலங்காவால் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பே உருவாக்கபட்டவைகள். இந்நிலையில் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் தமிழ் மக்களின் உயிரும் உடமைகளும் வாழ்வும் சிங்கள ஆக்கிரமிப்பால் நாளாந்தம் இனஅழிப்பு செய்யபட்டு வருவதை தடுப்பதற்கு இன்றியமையாத தேவையாக மாறியது உலகறிந்த உண்மை. இன்று தமிழீழ மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தங்கள் தமிழீழத் தாயகத்தை மீளமைக்கும் தமிழீழத் தேச நிர்மாணத்தில் வெற்றி பெறும் நிலையை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் நெருங்கி வருவதையும் உலகறியும். இந்த நேரத்தில் தமிழீழத் தாயகத்தின் தலைநகரமான திருகோணமலையை சிறீலங்காவின் ஓர் அலகாக நிரந்தரமாக மாற்றுவதற்கு எடுக்கும் முயற்சியே வர்த்தக தலைநகரமாக்குதல் என்ற சதித்திட்டம். இதன் மூலம் திருகோணமலையின் வர்த்தக தலைநகரமாக்குதல் திட்டதிற்கு என சர்வதேச உதவிகளைப் பெற்று சிறீலங்காவின் இராணுவ பலத்தை அங்கு பெருக்கிக் கொள்வது என்பது ஒன்று. மேலும் இத்தகைய சிறீலங்காவின் இராணுவ நடவடிக்கைகளைத் தமிழ் மக்கள் எதிர்த்தால் அதனால் சர்வதேச சமூக முதலீடுகளும் ஆட்புலன்களும் பாதிக்கப்பட்டால் அதனை சர்வதேச பயங்கரவாத நடவடிக்கை என உலகிற்கு பரப்புரை செய்து தமிழர்களின் சுயநிர்ணய உரிமையினை முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பயங்கரவாத நடவடிக்கை என பச்சை குத்துவது மற்றொரு நோக்கு. சிறீலங்காவின் இந்த நோக்குகளுக்கு துணைபோகும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞான கலாச்சார நிறுவனம் திருகோணமலையை அமைதி நகர் எனப் பிரகடனப்படுத்தி உள்ளமை தமிழ் மக்களை இனஅழிப்பு செய்கையில் தமிழீழத் தேசத்தின் உட்கட்டுமானங்களை சிதைக்கையில் அதனை தமிழ் மக்கள் பார்த்துக் கொண்டு வாளாவிருக்க வேண்டும் என்பது போல் இருக்கிறது. இனஅழிப்பினை தடுப்பதற்கு பொறுப்பு வாய்ந்த நிறுவனமான ஐக்கிய நாடுகள் சபையே அதற்கு துணைபோவது என்பது வேடிக்கை மட்டுமல்ல வேதனையான விடயமும் கூட. தமிழ் மக்களுக்கு இன்று உள்ள அதி முக்கிய பிரச்சினை அவர்களுடைய உயிருக்கு உடலுக்கு வாழ்வுக்கு பாதுகாப்பு. சிறீலங்காப் படைகளினாலேயே இந்த பாதுகாப்பின்மை தோற்றுவிக்கபபடுகிறது. ஊக்குவிக்கப்படுகிறது என்பதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு. அந்தப் படைகளை தமிழர்களின் தாயகத்தில் இருந்து விலக வைத்து தமிழர்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் வாழ்வுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டிய ஐக்கிய நாடுகள் சபை இவ்விடயத்தில் காட்டும் காலதாமதம் போதாது என்று சிறீலங்காவின் இராணுவ ஆக்கிரமிப்பை ஊக்குவிக்கும் வகையில் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வது அதன் மேல் உலக மக்கள் கொண்டுள்ள மதிப்பை நம்பிக்கையைச் சிதறடிப்பதாக உள்ளது.

அதே வேளை தமிழ் மக்கள் தமது பாதுகாப்பை தாமே நிறுவ வேண்டியவர்களாக உள்ளனர் என்ற உண்மையையும் தெட்டத் தெளிவாக்கியுள்ளது. இதனால் எமது மக்களுக்கு நாம் தமிழீழ மக்கள் என்ற உரிமையுடன் வழங்கும் நிதி உதவிகளால் ஆதரவுப் பரப்புரைகளால் தொழில்நுட்ப விஞ்ஞான ஒத்துழைப்புக்களால் புனர்வாழ்வு உதவிகளால் மட்டுமே எமது மக்கள் தமக்கான அமைதி நகராக திருகோணமலையை மட்டுமல்ல முழு தமிழீழத்தையுமே மாற்றுவர். அதற்குரிய சகல ஆற்றல்களையும் கொண்ட தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு புலம்பெயர் தமிழர்களாகிய நாம் எவ்வளவு விரைவாக, அதிகமாக உதவிகளைச் செய்கின்றோமோ அவ்வளவுக்கு அவ்வளவு எமது தமிழீழ மக்கள் தமது தாயகத்தை அமைதி நகராக மாற்றுவர் என்பதே நடைமுறை சாத்தியமான உண்மை.





| | | | | | |
|---|---|---|---|---|---|
| AUSTRALIA<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | CANADA<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5. | DENMARK<br>LTTE<br>P.O.Box 47,<br>7400 Herning. | FRANCE<br>TCC<br>341 Rue Des<br>Pyrenees,<br>75020 Paris. | GERMANY<br>TCG<br>Postfach 340251,<br>51624 Gummersbach. | ITALY<br>TCC<br>Via Vinsenzo Di Pavia No14,<br>90138 Palermo. |
| NETHERLANDS<br>TCC<br>P.O.Box 18600,<br>2502 EP Den Haag. | NORWAY<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo. | SWITZERLAND<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | SWEDEN<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | UNITED KINGDOM<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | U.S.A<br>W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432. |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# விரிவடையும் போரும் புலிகளும்

*ரணகோசா 5இன் மீது புலிகள் தொடுத்த பதிலடி சிங்களத்தின் சமீபகால இராணுவ அரசியல் பாசாங்குகளை சிதைத்து, போரின் உண்மையை உலகிற்குப் புரிய வைத்துள்ளது. தமது சிறப்புப் படையணிகளான 53ம், 55ம் படைப் பிரிவுகள் மீது நம்பிக்கை வைத்து புதிதாக அமெரிக்காவில் பயிற்சியை முடித்துவிட்டு போர் முனைக்குத் திரும்பிய மேஜர் ஜெனரல் வசந்த பெரேராவின் சாமர்த்தியத்தினை நம்பி நடாத்தப்பட்ட ரணகோசா 5க்குப் புலிகள் கொடுத்த அதிர்ச்சி வைத்தியம் கொழும்புச் செய்தி ஊடகங்களில் பெரும் ஒப்பாரியாக வெளிவந்தது.*

இதே காலப்பகுதியில் தமிழீழம் பூராவும் ஆக்கிரமிப்புப் படைகள் மீது புலிகளின் போரணிகள் பெரும் தாக்குதல்களை நடாத்தியுள்ளன. வவுனியாவினை தமது ஆக்கிரமிப்புக்கான பிரதான பின்னரங்காகக் கருதி படைத்தளமுகாமினை அங்கே நிறுவிய சிங்கள இராணுவத் தலைமை புலிகளின் போரணி ஒன்றை பிரதான முகாமின் வாசலிலேயே அண்மையில் எதிர்கொண்டது. மேஜர் ஜெனரல் வசந்த பெரேராவின் படைத்தளம் முன் இடம்பெற்ற அதிரடித்தாக்குதல் தமிழர்களின் இராணுவ விரிவாக்கத்திற்கு ஆதாரமாய் அமைந்தது. மன்னாரில் இராணுவ ஆக்கிரமிப்பு வலயத்தினுள் புலிகள் நடாத்திய தாக்குதல்கள் இராணுவத்தின் ரணகோசா 1, 2, 3, 4 என்பனவற்றை கேள்விக்குறியாக்கின. மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் இராணுவமும் அதிரடிப்படைகளும் தமிழர் போரணிகளின் அதிகரித்துவரும் பலத்தால் தமது வியூகங்களை மாற்ற ஆரம்பித்துள்ளன. யாழ். குடாவில் இராணுவம் மீதான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதை சிங்களத்தளபதி மேஜர் ஜெனரல் லோகன் குணரட்டண ஒப்புக்கொள்கின்றார். இந் நடவடிக்கைகள் மூலம் புலிகள் தமது இர்ாணுவ செயற்பாட்டு வலயத்தை அதிகரித்துவிட்டனர் என கொழும்பு இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் கூறுகின்றார்.

ஒருபுறம் ஆக்கிரமிப்புப் படைகளை சிறுகச்சிறுக அழிக்கும் போர் நடவடிக்கைளை முன்னெடுக்கும் அதேவேளையில் வன்னிப் பெருநிலப்பரப்பில் இராணுவத்தின் உச்ச பலத்தின் மீது மரபு ரீதியான போரை புலிகள் தொடர்ந்து நடாத்துகின்றனர். மரபுசார் இராணுவ நடவடிக்கைகளில் கனரக ஆயுததளபாடங்களை துல்லியமாகப் பாவித்து பெரும் சேதாரத்தை ஏற்படுத்தும் உத்திகளினை ரணகோசா 5இன் மூலம் புலிகள் வெற்றிகரமாக நடாத்திக்காட்டிவிட்டனர் என கொழும்புச் செய்தி ஊடகங்கள் அச்சம் தெரிவிக்கின்றன.

சிங்கள இராணுவத்தின் உளவு மற்றும் நாசகார நடவடிக்கைகள் மீது புலிகள் அண்மைக்காலங்களாக செலுத்திவரும் தாக்கம் போரின் போக்கை தமிழர்களுக்கு சாதகமாக திருப்பியுள்ளது. சிங்கள இராணுவம் தன் தமிழ் கைக்கூலிப் படைகளை தனது இராணுவ உளவுகளுக்கான பெரும் ஆதாரமாகப் பயன்படுத்தியது. மட்டக்களப்பில் ராசீக் குழு போன்ற உப இராணுவ கைக்கூலிகளையும் வவுனியாவில் மாணிக்கதாசன் குழு போன்ற சமூகவிரோத துணைப் படைகளையும் இராணுவ உளவுத்துறை தனது உளவுப் பணிகளுக்கும் நாசகாரப் பணிகளுக்கும் பயன்படுத்தியது. இவ் உளவு வலையை உடைத்தெறிவதற்கான பணியானது பெரும் வெற்றியை கண்டுவருவதால் எதிரி இராணுவம் தனது தரைமார்க்கமான போர் நடவடிக்கையில் பெரும் குழப்பங்களை எதிர்கொண்டுள்ளது. தனது துணைப்படைகளின் நம்பகத்தன்மை பற்றி எதிரி இராணுவம் சந்தேகம் கொள்கின்றது. துணைப்படைகள் புலிகளினால் ஊடுருவப்பட்டுவிட்டதாக இராணுவ அதிகாரிகள் பகிரங்கமாகக் கூறுகின்றனர். தமது நிலைகளை வேவு பார்க்கவே புலிகளால் இத் துணைக் குழுக்கள் பெருமளவு பயன்படுத்தப்படுவதாக இராணுவம் கருதுகின்றது. இவை போர்முனையில் எதிரிகளுக்கு குழப்பத்தை ஏற்படுத்திவிட்டமையை சமகால இராணுவ நிலைமைகள் உறுதிப்படுத்துகின்றன.

இவ் இராணுவ சமநிலை மாற்றங்கள் மத்தியில், வன்னியில் உருவாகிவரும் தமிழர்களின் எல்லைக் காவற்படை போர் பற்றிய புதிய பரிமாணத்தை உருவாக்கியுள்ளது. போரின் எதிர்காலம் பற்றிய மரபுசார் ஊகிப்புக்களில் புலிகளை ஒரு வரையறைக்கு அப்பால் மனித வலுவை திரட்டமுடியாத சக்திகளாக வைத்தே முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.




சிங்கள இராணுவம் எதிர்கொள்ளும் மனிதவலு பிரச்சினையையே புலிகள் எதிர்கொள்வதாக சிங்கள ஆய்வாளர்களும் இராணுவ நிபுணர்களும் கருதினர். இதனை அடித்தளமாகக் கொண்டே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை சிறிதாக்குவதன் மூலம் புலிகளை ஒழித்துக் கட்டலாம் என்ற ரத்வத்தை-சந்திரிகா சித்தாந்தம் பிறந்தது. ஆனால் போரின் திசையை எமது தேசியத் தலைவரே தீர்மானிக்கின்றார்.

ஒரு விடுதலைப் போருக்கும் அடக்கு முறைக்கும் இடையேயுள்ள பண்புகளை பிரித்துணர்ந்து போரை நகர்த்திவரும் எம் தேசியத் தலைவர் விடுதலைப் போரின் மற்றொரு மகத்தான பலத்தை எல்லைக் காவல் படைகளின் உருவாக்கத்துடன் வெளிக்காட்டியுள்ளார். இன்று போரின் வெற்றிக்கு உழைப்பதைத் தேசியக் கடமையாய் ஏற்று பல்லாயிரம் மக்கள் போரில் பங்கேற்பது சிங்களத்தின் இராணுவ கோட்பாடுகளில் சிதைவை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறான இராணுவ சூழ்நிலையில் சிங்கள அரசு போர்பற்றிய குழப்பத்தில் தள்ளப்பட்டுள்ளது. சிங்கள அரசியல் தலைமைகள் தேர்தலை மையமாக வைத்து இராணுவ நடவடிக்கைகளை அணுகுகின்றனர். இராணுவம் போர்முனைகளின் அகோரத்தை மையப்படுத்தி போரை அணுகுகின்றது. சிங்கள இராணுவத்தின் மையக் கோட்பாடான சிங்களப் பேரினவாதம் போரை தீவிரமாகத் தாங்கிப்பிடித்துள்ளது என்பதை சமகால சிங்கள வெளிப்பாடுகள் புலப்படுத்துகின்றன. சிங்கள ஊடகங்களும் அரசியல் சமூக இயக்கங்களும் இவ் வெளிப்பாட்டை பகிரங்கமாகக் கொண்டுள்ளனர்.

தற்போது சிங்கள அரசு விடுத்துள்ள இராணுவ ஆயுதத்தளவாட கொள்வனவுப் பட்டியல் சிங்கள அரசும் இராணுவமும் தற்போதைய போர் நிலவரத்தை எதிர்கொள்வதற்கான உத்திகளில் மாற்றங்களைப் புகுத்தியுள்ளமையை வெளிக்காட்டுகின்றது. தற்போது லேசர் மற்றும் ராடர்களால் வழிகாட்டப்படும் குண்டுகளை கொள்வனவு செய்ய எதிரி முயல்கின்றான். இலத்திரனியல் போரிற்கான தளவாடங்களை கொள்வனவு செய்வதற்கான உத்தரவுகள் வெளியாகியுள்ளன. பிரித்தானியாவிடமிருந்து சீ 130 ரக விமானங்களை வான்படை கொள்வனவு செய்கின்றது. அண்மைக்காலமாக கடற்போரிற்கு கொடுத்த முக்கியத்துவத்தினை வான் பலத்திற்கு குறிப்பாக குண்டுவீச்சுக்கள் சார்ந்த பலத்திற்கு எதிரி கொடுக்கின்றான்.

இதன் காரணத்தை சிங்கள ஊடகங்கள் பலவாறாகக் கூறுகின்றன. புலிகளின் அதிகரிக்கும் பீரங்கிப் பலத்தை சிதைப்பதற்கே லேசர்-ராடர் குண்டுகளை சிறீலங்கா கொள்வனவு செய்வதாக இவை கூறுகின்றன. போரின் தீவிரம் தரைப் படைகளின் கைகளை விட்டுச் செல்வதால் வான் பலத்தை முழுமையாக தமிழர்கள் மீது பயன்படுத்த எதிரி முயல்வான் என கூறப்படுகின்றது. சிங்களத்தின் கடல்- தரைப் பலத்துடன் புலிகளால் சமநிலையை எட்டமுடிவதால் வான் பலத்தை தனது சாதகமானதாக்க எதிரி முனைவது புலப்படுகின்றது.

**ஒரு விடுதலைப் போருக்கும் அடக்கு முறைக்கும் இடையேயுள்ள பண்புகளை பிரித்துணர்ந்து போரை நகர்த்திவரும் எம் தேசிய தலைவர் விடுதலைப் போரின் மற்றொரு மகத்தான பலத்தை எல்லைக் காவல் படைகளின் உருவாக்கத்துடன் வெளிக்காட்டியுள்ளார்.**

இவ் இராணுவப் போக்கானது பெரும் போரிற்கான அறிகுறிகளைத் தருகின்றன. ரணகோசா 1-4ஐ சந்திரிகா தனது தேர்தல் பரப்புரைக்கு சாதகமாகப் பயன்படுத்த முயன்றமையும் ரணகோசா 5இன் தோல்வியை ஐக்கிய தேசியக் கட்சி தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முற்பட்டமையும் போர் சார்ந்த அரசியல் தீவிரமடைவதைக் காட்டுகின்றது.

சிறீலங்காவுக்கும் தமிழீழத்துக்குமான போர் இன்று தீர்க்கமான கட்டத்தை எட்டியுள்ளது. புறச்சூழ்நிலைகளின் வளர்ச்சியுடன் புலிகளின் போர்ப் பிரகடனம் எல்லைகளை ஒட்டிய போராக போரை மாற்றி வருகின்றது.

**நாதன்**






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமரும் மருத்துவமும்



**– தூயவன் –**

அருகிலிருப்பவற்றையே அவதானிக்கமுடியாத அந்தகார இருள். அதற்கு வலுச்சேர்ப்பதற்காக வானத்து நட்சத்திர ஒளிவருகைக்குத் தடை விதிக்கும் மழைமேகங்கள். அவைதெளிக்கும் நன்னீர்த்துளிகள் உடலைக் குளிர்விக்கும் நேரம் தங்கள் பாதம் பதியும் அன்றி மூச்சுவிடும் ஓசையோ அவர்கள் செவிகளையே சேரக்கூடாத அவதானத்துடன் கரும்புலிகள் அணியொன்று ஆனையிறவுத்தளத்தை ஊடறுத்துச் செல்கின்றது. அவர்களின் இதய ஓசை மட்டுமே அவரவர் செவிப்பறையை அதிர்விக்கின்றது. தங்கள் சிறு அவதானமின்மையும் எதிரியை உசாரடையச் செய்துவிடலாம். 'கரணம் தப்பினால் மரணம்' என்பது இவர்களுக்கு மட்டுமன்று இவர்களால் பெற்றுக் கொடுக்கப்பட இருக்கும் வெற்றித் தேவைக்கும் என்பது அனுபவங்களின் பாடம்.

மேற்படி எண்ணங்களால் சூழப்பட்ட வண்ணம் அவ்வணிநகர்கின்றது. அப்பொழுது அவர்களில் ஒருவர் காலில் பாம்பு ஒன்று தன் பல்வரிசையைப் பதிக்கின்றது. 'பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பர்.' ஆனால் இவர்களிற்குப் பயம்மறந்து பல காலமாகிவிட்டது.எதிர்பார்க்கப்பட்ட ஆபத்துக்களை எதிர்கொள்வது ஒப்பீட்டளவில் இலகுவானதே. இதற்கமைய பாம்பினால் கடியுண்டவர் களமருத்துவர் ஒருவருடன் இணைந்து இருவருமாகப் பற்றையொன்றினுள் புகுந்து பதுங்கிப் பாதுகாப்பாகத் தம்மை உரு மறைத்துக் கொள்கின்றனர்.

தரைவாழ் பாம்பினங்களில் 70 வீதமானவை நஞ்சற்றவை. எனவே கடித்த பாம்பு ஆபத்தற்றதாக இருப்பதற்கு சந்தர்ப்பங்கள் அதிகம். ஆயினும் அதனை உறுதிப்படுத்தல் வேண்டும். நஞ்சினால் நரம்பு மண்டலம் தாக்கப்படவில்லை என்பதனை மேலெழுந்த வாரியாக உறுதி செய்யலாம். குருதியானது பத்து நிமிடமளவில் உறைவதனை அவதானிப்பதன் மூலமே குருதியிழையமும் தாக்கப்டவில்லை என்பதனை உறுதி செய்யலாம். இதனைச் செய்வதற்கு வெளிச்சம் வேண்டும். எதிரியின் குகையினுள் ஏற்படுத்தப்படும் சிறு வெளிச்சமும் மலைமேல் விளக்காகும் கற்பனை கடந்த ஆபத்துக்களை கண்ணெதிரே கொண்டு வரும். எனினும் செயற்பட்டேயாக வேண்டும். ஒருவாறு மெல்லிய ஒளிக்கதிரின் உதவியுடன் நாளமொன்றிலிருந்து வெளியெடுக்கப்பட்ட குருதியானது உறையவிடப்படுகின்றது. கடித்த பாம்பு நஞ்சற்றது என்பது உறுதி செய்யப்படுகின்றது மேற்படி கரும்புலியணியின் பலம் மீளவும் உறுதிசெய்யப்படுகின்றது. இதனால் இவ்வணி தனது தாக்குதல் இலக்கை வெற்றிகரமாக நிறைவேற்றி இழப்புக்கள் எதுவுமின்றி மீள்கிறது. ஓயாதஅலைகள்- 2இன் வெற்றி எமதாகின்றது.

01.02.1998 அதிகாலை அம்மருத்துவ முகாம் மிகத் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. முதல் நாள் இரவு கிளிநொச்சி இராணுவத்தளம் மீதான வலிந்த தாக்குதலின்போது காயமுற்றவர்களுக்கு அவசர சிகிச்சைகள் அளிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. விரைந்து வரும் வாகனங்களில் இருந்து இறக்கப்படுபவர்களுக்கு முதலுதவியழித்தல் சிறுசிறு சத்திரசிகிச்சைகள் செய்தல் குருதி திரவ ஊடகம் ஏற்றுதல் அவர்களை உடனுக்குடன் இடம் மாற்றுதல் போன்ற பல்வேறுபணிகள் வேகமாக இடம்பெற்ற வண்ணமுள்ளன. அப்போது வானில் வட்டமடிக்கும் கிபீர் குண்டு வீச்சு விமானங்களின் இரைச்சல் விட்டுவிட்டு தரையையும் வானையும் அதிர்விக்கின்றது. இம்முகாம் தாக்கப்படலாம் என்ற



ஐயம் எழுகிறது. உடனேயே எல்லோரும் காயமடைந்தவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றவும் நிலக்கீழ் பதுங்குகுழியினுள் கொண்டுசெல்லவும் முயற்சிக்கின்றனர். அதற்குப் போதிய அவகாசம் இல்லாமலேயே மருத்துவ முகாம் வான் தாக்குதலுக்குள்ளாகின்றது. இதன்போது பூநகரி வெற்றித்தாக்குதல் முதல் இன்று வரையான சமர்களில் பல போராளிகளின் உயிர்காத்த இராணு மருத்துவர்களான மேஜர் சுசில், மேஜர் ரோகினி மற்றும் களதளமருத்துவப் பொறுப்பாளர்களான மேஜர் திவாகர், மேஜர் எஸ்தர் உட்பட 43 பேர் வீரச்சாவடைகின்றனர். மேற்படி கசப்பான அனுபவங்கள் தொடராமல் இருப்பதற்காகத் தொடர்ந்த தாக்குதல் திட்டமிடல்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இது ஓயாதஅலைகள்- 2இல் வெளிப்பட்டது.

ஆகாயக் கடல்வெளித் தாக்குதல், தவளைப்பாய்ச்சல் தாக்குதல் போன்ற சமர்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட போராளிகள் காயமடைந்தனர். இவர்களைத் தன்னுள் அரவணைத்துக் காத்தது யாழ். போதனா வைத்தியசாலை, இதன்போது இங்கு பணியாற்றிய நூற்றிற்கு மேற்பட்ட மருத்துவர்களும் ஆயிரத்துக்கு அதிகமான பணியாளர்களும் தங்கள் உயிர்காக்கும் பணிக்கு சிகரம்வைத்தனர். இவ்வளம் எம் போரிடும் ஆற்றலிற்குப் பெரும் வலுச் சேர்த்துக் கொண்டிருந்தது. இதனையும் இதுபோன்ற ஏனையவற்றையும் இல்லாதொழிப்பதற்கு எதிரி தன்னாலான எல்லாவற்றையும் செய்வான் என்பதில் ஐயம் இருக்கவில்லை இதற்கான மாற்றீடுகளைப் பெறுவதற்கான தலைவர் அவர்களின் திட்டங்கள் சில வருடங்களுக்கு முன்னரேயே செயல் வடிவம் பெறத் தொடங்கியிருந்தது.

1993இல் மணலாற்றில் நடைபெற்ற கொக்குத்தொடுவாய்த் தாக்குதலின்போது களமுனையிலிருந்து யாழ். மருத்துவமனையினை சென்றடைவதற்குப் பல பத்து மைல் பவனிக்க வேண்டியிருந்தது. கிளாலி நீரேரியைக்கடக்கவும் சில மணிநேரம் செலவழிக்கவேண்டியிருந்தது. இதன்போது காப்பாற்றப்படக்கூடியவர்கள் எனக் கணிக்கப்பட்டவர்கள் வீரச்சாவடைந்தமை, பாதிப்பிற்குள்ளான குருதிக்கலன்கள் காலதாமதம் காரணமாக திருத்த முடியாமல் போனதால் பலர் தம் அங்கங்களை இழந்தமை, பயண இடர்பாடுகளின்போது அவர்கள் அனுபவித்த மேலதிக வேதனைகள் எனப்பல காரணிகள் எம்மனங்களை உறுத்தின. பலமாகச் சிந்திக்கவைத்தன. நாங்கள் போர்ச் சத்திரசிகிச்சை செய்வதில் கணிசமான அளவு முன்னேறுவோமாயின் மேற்படி பின்னடைவுகளை தவிர்க்கலாம் என உணர்ந்தோம்.

முல்லைச்சமரில் விழுப்புண்ணடைந்த போராளி ஒருவர் தமது எண்ணவோட்டங்களைப் பின்வருமாறு கூறினார். நாங்கள் பிரச்சனை இல்லாமல் நகர்ந்து எங்களுக்குரிய இடங்களில் நிலையெடுத்துவிட்டோம். மற்ற இடங்களும் குழம்பின மாதிரித்தெரியவில்லை. அதனால் இந்தத் தாக்குதலில் பூரணமாக வெல்வோம் அதில் சந்தேகம் இருக்கவில்லை. ஆனால் காயமடைந்தால் என்னசெய்கிறது? முந்தியெண்டாலும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இருந்தது. பல நூறு போரர்ளிகள் காயமடைவர் என்பது வெளிப்படையானது. இதனால் இப்படியான மனநிலை அவர்களுக்கு ஏற்படுவது இயற்கையானதே. இத்தாக்குதல் நடைபெற்ற முதல் இரண்டு நாட்களிலேயே ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இதன்போது எற்பட்ட மருத்துவப் பளுவிற்கு வெற்றிகரமாக முகம் கொடுத்தோம். இதனால் மருத்துவம் தொடர்பாக எம்மவர் மத்தியில் இருந்த சந்தேகம் தீர்க்கப்பட்டது. இது அவர்களுக்கு மேலதிக உளவியல் பலத்தை கொடுத்தது. இச்சமரினைத் தொடர்ந்து சத்ஜெய, ஜெயசிக்குறுய் சமர்களில் ஏற்பட்ட அனுபவங்களின் விளைவான சிறப்புத் தேர்ச்சி எம் இராணுவ மருத்துவர்களின் செயற்பாட்டில் வெளிப்பட்டது. இது எம் போரிடும் ஆற்றலின் பரிணாம வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது. உதாரணமாக வேவுப்புலிகளுடன் இராணுவ மருத்துவர்களும் நகர ஆரம்பித்தனர். பல நாட்களாக எதிரியின் பிரதேசத்தினுள் தங்கிநின்று வேவுஎடுத்தல், சிறு - சிறு அதிர்ச்சியூட்டும் பதுங்கித் தாக்குதல்கள் செய்தல் இராணுவப் பொறுப்பதிகாரிகளைத் தேர்ந்து கொல்லுதல் போன்ற உப சமர்ச் செயற்பாடுகளின்போது பல போராளிகள் காயமடைவர் இவர்களை உடனடியாக எமது கட்டுப்பாட்டுப்பிரதேசத்திற்கு கொண்டு வருவதென்பது முயற்கொம்பாகும். அவர்களின் உயிரைத் தக்கவைக்க வேண்டுமாயின் எதிரியின் தளங்களினுள் வைத்தே சிகிச்சைகள் மேற்கொள்ளல் வேண்டும். மேற்படி போராளிகளுக்கு வன மரங்களின் மறைவில் பாதுகாப்பின்மையிலும் பாதுகாப்பை உணர்த்துதல் வேண்டும். இப்பணிக்காக சிறு சத்திரசிகிச்சைக் கூடமொன்றையே தம் தோள்களில் சுமந்தவண்ணம் காடுகளில் திரிவர் எம் இராணுவ மருத்துவர்கள். இவ்வாறான பணியில் ஈடுபட்டிருந்த வேளை 10.11.97 அன்று மேஜர் சந்திரன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

சமரும் மருத்துவமும் எனக் கருத்துக்களைப் பதிக்கையில் எம் மக்களின் மகத்தான பங்களிப்பைக் குறிப்பிடல் அவசியமாகின்றது. சமர்கள் விரிவடைந்த போதிலெல்லாம் இவர்கள் கால்மறிந்து, தேவையறிந்து செய்த உதவிகள் ஞாலமறிந்தவை. சொற்களினால் ஏற்படுத்தப்படும் விரிப்பு வரையறையைத் தாண்டியவை. பொருளாதாரத் தடை, மருந்துத்தடை, எனப்பல தடைகளின் பாதிப்பைத் தாண்டி தம் போராளிகளுக்காக இரத்ததானம் செய்தனர். மேலும் பாதுகாப்புக் காரணங்களுக்காகக் காயமடைந்தவர்களை விரைவாக



இடம்மாற்ற உதவுதல், அறுசுவை உணவுகளைப் பதமறிந்து செய்துதருதல், இரகசியப்பாதுகாப்பிற்கு ஒத்துழைத்தல், சொந்த பந்தங்களைத் துறந்தவர்கள் விழுப்புண் வேதனையில் துடிக்கையில் தாதியாய்ப் பராமரித்து, தயாய் பாசமழை பொழிந்து அவர்தம் வேதனையைக் குறைக்க உதிவியமை எனப் பட்டியல் விரிக்கலாம். இத்தனைக்கும் மேலாய் இவர் தம் சொந்தப் பாதுகாப்பை கவனத்திற் கொள்ளாமை எமை மெய்சிலிர்க்கவைத்தது. வாகனச் சாரதிகளாக வந்தவர்கள் எறிகணை மழையிலும், வான் தாக்குதலுக்கிடையேயும் தம் வாகனங்களை லாவகமாகச் செலுத்தியமை எமக்கு இன்ப அதிர்ச்சியைக் கொடுத்தது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிலர் தங்கள் உயிரை சமர்த் தேவைக்கு அர்ப்பணித்தமையும் குறிப்பிடத்தக்கது.

10.06.98 காலை சுதந்திரபுர கிராமம் வழமைபோலவே சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. திடீரென வான்பரப்பை ஆக்கிரமித்த கிபீர் குண்டு வீச்சு விமானங்கள் மக்கள் குடிமனைகளை துவம்சம் செய்கின்றன. ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஆட்டிலெறிகளும் துணையாகச் சேர்ந்து

(தொடர்ச்சி 15ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விரிவடையும் மரபுப்போர்

வன்னியில் நடைபெறும் மரபுப்போரை சிங்களப் படைகள் விரிவுபடுத்தி வருகின்றன.

இதற்கு அனுசரணையாக இவ்வருட இறுதியில் நடாத்தப்படும் என்று கூறப்பட்ட சிறீலங்காவின் ஜனாதிபதித் தேர்தலை அடுத்தவருட இறுதிப்பகுதிவரை அரசாங்கம் பிற்போட விரும்புவதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

போர்மூலம் தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியாது என்ற யதார்த்தத்தையும் களநிலமையையும் - உலக சமூகமும் அம்மையாரின் அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்டிய பின்பும், அவர்கள் போர்ப்பாதையைக் கைவிடத் தயாராக இல்லை.

அமைதியை நிலவச்செய்வேன் என்று சூழுரைத்த அம்மையார் கடந்த ஐந்து வருடங்களாக இரத்தம் சிந்தும் போரைத் தலைமையேற்று நடாத்துகிறார்.

தமிழரின் தேசிய எழுச்சியை ஒடுக்கமுனையும் போரை, சிங்களமக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டாலும்; போரின் விளைவுகளால் அவர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகின்றனர்.

வெகுதொலைவில் போர்நடக்க தமது ஊரும் நகரமும் அபிவிருத்திப்பாதையில் வீறு நடைபோடும் என்றும் தமது வாழ்க்கைத்தரம் உயரும் என்றும் கற்பனை செய்த சிங்கள மக்கள் ஏமாந்துபோயினர். போரும் அதன் கொடூரவிளைவுகளும் அவர்களது அன்றாட வாழ்க்கையிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவருகின்றன.

இதனால் தமிழர் நிலங்களை போர்மூலம் கைப்பற்றி அந்தச் செய்தியை தனது அரசாங்கத்தின் ஆட்சியில் வெற்றியாகக் காட்டும் சந்திரிகா அரசாங்கத்தின் அரசியல் பிரச்சாரம் சிங்கள மக்களிடம் அவ்வளவாக எடுபடவில்லை. கடந்த சில மாதங்களுக்குமுன் நடந்து முடிந்துள்ள சிறீலங்காவின் ஐந்து மாகாண சபைகளுக்குமான தேர்தல் முடிவுகள் இதை துலாம்பரமாகக் காட்டியுள்ளன.

எனினும், சிங்கள மக்களின் அதிருப்திச் சைகையை சந்திரிகா அமையார் கருத்திலெடுக்கவில்லை.

மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளித்தல் என்ற ஜனநாயகக் கடமையை புறந்தள்ளிவிட்டு, பேரினவாத

Liberation Tigers Of TAMIL EELAM

புலிகளின் குரல்

சக்திகளின் இராணுவ அபிலாசைகளை நிறைவேற்றுவது என்ற வெறித்தனமான ஆக்கிரமிப்புக் கொள்கையை அம்மையார் தேர்வுசெய்து அமுல்ப்படுத்துகின்றார்.

முடிந்தால் வன்னிப்பெரும்நிலப்பரப்பை முழுமையாக ஆக்கிரமித்துவிடுவது, முடியாவிட்டால் குடாநாட்டிற்கு ஒரு இராணுவப் பாதையையாவது அமைத்துவிடுவது என்பது சந்திரிகா அரசாங்கத்தின் தற்போதைய இராணுவத்திட்டமாக உள்ளது.

ஜயசிக்குறுய் இராணுவப்பாதை சாத்தியமற்றது என்று அனுபவவாயிலாகக் கண்டு உணர்ந்தபின்னர், இப்போது ரணகோச இராணுவப்பாதையை அமைக்க சிங்களப்படைகள் முயற்சிக்கின்றன.

ரணகோச பயணமும் சாத்தியமற்றது என்ற இராணுவச் சூழல் உருவாகும்போது வேறு ஒரு கவர்ச்சிப் பெயரில் வேறு ஒரு இராணுவப்படையெடுப்பை ஆரம்பித்து தனதுஆக்கிரமிப்புக் கொள்கையை விடாது தொடரவேண்டும் என்பதில் சந்திரிகா அரசாங்கம் உறுதியாக உள்ளது.

அரசபடைகளின் இராணுவப்பாதை அமைப்பு முயற்சி குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல. இந்தப் பாதை அமைப்பில் சிங்களப் படைகளின் ஒட்டுமொத்த இராணுவ நலனும் தங்கியுள்ளது. பாதை அமைப்பு முயற்சியில் அரசபடைகள் வெற்றிபெற்றால் அந்த நிலத்தை புறப்படுதளமாகப் (LAUNCH PAD) பயன்படுத்தி வன்னி நிலப்பரப்பினுள் குறுக்கும் நெடுக்குமாக படையெடுப்புக்களை நடாத்தி பெருநிலப்பரப்பை இராணுவ ஆதிக்கத்திற்குள் கொண்டுவரும் இராணுவக் கனவுடன் சிங்களப்படைத்தலைமை உள்ளது.

உயர்வடிவில் கடந்த - மூன்று நான்கு ஆண்டுகளாக வன்னியில் நடைபெறும் மரபு வழிப்போர் புலிகளின் போர் ஆற்றலைச் சிதைத்து வருவதாக சிங்களத் தரப்பு கணிப்பிட்டுள்ளது. ஆனால் 'கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட' கதையாக தமிழர் நிலங்களை ஆக்கிரமிக்க, ஆக்கிரமிக்க தமிழர் படையின் எழுச்சி அதிகரித்து வருவதை ஏற்க சிங்களம் விரும்பவில்லை. களத்தில் சிங்களப்படைக்கு முகம் கொடுக்கமுனையும் மக்களின் மனப்போக்கு அண்மைய நாட்களிலிருந்து அதிகரித்து வருகின்றது. இது போராட்டத்திற்கு உத்வேகம் கொடுத்தபடி உள்ளது.

சவாலுக்கு முகம்கொடுத்து - போராடி வாழ்வது என்பது இயற்கையின் நியதி. இந்த விதிக்கு இப்பூமியிலுள்ள எதுவுமே விதிவிலக்கல்ல. ஈழத்தமிழினமும் இத்தகையதொரு சவாலுக்கு முகங்கொடுத்தபடி உள்ளது. இந்த இராணுவச்சவாலை முறியடித்து - வரலாற்றுக் கடமைபுரிய எமது மக்கள் ஒட்டுமொத்தமாகத் தயாராகவேண்டும். இந்த மண்ணில் புதியதொரு சரித்திரம் படைக்கவேண்டும். ஈழத்தமிழரின் தாயகம் தமிழரின் தேசமாக மலரவேண்டும்.

# இனவாத ஓவியரின் 'கருத்துமாற்றம்'

கடந்த மாவீரர் நாளன்று புலிகள் இயக்கத்தின் வானூர்தி ஒன்று முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லம் மீது பறந்து - கல்லறைகளுக்கு மலர் தூவி வீரவணக்கம் செலுத்தியிருந்தது. பெருந்தொகையான மக்களின் முன்னிலையில் நடைபெற்ற இந்த பலவளர்ச்சியின் வெளிப்பாட்டை கண்ணாரக்கண்ட எமது மக்கள் புளகாங்கிதம் அடைந்தனர். இந்த வரலாற்றுச் செய்தியை புலிகளின் குரல் வானொலியும் - ஈழநாதம் நாளிதழும் வெளியிட்டிருந்தன. இதைத் தொடர்ந்துவந்த சில நாட்களில் (டிச.06.1998) கொழும்பில் வெளியான ஐலண்ட் ஆங்கில நாளிதழ் இங்கு மறுபிரசுரமாகியுள்ள காட்டூனை பிரசுரித்திருந்தது.


ஐலண்டின் நீண்டகாலக் காட்டூன் வரைஞரான விஜயசோம என்பவரல் இது வரையப்பட்டிருந்தது. இவர் ஒரு தீவிர சிங்களப் பேரினவாதி. இவரின் காட்டூன்கள் அவரது இனவாத சிந்தனைகளை அப்பட்டமாகக் காட்டிநிற்கின்றன. தமிழரின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையிலும் - போர் தொடர்பாக சிங்கள மக்களுக்கு உற்சாகமூட்டி நம்பிக்கை கொடுப்பதும் இவரது காட்டூன்களின் ஒரு பணியாகும்.

புலிகள் இயக்கத்தை உருவகப்படுத்த (படத்தில் உள்ளதுபோல) ஒரு புலியை இவர் குறியீடாக வரைவார். அந்தப் புலியை தமிழ்ப்புலி என்று காட்ட அதன் நெற்றியில் பொட்டுவைப்பார். இந்தப் புலியை எப்போதுமே காயம்பட்ட புலியாகவே வரைவார். தலையில் பிளாஸ்ரர் போட்டபடி அல்லது ஒரு கையில் காயக் கட்டுப் போட்டபடி மறுகையால் துப்பாக்கி ஒன்றை தூக்கியபடி அல்லது காலில் பத்துக்கட்டி ஒரு ஊன்று கோலை - சில வேளைகளில் துவக்கே ஊன்றுகோலாக புலி வைத்திருப்பது போல வரைவார்.

இந்தக் காட்டூன்களின் மூலம் பல்வேறு வகையான இராணுவ - அரசியல் தந்திரோபாயக் கருத்துக்களை ஐலண்டின் வாசகர்களுக்கு கொடுப்பார். இவரது காட்டூன்கள் புலியை (இயக்கத்தை) ஒருபோதுமே நம்பக்கூடாது என்றும், புலி என்ன சொன்னாலும் அது ஏமாற்றுத்தந்திரம் நிறைந்தது என்றும் போரைத் தொடர்ந்து நடாத்தி பலவீனப்பட்டுக் கொண்டு போகும் புலியை முற்று முழுதாக அழிக்க வேண்டும் என்றும் போதிக்கும். புலிகள் இயக்கம் சமாதானம் பற்றிப்பேசினால் அதைப் பலவீனத்தின் வெளிப்பாடாக. விஜய சோமாவின் காட்டூன் புலப்படுத்தும்.

படுகாயம்பட்டு பங்கருக்குள் வீழ்ந்து கிடக்கும் புலி படுத்திருந்தபடி பதுங்கு குழிக்கு மேலால் ஒரு கிழிந்த வெள்ளைக் கொடியை தூக்கிக்காட்டுவதுபோல காட்டூன் வரைவார். அதாவது அழிவிலிருந்து தப்புவற்காக புலி சமாதான சமிக்ஞையை ஒரு தந்திரமாக பயன் படுத்துகின்றது என்பது இவரின் முடிந்தமுடிபு. சில சந்தர்ப்பத்தில் ஒரு குகைக்குள் ஒளித்திருந்தபடி தனது உருவத்தை வெளியில் காட்டாதபுலி, அதன் வாலையும் வாலில் கட்டப்பட்டுள்ள வெள்ளைக் கொடியையும் மட்டுமே காட்டியபடியிருக்கும் காட்டூனையும் வரைவார். சமாதானம் என்பது புலி செய்யும் வெறும் பாசாங்கு என்று காட்டவே இப்படி வரைவார்.

கடந்த மாவீரர்நாள் செய்தியில் தலைவர் அவர்கள் ஆக்கபூர்வமான சமாதானப் பேச்சிற்கான அழைப்பொன்றை தெட்டத் தெளிவாக விடுத்திருந்தார். அன்றுதான் புலிகளின் வானூர்தி ஒன்று பகிரங்கமாக வானில் தோன்றியது. இந்தச் செய்தி சிங்களவர்களை திகைப்பில் ஆழ்த்தியது. இனவாத காட்டூனிஸ்ற்றான விஜயசோமவையும் அந்தச் செய்தி பாதித்துள்ளது. போர் தொடர்பாக சிங்கள வரை உற்சாகப்படுத்தும் தனது வழமையான பாணியைக் கைவிட்டுவிட்டு சிங்களவரை மிரட்டுவதுபோல ஒரு காட்டூனை வரைந்திருந்தார். அதுதான் இங்கே பிரசுரமாகியுள்ளது.




முப்படைகளையும் கொண்ட பலம் மிக்க ஒரு மரபுப்படையாக புலிகள் இயக்கம் வளர்ந்துவிட்டது என்பதை காட்டூன் காட்டுகிறது. கடலில் புலிக்கொடி தாங்கிய கடற்புலிப் படகுகள் தங்கு தடையின்றி விரைவது போலவும்; மேலே பறக்கின்ற வானூர்தி (புலிகளின் வான்படை) வரிப்புலிக் கோடுகளுடன் தடுப்பாரின்றிப் பறப்பது போலவும்; பலமான தரைப் படையைக் காட்ட பாரிய பீரங்கிக்குழல் வாயும் இந்தக் காட்டூனில் வரையப்பட்டுள்ளன.

பீரங்கிக்குழல் மீது புலி கம்பீரமாக உட்கார்ந்திருக்கிறது. வழமை போல புலியின் உடலில் காயத்தழும்புகள் இல்லை. வாலில் வெள்ளைக்கொடி ஒய்யாரமாகாப் பறக்கின்றது. மேலிருக்கின்ற புலி சொல்கின்றது "NOW I AM READY FOR TALKS" (இப்போது நான் பேச்சு வார்த்தைக்கு தயாராகவுள்ளேன்)

புலிகள் பலமான நிலையில் இருந்தபடி பேசவருகின்றனர் என காட்டூன் வரைஞர் தனது கைவண்ணத்தால் சொல்லியுள்ளார். இந்தக் காட்டூன் சிங்களமக்களுக்கு போர்க்கள யதார்த்தத்தை புகட்டியிருக்கலாம். அத்துடன் அவர்களை மிரட்டியும்இருக்கலாம்.

ஆனால், இந்த காட்டூனிஸ்ற் மீண்டும் தனது இனவாத சித்தாந்தத்தை பரப்புரை செய்யும் காட்டூன்களை வரையமாட்டார் என்று சொல்லமுடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வெல்வோமெனச் சென்று

சகல ஆயத்தங்களோடும் தயாராவிட்ட ஒரு போர்ப்பயணத்திற்கு இறுதிக்கணங்கள் அவை. கூட்டங்கூட்டமாக கூடிநின்று ஆடியும், பாடியும், பேசிக்களித்துக் கொண்டும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள் பேராளிகள். ஒரு திசையிலிருந்து பல குரல்கள் ராகத்தோடு எழுகின்றன.

*"புலிகளின் தாகம் தமிழீழத்*
*தாயகம் என்றே நீ கூறு*
*வேங்கைகள் ஆனவர் நாங்கள்*
*எந்த வேளையும் சாகலாம்*
*போங்கள்"*

என்று ஒலித்த அந்தக் குரல்களையும் மீறி,

*"வேங்கைகள் ஆனவர் நாங்கள்*
*எந்த வேளையும் வெல்லுவோம்*
*போங்கள்"*

என ஓங்கி ஒலித்தது ஒரு குரல். அந்த இனிமையானதும் உறுதியான, நம்பிக்கையோடு எல்லோரையும் மீண்டும் சேர்ந்து பாடவைத்ததுமான குரலுக்குரியவள்தான் லெப். கேணல் ஞானி.

தென்தமிழீழத்தில் சிறீலங்கா அரச படைகளினதும் காட்டுமிராண்டித்தனமான அட்டுளியங்களும், கோரத்தாண்டவங்களும் தலைவிரித்தாடிய காலப் பகுதி அது. சுற்றிவளைப்புக்களும், இளைஞர், யுவதிகள் கைதாவதும், காணாமல் போவதும், கண்டகண்ட இடங்களில் எல்லாம் சுட்டு வீசப்படுவதும், வீதிகளில் இரத்த ஆறு பாய்வதும் வழமையான செயற்பாடுகளில் ஒன்றாகிப்போனது. இவைகளுடன் அயற் கிராமமான கொக்கட்டிச்சோலைப் படுகொலையும் சேர்ந்து அன்றைய ஒன்பதாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த சூரியாவும் (பேரின்பநாயகம் சூரியகுமாரி) இன்றைய எமது லெப். கேணல் ஞானியுமான இவளுக்கு விடுதலைப் போராட்டத்திற்கான அத்திவாரக் கற்களாக அமைந்தது.

தொண்ணூறின் (1990) இறுதிப் பகுதியில் மட்டு - 02 பயிற்சிப் பாசறையுள் நுழைந்து, பல சிரமங்களுக்கு மத்தியில் கஸ்ரப்பட்டு சூழ்நிலைக்கேற்ப தன்னை புடம்போட்டுக்கொண்டு பயிற்சியெடுத்தவளைப்பற்றி இன்றும் அவளுடன் பயிற்சியெடுத்த போராளிகள் கதை கதையாய் கூறுகின்றனர். அவர்களுள் ஒருத்தி ஞானியுடனான தன் பயிற்சிக்கால நினைவுகளை மீட்டுப்பார்க்கின்றாள்.

'அங்க கொட்டில் அடிக்கிறதில இருந்து கிணறு வெட்டுறதுவரை நாங்கள்தான். ஞானி நல்லா மாஞ்சு வேலை செய்யும். என்னவேலை செய்தாலும் நல்லாத்தான் இருக்கும். எங்கட பயிற்சி நேரம், எங்கட முகாம் இருந்த பகுதிகள் எல்லாம் இராணுவம் சுற்றி வளைச்சு, காடு காடா ஓடித் திரிஞ்சுதான் பயிற்சியெடுத்தம். ஒரு முறை எங்கட பழைய இடத்தில் இருந்து இராணுவம் பின்வாங்கிப் போய்விட்டது எண்டாப்போல, நாங்கள் திரும்பி எங்கட இடத்திற்குப் போவம் எண்டு போனம். ஒருத்தருக்கும் இருபது நாளா சாப்பாடே இல்லை. காட்டில உள்ள மிருகங்களை அடிச்சு, உரிச்சு உப்புப்போட்டு அவிச்சுத்தான் சாப்பிட்டது. எத்தனை நாளைக்குத்தான் சாப்பிடுறது. அந்தப்பகுதியிலே மிருகங்களும் இல்லாமப்போச்சு. பின்னே இருபது நாளா பட்டினிதான். எல்லோருக்குமே சரியான களை. போய் ஒரு இடத்தில் எல்லோரும் படுத்திட்டம்.

இரவோட இரவா இராணுவம் எங்களைச் சுற்றிவளைச்சிட்டுது. எங்களுக்குத் தெரியாது. விடியவும்தான் தெரிஞ்சு அந்த இடத்தில நல்ல சண்டை. அப்ப நாங்கள் புது ஆக்கள்தானே. காயக்காரரையும் தூக்கிக் கொண்டு திரும்பி நின்ற இடத்திற்கு ஓடினோம். காயக்காரரை கட்டுவதற்கோ, தூக்கிப் போடுவதற்கோ ஒரு வசதியுமே இல்லை. ஞானிதான் உடனேயும் கிடந்த உடுப்புக்களைக் கிழித்து காயத்திற்கு கட்டுகள் போட்டு, தன்ர கையாலேயே காட்டுத்தடி முறித்து சாரத்தை அதனுள் புகுத்தி காயக்காரரை தூக்கிச் செல்வதற்கு வசதியாக வழி செய்து அனுப்பினாள்.

வேறொரு சமயமும் இப்படித்தான், எமது முகாமிற்கு உணவுப் பொருட்கள் வரவேண்டுமானால் ஒரு அருவி கடந்துதான் வரவேண்டும். உணவுக்காகவே அந்த அருவியிடம் நாம் பல போராளிகளைப் பறிகொடுத்துள்ளோம். அப்படியான பெரிய அருவி அது. ஞானியுடன் நாங்கள் ஐந்து பேர் மரக்கறி எடுக்கச் சென்றோம். பத்துமைல் நடந்து அருவியைக் கடக்கவேண்டும். ஒருநாள் வேலை. அன்று முழுவதும் எங்களுக்கு காட்டுக் காய்கள்தான் சாப்பாடு. கட்டி நீந்துவதற்கு கயிறு இல்லை. எம்மைக் கரையில் விட்டு விட்டு ஞானி தனிய நீந்தி அக்கரைக்கு சென்றாள். மறுகரையிலுள்ள போராளிகளுக்கெல்லாம் பெரிய அதிசயம் எப்படி இவர் கயிறில்லாமல் நீந்தி வந்தார் என்று. 'என்னென்று இதால வந்தனீங்கள்' என்று கேட்டவர்களுக்கு 'நான் ரெயினில் வந்தனான்' சிரிக்காமலேயே பதில் சொல்லி விட்டு. அங்கே கயிறு வாங்கி மரக்கறியை கட்டிவிட்டு தானும் நீந்திவந்து எங்களுடன் சேர்ந்து கொண்டாள்.



லெப். கேணல் ஞானி

அப்படி சொல்லிக் கொண்டுபோனால் நிறையவே சொல்லலாம். அங்கே நடந்த ஒவ்வொரு செய்ற்பாட்டின் முடிவிலும் ஞானிக்கும் பங்கிருக்கும்."

என்று கூறினாள் அந்தப் போராளி.

பயிற்சிப் பாசறையில் இவளின் இந்தச் செயற்பாடுகள்தான் பயிற்சிகளின் முடிவில் ஒரு பயிற்சி ஆசிரியராக இவளை இனங்காட்டியதுபோலும். பயிற்சி முடிந்ததும் பயிற்சி ஆசிரியராகச் செயல்பட்ட இவள், தான் சண்டைக்குப் போகவேண்டும் என்று பொறுப்பாளருடன் சண்டையிட்டு வெற்றியும் பெற்றாள்.

இவளின் முதற் சண்டை அருந்தலாவை சிங்களப் பகுதியில் நடந்த சண்டை. ரோந்துவரும் இராணுவத்தை தாக்கவேண்டும். எல்லோரும் நிலையெடுத்திருந்தனர். நேரம் காலை 10.45 மணி. பதினொன்று, பன்னிரெண்டு, பன்னிரெண்டரை என நேரம் ஓடிக்கொண்டிருந்ததே தவிர, இராணுவம் வருவதாகக் காணவில்லை. என்னடா இவங்களை காணவில்லை என்று கூறிய ஞானி தனது நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு செல்லவென பிறணைத்தூக்கித் தோளில் அடித்துக் கொண்டு நடந்தவேளை திடீரென அதே இடத்தில் நிலைஎடுத்தாள். முன்னால் பார்த்தாள் இராணுவம் வந்து கொண்டிருந்தது. ஞானியின் முதல்சண்டையை ஞானியே தொடக்கிவைத்தாள். நல்ல உக்கிரச் சண்டை. இவளின் முன்னாலேயே நான்கு இராணுவத்தினரின் உடல்கள் வீழ்ந்து கிடந்தன. முதல் சண்டையே வெற்றிகரமாக முடிந்ததையிட்டு ஞானிக்கு மனதில் அடங்காத பெருமை.

கொஞ்சம்கூட ஞானி அந்த இடத்தில் அலட்சியமாக இருந்திருந்தாலும் சண்டை தோல்வியில் முடிந்திருக்கும். தானாகவே முடிவெடுத்து செயல்பட்டதால்தான் எமக்கு அது வெற்றியைப் பெற்றுத்தந்தது. இதில் ஞானியின் பிறணுக்கு சின்னக்காயம். இவள் மயிரிழையில்தான் தப்பியிருந்தாள்.

அதன் பின்னர் இவளுக்கு சண்டை யோகம்தான். எங்கு போனாலும் ஒரே பதுங்கித் தாக்குதல்கள்.

அடுத்தது பள்ளித்திடல் மினிமுகாம் மீதான தாக்குதல் இதுவும் ஒரு மக்கள் குடியிருப்போடு சேர்ந்த மினிமுகாம். சண்டை ஆரம்பமாகிவிட்டது ஞானியின் மறுபக்கத்துக்கு பிறண் தேவையாக இருந்தது. அழைப்புக் கிடைத்ததும் விரைந்தோடிய ஞானியின் முன்னால் வீரிட்டு அழுதபடியிருந்தது சிறு குழந்தை ஒன்று. வாரியணைத்து குழந்தையை ஒரு கையிலும், பிறணை மறுகையிலும் பிடித்துக் கொண்டுவந்து அந்தக் குழந்தையை காவும் குழுமூலம் பின்னால் அனுப்பிவைத்து பெற்றோரிடம் குழந்தையை ஒப்படைக்கக் கூறி விட்டுத்தான் தொடர்ந்து சண்டையிட்டாள். இச் சண்டையிலும் இராணுவத்தின் பல உடல்கள் கைப்பற்றப்பட்டு, கொண்டுவரமுடியாத காரணத்தால் தகனம் செய்துவிட்டு வந்தனர். ஞானி செல்லும் சண்டைகளில் எல்லாம் ஒரு அதிஷ்ரம், எதிரியின் உடல்கள் எடுக்காமல் விடமாட்டார்கள்.

அடுத்ததாக சிங்கபுரவில் ரோந்து அணி மீதான தாக்குதல். வெலிகந்தையில் கொழும்பு வீதியில் நடந்த பதுங்கித்தாக்குதல். கள்ளிச்சை - வடமுனையில் நடந்த தாக்குதல் எனக்கூறிக் கொண்டே போகலாம்.

கள்ளிச்சை வடமுனைத் தாக்குதல்; இது மட்டக்களப்பில் முதல் பெண் போராளி களத்தில் வீரச் சாவடைந்த தாக்குதல். ஞானியும், நிலாவும் பக்கத்து பக்கத்து நிலையில் நின்று சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இந்தச் சண்டையணிக்குத் தலைமை தாங்கிச் சென்ற நிலா இச் சண்டையில் வீரச்சாவடைய, அவரின் வோக்கியை எடுத்து மற்றவர்களுக்கு நிலைமையை அறிவித்து தொடர்ந்தும் சண்டையிட்டாள். சண்டைமுடிந்து திரும்பும் போது அவளின் கையில் தனது பிறணும், தோளில் நிலாவின் உடலும் சுமந்துவந்தாள்.

தொடர்ச்சியாக சண்டைகளும், பதுங்கித் தாக்குதல்களும் என்று பயிற்சி எடுத்த காலம் முதல் தொண்ணூற்றி மூன்று (1993) வரையும் இருபது சண்டைகளுக்கு மேல் ஞானி சென்றுவந்திருந்தாள்.

இந்தக் காலப் பகுதியில்தான் தேசியத்தலைவர் அவர்களின் பணிப்பின் பேரில் தென் தமிழீழத்தில் இருந்து பல அணிகள் வடதமிழீழம் நோக்கி அழைக்கப்பட்டன. அதில் பெண்கள் படையணியும் அடங்கும். அதில் ஞானியும் தெரிவு செய்யப்பட்டாள். புறப்படும் வரை அவளின் கால் நிலத்தில் நிலையாக நிற்கவில்லை.

நாங்கள் யாழ்ப்பாணம் போகப்போகிறோம். அண்ணையைப் பார்க்கப்போறம். அண்ணைக்கு முன்னாலும் நிறையச் சண்டைகள் பிடிச்சுக் காட்டுவம் என்று துள்ளித்திரிந்தாள்.

பயணநாளும் ஆரம்பமானது. பெண் போராளிகள் வண்டிமூலமும், ஆண் போராளிகள் கால்நடையாகப் போவதும் எனத் திட்டம். ஆனால் இவள் விடவில்லை. ஏன் நாங்கள் மட்டும் வண்டியில் போகவேணும். எங்களுக்கு மட்டும் நடக்கத் தெரியாதோ. நாங்களும் நடப்போம் என அடம்பிடித்து, ஆண் போராளிகளுடன் சேர்ந்து நடக்கத் தொடங்கினர். சேறுகளும், தண்ணீர்களும், அருவிகளும் தாண்டி ஏழுநாட்கள் தொடர்ந்து நடை. பதினாறு அருவிகள் நீந்திக் கடக்க வேண்டும். கடந்தனர், ஆனால் இவர்கள் கொண்டுவந்த உலர் உணவு எல்லாம் அருவியோடு போய்விட்டது. பசியோடு நடந்து திருமலையை அடைந்தனர். அங்கு உணவுப் பொருட்கள் சேகரித்து ஆற்றங்கரையோரத்தில் சமைத்துவைத்துவிட்டு, குளித்துவிட்டு வந்து பார்த்தால் சமைத்துவைத்த இடத்தில் சாப்பாட்டுப் பாத்திரங்கள்கூட இல்லை எல்லாவற்றையும் ஆறு அள்ளிக் கொண்டு போய்விட்டது. எல்லோருக்கும் பெருத்த ஏமாற்றம். அங்கு நின்ற போராளிகளின் தயவால் சிறிது வயிறுக்களை நிரப்பிக்கொண்டு மீண்டும் பயணத்தைத் தொடர்ந்து பன்னிரண்டாம் நாள் வடதமிழீழத்தில் கால் பதித்தது ஞானியுடனான படையணிகள்.

அங்கிருந்து வந்த பெண்கள்அணி இங்கே செயல்பட்டுக் கொண்டிருந்த பெண்கள் படையணியுடன் இணைக்கப்பட்டது. பரந்துபட்ட சிந்தனையையும், தமிழீழம் எங்கள் நாடு. நாம் ஒரு தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட கிளைகள் எமது உழைப்பு, இந்த நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும் தேவை என்பவற்றை தெளிவாக உணர்ந்து கொண்ட ஞானியால் இங்கேயே நீண்டகாலங்களுக்கு நின்று செயற்பட முடிந்தது. தனது ஆளுமையாலும், அயராத கடுமையான உழைப்பாலும், முயற்சியாலும், மாலதி படையணியிலும் நமக்கென ஒரு இடத்

www.tamilarangam.net



# வென்றவள்

தைப் பிடித்துக் கொண்டாள்.

இங்கு இவளது முதல்களம், ஒப்பரேசன் தவளை இதில் காலில் விழுப்புண்ணேந்தினாள். அதன்பின் புலிப்பாச்சல், சூரியக்கதிர், ஓயாதஅலைகள் - 01, என பல களங்களில் இவள் பதிவானாள்.


சூரியக்கதிர் -01 நடவடிக்கை புன்னாலைக்கட்டுவன் பகுதியூடாக எதிர்ப்படைகள் தமது வேகமான ஆக்கிரமிப்புக்களை மேற்கொண்டு வந்துகொண்டிருந்தார்கள். எமது அணிகளை பின்னால் நகர்த்தி நிலைப்படுத்தினால்தான் எம்தரப்பு இழப்புக்களை கொஞ்சமேனும் குறைக்கலாம். நகர்த்துவதற்கான அவகாசமோ மிகமிகக் குறைவு. அந்தளவுக்கு எதிரிப்படைகளின் நகர்வு வேகமாக இருந்தது. அந்த இடத்தில் ஞானியும் அவளின் 50 கலிபரும்தான் எமக்குக் கைகொடுத்தது. நாம் பாதுகாப்பாக நிலை எடுக்கும்வரைக்கும் காப்புச்சூடு கொடுத்தது. குறுகிய நேரத்திற்கு எதிரிகளின் நகர்வைத் தடுத்து தாக்குதல் தொடுத்தாள்.

ஓயாதஅலைகள் - 01, சமருக்குச் சென்று வந்தவள் தென்தமிழீழம் சென்று தன் போராளித் தங்கையையும் அழைத்துக் கொண்டு விடுமுறையில் வீட்டுக்குச் சென்று வந்தவள். விடுமுறையில் சென்று திரும்பிய அந்த மூன்று மாதங்களிலும்கூட அங்கே இரண்டு பதுங்கித் தாக்குதல்களில் பங்குபற்றி அங்கேயே புதிதாக பயிற்சி முடித்த போராளிகளுடன் மீண்டும் வந்து சேர்ந்தாள். இவளது திறமைகளையும், செயற்பாடுகளையும் கண்ட பொறுப்பாளர்களும், தளபதிகளும் இவள் அழைத்துவந்த பிள்ளைகளையே இவளிடம் ஒப்படைத்து ஜெயசிக்குறுய் களத்திற்கு அனுப்பினர். பல வழிகளில் அன்பரசி படையணியின் வளர்ச்சிக்காக உழைத்து, ஜெயசிக்குறுய்க் களத்திலும் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்து அணியொன்றுக்குப் பொறுப்பாக செயற்பட்டு, ஓயாதஅலைகள் -02 தாக்குதல் சம்பவம் வரை ஓயாதிருந்து ஓய்ந்து போன லெப். கேணல் ஞானிபற்றி அன்பரசி படையணியின் சிறப்புத் தளபதி லெப்.கேணல் நிலாவினி அவர்கள் கூறுகையில்,

“இவரைப் பற்றிக் கூறுவதானால் நான் கூறிக்கொண்டே போகலாம். இவரைக் கண்டாலே மற்றவர்களுக்கு தானாகவே ஒரு வீரம் வரும். அப்படியான ஒரு நிமிர்ந்த தோற்றமும், உறுதியும் கொண்டவர். தொண்ணூற்று ஆறாம் (1996) ஆண்டுதான் திரும்பி அன்பரசி படையணிக்கு வந்தவர்.

மட்டக்களப்பில் இருந்து இவர் புதிய போராளிகளைக் கூட்டிவரும் போது கடவான வீதி என்று ஒரு வீதி அது கடந்து தான் வரவேண்டும். வரும்போது இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கத் தொடங்கிவிட்டனர். அப்போ அதில நல்ல சண்டை. அதில் திறமையாச் செயல்பட்டு ஒரு போராளிகள்கூட விடுபடாமல், காயப்படாமல், வீரச்சாவடையாமல் கூட்டிவந்தார். இவர்கள் வரும்போது நிறையவே கஸ்ரங்கள், புதிய போராளிகள், தண்ணீர் இல்லை, சாப்பாடு இல்லை. ஏழு நாட்கள் தொடர்ந்து நடை. இடைஇடையில் பதுங்கித் தாக்குதல்களுக்கும் முகங்கொடுத்து பன்னிரண்டாம் நாள் வந்துசேர்ந்தனர்.

அவர் கூட்டிவந்த அந்த அணியையே அவரிடம் கொடுத்து, இந்த அணி உங்களுக்குரியது என்று கூறிய மறுவினாடியே நாங்கள் கூறாமலே அணிக்குரிய வேலைகளைத் தொடங்கிவிட்டார். அணியிலுள்ள பொறுப்பாளர்களுடன் கதைத்து, மேலதிக பயிற்சிகளுக்கு ஒழுங்குசெய்து, தானே நேரே நின்று சூட்டுப் பயிற்சி எல்லாம் கொடுத்து



இரணைமடுப் பகுதியில் காவலரண் அமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அவர்கள் வந்த மூன்றாம் நாளே அவர்களுக்குச் சண்டைகிடைத்தது. நல்ல மழை எல்லா இடமுமே தண்ணீரும் சேறும், காப்பரண்களும் எதுவுமில்லை. அதில் நின்று சண்டையிட்டு, இரண்டு ஏ.கே.எல்.எம்.ஜி. எடுத்தனர். இதில் ஞானிக்கு காலில் காயம். அவர் அப்படியேதான் நின்று சண்டைபிடித்தவர். நான் நேரே போய்த்தான் அவரை மருத்துவமனைக்கு அனுப்பியது. அங்கேகூட சும்மா இருக்கமாட்டார். நான் போகும் போதெல்லாம் தன் போராளிகளைப் பற்றித்தான் கேட்பார். காயம் மாறும் முன்னே அவர் சண்டைக்கு வந்துவிட்டார். அவரிடம் எந்த அலட்சியப் போக்கையுமே காணமுடியாது.

அதில் இருந்து மாங்குளம் மூன்று முறிப்பு பகுதிக்கு சென்ற அணி பல துன்பங்களுக்கு முகம் கொடுக்கவேண்டியிருந்தது. அதேபோன்றுதான் ஒலுமடுப் பகுதியிலும். இந்த கஸ்ரங்களின் மத்தியிலும் போராளிகளின் மனம் சோராது வழிநடத்திய பெருமை ஞானிக்குரியதே.

அவரிடம் ஒருவேலையைக் கொடுத்தால் நான் திரும்பிப்போய்ப் பார்க்க வேண்டிய அவசியமே இராது. அந்த வேலை சரியாகத்தான் செய்து முடிக்கப்பட்டிருக்கும். அதனால் அவரின் அணியென்றால் எல்லோருக்குமே விருப்பம். அப்படி மென்மையான, ஆளுமையான போராளி.

ஒரு நாள் நான் காவலரண்கள் பார்த்துக்கொண்டு வரும்போது, தோளில் கட்டையுடன் வந்தார். முன்னால் இரண்டு பிள்ளைகள் பின்னால் ஞானி. ஏனென்றால் கட்டை தூக்கிறதில கஸ்ரம் தனக்கும் தெரிய வேண்டுமாம்.

பொதுவாகக் கூறப்போனால் இவர் தாக்குதலுக்கு ஒரு திறமையான தளபதி. இவருடைய இந்தத் திறமைகள்தான் இவரை அன்பரசி படையணியின் மூன்றாவது தளபதியாக உயர்த்தியது. இவர் பொறுப்பெடுத்தது ஆறுமாதங்கள்தான் அந்த ஆறுமாதத்துள்ளும் படையணிக்குள் பல பொறுப்பாளர்களை எமக்கு இனங்காட்டினார். இன்னும் இருந்திருந்தால் நிறையவே செய்திருப்பார். பல பேரை வளர்த்திருப்பார். இவரின் இழப்பு எமது படையணிக்கே பெரிய இழப்பு. ஓயாதஅலைகள் - 02 சமரில் ஒரு பகுதி வெற்றிக்குக் காரணமானவர்களுள் ஞானியும் ஒருவர். படையணியின் துணைத் தளபதியாக பொறுப்பேற்ற பின்னர் அவரின் முதல்களம் இது. இந்தக் களத்திலேயே பல வெற்றிகளுக்குக் காரணமாயிருந்த ஞானியை நாம் இழந்துவிட்டோம்” எனக் குறிப்பிட்டார் அன்பரசி படையணியின் சிறப்புத் தளபதி லெப்.கேணல் நிலாவினி அவர்கள்.

எமக்குப் பல புதிய போராளிகளையும், பொறுப்பாளர்களையும், தளபதிகளையும் புடம்போட்டு வளர்த்துத்தந்த பெருமை ஜெயசிக்குறுய் சமருக்கேயுரியது. எமது போராட்ட வளர்ச்சிக்கு பல வழிகளில் கை கொடுத்ததும், இந்தக் களம்தான். அந்த வகையில் ஞானியின் களமுனைச் செயல்பாடுகள் பற்றி ஜெயசிக்குறுய் எதிர்ச் சமர்த் தளபதியும் அன்பரசு படையணியின் ஒவ்வொரு வளர்ச்சிப் பாதைக்கும் வழிகாட்டியாக இருந்து வருபவருமான கேணல் கருணா அவர்கள் கூறுகையில்,

“ஞானியைப் பொறுத்தவரையில் அவர் சரியான ஒரு வேலைக்காரி. கஸ்ரங்களுக்குத் தாக்குப்பிடிக்கக்கூடியவர். விடுமுறையால் வந்ததும் அவரை கொம்பனிப் பொறுப்பாளராகத்தான் நியமித்தோம். பின்னர் சண்டைகளில் அவரின் திறமைகளைப் பார்த்து அன்பரசி படையணிக்குத் துணைத்தளபதியாக நியமித்தோம்.

மாங்குளம் பகுதியில் இவர்கள் நின்ற பகுதி சரியான பிரச்சினைக்குரிய பகுதி. எந்த நேரமும் சினைப்பிங்தான். அப்படி ஒரு துன்பமான கட்டத்துக்குள் தான் இவர்கள் நின்றார்கள். இரவு - பகல் நித்திரையில்லை. ஒரே சண்டைதான். ஞானியும் பிள்ளைகளுடன் தானும் சேர்ந்து கஸ்ரப்படுவார். அதனால் தான் அன்பரசி படையணிக்குள் அவரால் வேகமான வளர்ச்சி எடுக்கக்கூடியதாக இருந்தது.

இவர்களுக்கு ஓயாதஅலைகள் -02 சமருக்கு முக்கியமான வேலை கொடுக்கப்பட்டது. இரண்டு கொம்பனி நுழைய வேண்டியபாதை. அதில் ஒரு பாதையை இவர்கள் உடைத்து கொடுக்கவேண்டும். இவர்களுக்கு அது முக்கியமான வேலை. தற்செயலாக தவறுதலாக இருந்தால் இந்தச் சண்டையே பிழைத்திருக்கும். இந்தச் சண்டையில் நான்கு பாதைகள் முக்கியமானது. நான்கும் உடைத்து நான்கு அணிகள் உள்நுழைய வேண்டும். இந்த நடவடிக்கையில் முதல் பாதை பிடித்தது ஞானி ஆக்கள்தான். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பாதையை குறிப்பிட்ட நேரத்திலேயே பிடித்துவிட்டார்கள். இதில் அவரின் செயற்பாடு ஒரு வேகமான செயற்பாடாக இருந்தது.

தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளை முடித்து, உள்ளே அனுப்ப வேண்டிய அணிகளை அனுப்பிவிட்டு, பக்கத்து பாதை உடைபடாததால் அந்தப் பகுதியால் செல்லும் அணிகளையும் எடுத்து உள்ளே அனுப்பிவிட்டு, தொடர்ந்தும் செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது தான் வீரச்சாவடைந்தார். மற்றப்படி அவருக்கென கொடுக்கப்பட்ட வேலைகளை முடித்துவிட்டார். இது பாராட்டத்தக்க ஒரு விடயம்.

ஞானி உண்மையிலேயே தன்னம்பிக்கை மிகுந்த ஒரு போராளி. அவரின் தனிப்பட்ட குணாம்சங்கள் என்று கூறினால், போராளிகளுடன் நன்றாகச் சேர்ந்து போகக்கூடியவர். மகளிர் படையணியின் தனித்துவத்தையே விரும்புபவர். எதையும் நாங்கள் தனிச்சுச் செய்யவேணும். இன்னும் நிறையச் சாதித்துக் காட்டவேணும் என்றெல்லாம் எண்ணமுடையவர். ஞானியும் ஜெயசிக்குறுய் சமர் முழுவதும் நின்ற ஒரு பொறுப்பாளர். இந்தச் சமர் இவர்களுக்கு பெரிய ஒரு அனுபவம், அவர் இருந்திருந்தால் பெரிய ஒரு வளர்ச்சியை நோக்கிப் போயிருப்பார். நான் நேரடியாகக் கவனித்த சிலவிடங்களில் தங்களது காவலரண்கள் எல்லாவற்றையும் அழகாகத் தான் வைத்திருப்பார். தலைவரின் படமெல்லாம் வைத்து ஒவ்வொரு இடமும் நன்றாகத்தான் இருக்கும். கட்டளைகளை நிறைவேற்றுவதில் கூட ஒரு வேகம் இருக்கும். ஓயாதஅலைகள் - 02 இல்கூட அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையைத் திறம்படச் செய்வதற்குக் காரணம் அவரின் அர்ப்பணிப்புத் தன்மைதான்.’ என்றுகூறினார் கேணல் கருணா அவர்கள்.

லெப். கேணல் ஞானி தனது நீண்டகள வரலாற்றில் தனக்கென ஒரு இடத்தைப் பதித்துக் கொண்டவள். போராட்ட வரலாற்றின் பல வெற்றிப்பாதைகளுக்கு வழித்துணையாக நின்றவள். அன்பரசி படையணியின் வளர்ச்சிக்கு படிக்கல்லாக அமைந்த ஞானியின் வீரமும், செயல்திறனும், வளர்ச்சியும் இன்றும் அவள் வளர்த்த போராளிகளில் தெரிகின்றது. தன்னை வளர்த்த தளபதிகளும், தான்வளர்த்த போராளிகளும் மனமுருக,

“வேங்கைகள் ஆனவர்கள் நாங்கள் எந்த வேலையும் வெல்வோம் போங்கள்”

என்று பாடிச் சென்றவள். இந்த சமரில் வென்றோம். ஆனால் ஞானி வரவில்லை. அவள் லெப்.கேணல் ஞானியாய் .......

அவள் இறுதியாகப் பாடிச் சென்ற அந்த இரண்டு பாடல் வரிகளும் எல்லோரின் காதுகளுக்குள்ளும் இப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிளிநொச்சிப் புதைகுழி

## அம்பலமாகும் அரசின் முடிமறைப்புகள்

இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட கிளிநொச்சி நகரில் சிங்களப் படைகளால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்களைக் கொண்ட பெரும் மனிதப் புதைகுழி இருப்பது உறுதியாகியிருக்கிறது. கிளிநொச்சி நகர் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில், அப்பகுதியில் காணாமல் போன நூற்றித் தொண்ணூறுக்கும் மேற்பட்ட தமிழர்களே படுகொலை செய்யப்பட்டு அங்கு புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. இவர்களில் 25 பேரின் எலும்புக்கூடுகள் இதுவரை துப்பரவு செய்யப்பட்ட மலக்குழிகளில் இருந்து கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. தமது உழைப்பாளர்களைப் பறிகொடுத்து எங்காவது அவர்கள் உயிரோடு இருக்கவேண்டும் என்று பிரார்த்தித்துக்கொண்டிருந்த குடும்பங்களுக்கு கிளிநொச்சி நகரில் இருந்து கண்டெடுக்கப்பட்டிருக்கும் எலும்புக்கூடுகள் அதிர்ச்சியைக் கொடுத்தது. இந்நிலையில் ஏனைய இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களிலிருந்து வெளிவரும் புதைகுழிக் கதைகளும், யாழ்ப்பாணத்தில் இராணுவச் சிப்பாய்கள் வெளியிடும் செம்மணிக் கதைகளும் எலும்புக்கூடுகள் இன்னும் கண்டெடுக்கப்படாத குடும்பங்களிடம் போலித்தனமாக இருந்த நம்பிக்கையைக்கூட போட்டுடைத்துக் கதிகலங்க வைத்துள்ளது.

சிங்களப் பேரினவாத அரசின் நவீன அணுகுமுறை மூலம் மூடிமறைக்கப்பட்டுவரும் தமிழின அழிப்பு, செம்மணிப் புதைகுழிமூலம் சர்வதேசத்தின் முன் அம்பலப்பட்டிருக்கிறது. தமிழர் நிலங்களை ஆக்கிரமித்திருக்கும் சிங்களப்படைகள் அங்கு என்ன வேலை செய்கின்றனர் என்பதற்கு சம்பந்தப்பட்ட சிப்பாய் வெளியிடும் வாக்குமூலங்களே சான்றுகளாகிவிட்டன.

'மேலதிகாரிகளால் தினசரி அனுப்பப்படுகின்ற சடலங்களைப் புதைப்பதே எமது வேலையாக இருந்தது. அப்படி எம்மிடம் புதைக்கத்தந்த சடலங்களில் ஒன்று பாடசாலை மாணவி கிருசாந்தி குமாரசாமியினுடையதாக இருக்கலாம். அதைத்தவிர அந்தக் கொலைக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை' என்று கிருசாந்தி கொலை வழக்கில் மரணதண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட ராஜபக்ச என்ற படைவீரன் யாழ்ப்பாண ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் தனக்கும் தனது சகாக்களுக்கும் தரப்பட்ட கடமை என்ன என்பதை யாழ். நீதிமன்றத்திலே தெரிவித்திருக்கின்றான்.

இவ்வாறு ஈவிரக்கம் இன்றி எமது மக்களைக் கொன்று குவித்து, தனது திட்டமிட்ட கொடூரமான இன அழிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றிவரும் சிங்களப் பேரினவாதம், அவ்வப்போது தவிர்க்கமுடியாது வெளிவந்துவிடும் புதைகுழி விவகாரங்களை இராணுவச் சிப்பாய்களின் தனிப்பட்ட அத்துமீறல்களாகக் காட்டி விசாரணைகள் என்ற போர்வையில் அவற்றை மூடிமறைத்து விடுகிறது. இந்த வகையில் உலகின் கவனத்தை ஈர்ந்துவிட்ட கிருசாந்தி குமாரசுவாமி கொலைவழக்கில் சர்வதேச மனிதஉரிமை அமைப்புக்களின் அழுத்தங்களில் இருந்து தப்பிக்க தனது கட்டளைகளையே நிறைவேற்றிய சாதாரண சிப்பாய்கள் சிலருக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கி பேரினவாதம் போலி நாடகம் ஆடியது. இதன் மூலம் கிருசாந்தி கொலைக்கான பழியையும் தனிப்பட்ட இராணுவச் சிப்பாய்களின் அத்துமீறல்களாகக் காட்டி தான் தப்பித்துவிட எண்ணியது.

ஆனால் எங்களை மட்டும் மாட்டிவிட்டுத் தப்பிக் கொண்டார்களே என்ற ஆதங்கத்திலும், மரண பயத்திலும் மரண

**- அ.தீபன் -**

தண்டனைக் கைதிகள் பேரினவாதத்தின் படுகொலை நாடகத்தில் ஒன்றை அம்பலப்படுத்திவிட்டார்கள். இந் நிலையில் தொடர்ந்து அம்பலமாகும் தமிழர்மீதான தனது படுகொலை நடவடிக்கைகளை வெறும் இராணுவ அத்துமீறல்களாகக் காட்டி தனது திட்டமிட்ட அரச பயங்கரவாத நடவடிக்கைகளை சிங்களத்தால் மூடிமறைத்துவிட முடியுமா?

இதுவரை ஆயிரக்கணக்கானோர் காணாமல்போய்விட்ட குடாநாட்டில், இன்னமும் வெளித்தெரியாது மூடிமறைக்கப்பட்டிருக்கும் புதைகுழிகள்தான் எத்தனை? யாழ். குடா நாட்டில் மட்டும்தான் எமது மக்களுக்கு இத்தகைய அவல வாழ்வா? இராணுவத்தின் இறுக்கமான பிடிக்குள் இருக்கும் தென்தமிழீழத்தில் எத்தனையென்று எண்ணிக்கணக்கிடப்படாது பல்லாயிரம் தமிழீழ மக்கள் சிங்களத்தால் படுகொலை செய்யப்பட்டு அந்த நிலங்களுக்குள்ளேயே மூடிமறைக்கப்பட்டு விட்டார்கள்.

ஒவ்வொரு சிங்களப்படை முகாங்களுமே தமிழர்களின் புதைகுழிகளைக் கொண்டவை எனக் கருதப்படும் தென்தமிழீழத்தில், யாழ். துரையப்பா விளையாட்டரங்கப் புதைகுழி போன்று கிழக்கில் சத்துருக்கொண்டான் நாவலடி விளையாட்டுத் திடலில் மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றன. இப் புதைகுழிகளைத் தோண்ட விளையாட்டு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். என மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சிறீலங்கா பாராளுமன்றத்தில் கேட்டுக் கொண்டபோது அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் அரசினால் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட கிளிநொச்சி நகரில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல்போன தமிழ்மக்களின் எலும்புக்கூடுகள் சில வெளிவந்திருக்கின்றன. இவை நூற்றுத் தொண்ணூறிற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் காணாமற்போன கிளிநொச்சிப் பகுதியில் இருக்கக்கூடிய பெரும் புதைகுழிகளை உறுதி செய்வதாக அமைந்திருக்கின்றன.

சிங்களப் படைகள் சத்ஜய இராணுவ நடவடிக்கை மூலம் கிளிநொச்சியை ஆக்கிரமித்து அங்கு நிலைகொண்டிருந்த சுமார் இரண்டுவருட காலத்தில், சுமார் 250 வரையான தமிழ் மக்கள் அப்பகுதியில் காணாமல் போயிருந்தார்கள். இவர்களின் பெற்றோர், உறவினர்களால் செஞ்சிலுவைச்சங்கத்தின் கிளிநொச்சிக் கிளைக்குக் கொடுக்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் 234 பேர் சிங்களப்படைகளால் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இவர்களில் கண்டுபிடிக்கப்பட்ட 42 பேர்

## கிளிநொச்சிப் பகுதியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களுள் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக்கிளையில் பதிவு செய்யப்பட்ட 184 பேரின் விபரம்

| இல. | பெயர் | வயது |
|---|---|---|
| 01. | இராமையா முத்தையா | 55 |
| 02. | கந்தையா கிருஸ்ணராசா | 22 |
| 03. | ஆறுமுகம் முத்துலிங்கம் | - |
| 04. | மாணிக்கம் இரத்தினசிங்கம் | 38 |
| 05. | இராமையா தங்கையா | 45 |
| 06. | தர்மலிங்கம் புஸ்பராணி | 24 |
| 07. | பிரான்சிஸ் டானியல் | - |
| 08. | மாமுத்து அல்லப்பிச்சை | 64 |
| 09. | நாகலிங்கம் இராஜேந்திரன் | 37 |
| 10. | இராமசாமி மெய்யழகு | 25 |
| 11. | கந்தையா ரவி | 22 |
| 12. | மைக்கல் ரஞ்சன் | 23 |
| 13. | இராமசாமி நித்தியசிவன் | 28 |
| 14. | சின்னையா ஜோகேஸ்வரன் | 24 |
| 15. | இராமசாமி காந்தகுமார் | 23 |
| 16. | இராமசாமி நடராசா | - |
| 17. | தங்கவேல் தர்மராஜா | 29 |
| 18. | தங்கவேல் திருச்செல்வன் | 21 |
| 19. | இராமசாமி சுந்தரலிங்கம் | 32 |
| 20. | கந்தசாமி கணேசன் | 27 |
| 21. | செல்லையா கணேசன் | 34 |
| 22. | சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை | 30 |
| 23. | மோகன் ராஜதுரை | 43 |
| 24. | குமாரசாமித்தேவர் தேவச்சந்திரதேவர் | 49 |
| 25. | சௌந்தர் பாஸ்கரன் | 25 |
| 26. | வீரையா செல்வராஜா | 37 |
| 27. | முத்தையா தர்மலிங்கம் | 41 |
| 28. | சின்னத்துரை சபாலிங்கம் | 43 |
| 29. | டேவிட் மரியதாஸ் | 30 |
| 30. | வீரையா சிவராசா | 36 |
| 31. | இரத்தினம் சிவகுமார் | 22 |
| 32. | மகாலிங்கம் ஜெயலிங்கம் | 23 |
| 33. | மாரிமுத்து செல்வநாயகம் | 47 |
| 34. | அன்ரன் ஜோசப் நிலோஜன் | 20 |
| 35. | கதிரவேல் பாலசுப்பிரமணியம் | 14 |
| 36. | பெருமாள் செல்லத்துரை | - |
| 37. | ஆரோக்கியம் தேவசகாயம் | 39 |
| 38. | முனுசாமி நடராஜா | 49 |
| 39. | முத்து சிவலிங்கம் | 36 |
| 40. | வைத்திலிங்கம் தவராஜா | 35 |
| 41. | தங்கவேல் சத்தியமூர்த்தி | 23 |
| 42. | தங்கவேல் சந்திரகுமார் | 20 |
| 43. | அண்ணாமலை இராமச்சந்திரன் | 33 |
| 44. | கண்ணன் கரன் | 22 |
| 45. | வேல் விஜயகுமார் | 35 |
| 46. | குப்பன் சுப்பிரமணியம் | 31 |
| 47. | பிச்சைமுத்து அண்ணாமலை | 57 |
| 48. | கணபதி இராமச்சந்திரன் | 26 |
| 49. | சரவணமுத்து சற்குணராஜா | 42 |
| 50. | முருகேசு பாலேஸ்வரன் | 23 |
| 51. | வாரித்தம்பி முருகேசு | 63 |
| 52. | நல்லையா விஸ்வநாதன் | 33 |
| 53. | கறுப்பையா நாகேந்திரன் | - |
| 54. | இராமையா மோகன் | 41 |
| 55. | நாகலிங்கம் குருசாமி | 54 |
| 56. | சங்கரப்பிள்ளை அரியரத்தினம் | 50 |
| 57. | தாமோதிரம்பிள்ளை செல்வரத்தினம் | 58 |
| 58. | இராமசாமி சபாபதி | 59 |
| 59. | வீரையா நடேசு | 61 |
| 60. | நாடார் சுப்பிரமணியம் | 50 |
| 61. | வேலுப்பிள்ளை உதயகுமார் | 40 |
| 62. | கிருஸ்ணா குமார் | - |
| 63. | தங்கவேல் கதிரேசு | 18 |
| 64. | மகாலிங்கம் சுப்பையா | 61 |
| 65. | ஐயாத்துரை கணேசமூர்த்தி | 36 |
| 66. | மாரிமுத்து முருகேசு | 43 |
| 67. | செல்லத்தரை செந்தில்நாதன் | 40 |
| 68. | அன்ரனிப்பிள்ளை மரியசீலன் | 37 |
| 69. | வினாசி நவரட்ணம் | 35 |
| 70. | வினாசி நாயரட்ணம் | 40 |
| 71. | தயாளகுணம் தனேஸ்வரன் | 18 |
| 72. | நாகமுத்து கிருஸ்ணலிங்கம் | 19 |
| 73. | சுப்ரமணியம் கனகலிங்கம் | 36 |
| 74. | முருகையா குணநாயகம் | 30 |
| 75. | அப்பாத்துரை செல்வக்குமார் | 30 |
| 76. | சுந்தரம் கண்ணதாசன் | 28 |
| 77. | லட்சுமணன் லட்சுமணன் | 28 |
| 78. | மரியாம்பிள்ளை ஜோகி | 42 |
| 79. | சின்னத்துரை ரட்ணம் | 47 |
| 80. | கந்தையா சிவலிங்கம் | 40 |
| 81. | பொன்னையா முத்துக்குமார் | 39 |
| 82. | சின்னத்தம்பி பரமேஸ்வரன் | 39 |
| 83. | குப்புசாமி ராஜன் | 23 |
| 84. | எஸ்.தங்கவேல் | - |
| 85. | சிவக்கொழுந்து நாகரத்தினம் | 52 |
| 86. | நாகலிங்கம் சிறீகாந்தன் | 40 |
| 87. | செல்லையா நந்தகுமார் | 19 |
| 88. | கோபாலப்பிள்ளை பாஸ்கரன் | - |
| 89. | இரத்தினவேல் தங்கவேல் | 45 |
| 90. | இராமன் சின்னையா சிறீபாலன் | 29 |
| 91. | இடும்பன் கணேசு | 30 |
| 92. | தெய்வராஜா நிர்மலன் | - |
| 93. | கந்தையா நகுலேஸ்வரன் | 32 |
| 94. | பொன்னம்பலம் தர்மலிங்கம் | 49 |
| 95. | பரராஜசிங்கம் ரஜீவன் | 26 |
| 96. | நவரத்தினம் ராஜேஸ்வரன் | 26 |
| 97. | வேல் ரவிக்குமார் | 27 |
| 98. | சண்முகலிங்கம் இளங்கோ | 30 |
| 99. | சின்னையா யோகேஸ்வரன் | 25 |
| 100. | தங்கவேல் உமாகிருஸ்ணன் | 24 |
| 101. | சிற்றம்பலம் கணபண்டிதர் | 55 |
| 102. | சுப்பையா தேவதாஸ் | 25 |
| 103. | முருகையா ஸ்ராலின் குணநாயகம் | 31 |
| 104. | கறுப்பன் செல்வராஜா | 42 |
| 105. | அரியத்துரை துரைராஜா | 34 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தவிர்ந்த ஏனைய 192 பேர் இன்னமும் காணாமல் போனவர்களாகவே இருக்கிறார்கள். காணாமல் போனவர்களில் எட்டுப்பேர் சிங்களப்படைகளால் கொல்லப்பட்டனர் என ஏற்கனவே உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதேவேளை மீட்கப்பட்ட கிளிநொச்சி நகரில் மக்கள் குடியேறிய பகுதிகளில் துப்பரவு செய்யப்பட்ட மலக்குழிகளிலிருந்து இதுவரை 25 வரையிலான எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக பதிவாளர் திருமதி நா. செல்வராசா அவர்களுக்கு கொழும்பு பதிவாளர் நாயகத்தினால் மார்ச் 19. 1999 திகதியிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்ட சுற்றறிக்கையின்படி, காணாமல் போய் ஒருவருடம் பூர்த்தியானவர்களுக்கு மரணச்சான்றிதழ் வழங்குவதற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இவ் வேண்டுகோளுக்கு இணங்க 68 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதோடு இவர்களுக்கு மரணச்சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எஞ்சியவர்களில் பலருடைய உறவினர்கள் வன்னியில் இல்லாததாலும், இன்னமும் தங்கள் உறவுகள் உயிரோடு இருப்பார்கள் என்ற நப்பாசை காரணமாகவும் மீதிப்பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

சர்வதேசத்தையும், தமிழ் மக்களையும் ஏமாற்றும் சிங்கள அரசின் திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கை, அது விரும்புவது போலவே மௌனமாக உறங்கிவிடக் கூடியதா? ஒரு வருடமாக காணாமற்போனவர்களை இறந்தவர்களாகக் கருதும்படியான அரசின் அறிவிப்பும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் இதுவரை மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளும், கிளிநொச்சிப் பகுதியில் சிங்களம் உருவாக்கிவிட்ட மனிதப் புதைகுழியை அம்பலப்படுத்திவிட்டது. தமது உறவுகளைக் காணாது தம்மிடம் முறையிட்ட மக்களுக்கு பதில் சொல்ல முடியாது இதுவரை மௌனம் காத்த சர்வதேச அமைப்புக்கள் தமது பணியைச் செய்வதன் மூலம் எமது உறுவுகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தி, தொடர்ந்து கொண்டிருக்கும் சிங்களத்தின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு முடிவுகட்டவேண்டும் என்பது எமது மக்களின் எதிர்பார்ப்பு.

1996 ஆம் ஆண்டு முல்லைத்தீவுத் தாக்குதலின் பின் யாழ்ப்பாணம் தென்மராட்சியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போய்விட்ட 39 இளைஞர்களுள் அதிஸ்ரவசமாக உயிர்தப்பிய ஒரு இளைஞன் மேலும் இரு கொலைசெய்யப்பட்ட இளைஞர்களின் சடலங்களின் மத்தியில் மலக்குழி ஒன்றினுள் இருந்து குற்றுயிராய் மீட்கப்பட்டான். இன்னமும் உயிரோடு இருக்கும் அந்த மனித உடல், தன்னிடம் விசாரணை நடத்திய சர்வதேச மன்னிப்புச் சபையிடம் தெரிவித்தவை இங்கு நினைவு கூருவதற்கு பொருத்தமானவை.


இராணுவத்தினர் என்னை துப்பாக்கியால் அடித்து, நான் விழும்வரை தாக்கினார்கள். பின் எனது கையையும், காலையும் ஒன்றாகக் கட்டினார்கள். இதனால் சுவாசிப்பதே கஸ்ரமாக இருந்தது. அதன் பின் எனது கழுத்தில் ஒரு துணியைச் சுற்றி அதை இருபுறமும் இழுப்பதின் மூலம் எனது கழுத்தை நெரித்தார்கள். இதன் பின் துவக்கில் பொருத்தப்பட்டிருந்த கத்திமூலம் என்னை வெட்டினார்கள். ஒரு இராணுவத்தினன் எனது முதுகில் ஆறு இடங்களில் கத்தியால் குத்தினான். இதன்பின்னர் எனது கழுத்தை வெட்டினார்கள். எனது கழுத்தைச்சுற்றி துணி இருந்ததால் அது எனக்குப் பெரிய காயத்தை ஏற்படுத்தவில்லை. இதன் பின் ஒருவன் எனது தலையில் வெட்டினான். எனக்கு இது பலத்த காயத்தை ஏற்படுத்தியது. நான் நினைவிழந்தேன்.

இந்த நிலையில் எனது கைவிரலில் இருந்த மோதிரங்களைக் கழற்ற அவர்கள் முயல்வதை என்னால் உணர முடிந்தது. அது முடியாமற்போகவே எனது இரு விரல்களையும் வெட்டினார்கள். நான் மீண்டும் உணர்விழந்தேன்.

எனக்கு உணர்வு வந்தபோது நான் ஒரு மலக்கூட குழிக்குள் வீசப்பட்டிருப்பதை உணர்ந்தேன். அங்கிருந்த பூச்சிகள் எனது காயங்களைக் கடித்ததில் நான் கத்தினேன். இவ்வாறு குற்றுயிராகக் கிடந்து துடித்த அந்த மனிதனின் அவலக்குரலை, அதிஸ்ரவசமாக அப்பகுதியால் அவரைத் தேடிவந்த அவரது பெற்றோர் கேட்டதால் அவன் மலக்குழியில் இருந்து மீட்கப்பட்டான்.

இது போலவே சிங்களத்தின் இன்னும் பல கொலை முறைகளை அனுப்வித்து வெளிச்சொல்ல முடியாத நிலையில் எலும்புக்கூடுகளாக மண்ணின் ஆழத்துள்ளும், மலக்குழிகளுக்குள்ளும், கிணறுகளின் அடியிலும் இன்னும் எங்கெங்கோ எல்லாம் உறங்கும் எங்கள் உறவுகள் சொல்லமுடியாது போய்விட்ட வதையின் கதைகள் ஏராளம். முற்றுமுழுதாக இராணுவத்தால் மட்டுமே சூழப்பட்டு ஆக்கிரமிப்பு பிரதேசமாக இருந்த கிளிநொச்சி மண்ணும் இத்தகைய கொடுமைகளை அனுபவித்த நூற்றுக் கணக்கான மனிதர்களின் உணர்வுகள் சுமந்து மௌனமாகக் கிடக்கிறது. இப் பகுதிகளில் மக்கள் குடியேறுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டதும் கிளிநொச்சிப் புதைகுழியிலிருந்து இன்னும் பல எலும்புக்கூடுகள் வெளிவரப்போகின்றன. அப்போது சர்வதேசத்தின் கண்களை மறைத்து தமிழர் மீது சிங்களம் புரிந்த கோரத்தாண்டவம் உலகின் முன் அம்பலமாகத்தான் போகின்றது. அதுவரையும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கைகட்டிப் பார்த்திராது. சிங்களம் புரிந்துவரும் இனப்படுகொலை நடவடிக்கைகள் தொடர்பாக உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே இன்னமும், சிங்களத்தின் படுகொலைக் குறியிலக்குக்கு உட்பட்டிருக்கும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

கிளிநொச்சிப் பகுதியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களுள் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக்கிளையில் பதிவு செய்யப்பட்ட 184 பேரின் விபரம்.



கிளிநொச்சிப் படுகொலைகள்: மலக்குழி ஒன்றினுள் மனிதக் கூடுகள்

| இல. | பெயர் | வயது |
|---|---|---|
| 106. | வைரமுத்து பாலேஸ்வரன் | 36 |
| 107. | வைரவன் செல்வராஜா | 43 |
| 108. | சண்முகலிங்கம் பரமேஸ்வரன் | 29 |
| 109. | ரத்தினம் துரைசாமி | 59 |
| 110. | துரைசாமி தவராஜா | 22 |
| 111. | கணபதி இராமச்சந்திரன் | 22 |
| 112. | இராசையா கனகரத்தினம் | 37 |
| 113. | மார்க்கண்டு சிறீதரன் | 29 |
| 114. | வாரித்தம்பி முருகேசு | 63 |
| 115. | அருளானந்தம் சங்கரதாஸ் | 17 |
| 116. | வேல் விஜயகுமாரன் | 35 |
| 117. | கார்த்திகேசு சிறீகாந்தன் | 46 |
| 118. | இராசலிங்கம் சண்முகதாஸ் | 22 |
| 119. | செல்லத்தம்பி சுப்ரமணியம் | – |
| 120. | கறுப்பையா செல்வராஜா | – |
| 121. | க.இரத்தினசிங்கம் | – |
| 122. | செல்லத்துரை கிருஸ்ணகரன் | 27 |
| 123. | அருளானந்தன் சங்கரதாஸ் | 45 |
| 124. | ஜெகநாதன் இராஜதரன் | 24 |
| 125. | இராமசாமி பத்மநாதன் | 35 |
| 126. | வீரமலை ஆறுமுகம் | 45 |
| 127. | செல்லத்துரை கணேசமைந்தன் | 17 |
| 128. | ஜோன்பிள்ளை அரியரத்தினம் | 43 |
| 129. | இராஜரத்தினம் விஜிதரன | 22 |
| 130. | நந்தகோபாலன் ஜீவன் | 19 |
| 131. | முத்துசாமி மகேந்திரன் | 25 |
| 132. | சியாமளா செல்வராஜா | 22 |
| 133. | பூதத்தம்பி நாகராஜா | 52 |
| 134. | சின்னத்துரை வேல்முருகன் | 47 |
| 135. | வேல்முருகன் சுரேஸ்குமார் | 25 |
| 136. | சின்னராஜா சிறீஸ்கந்தராஜா | 28 |
| 137. | கந்தையா கனகராஜா | 32 |
| 138. | வேலாயுதன் யோகேஸ்வரன் | 35 |
| 139. | கந்தையா நாகேஸ்வன் | 32 |
| 140. | சின்னத்துரை சபாலிங்கம் | 41 |
| 141. | வீரையா சிவ்ராஜா | 30 |
| 142. | துரைசாமி மோகனசுந்தரம் | – |
| 143. | கமலம் முத்துமாரி | 73 |
| 144. | திருநாவுக்கரசு பரமேஜஸ்வரன் | 39 |
| 145. | செல்வராஜா மகேந்திரன் | – |
| 146. | மாரிமுத்து சதாசிவம் | – |
| 147. | காளிமுத்து புஸ்பராஜா | 16 |
| 148. | ஜெயராஜ் சிவலிங்கம் | 31 |
| 149. | மாசிலாமணி கணேஸ் | 37 |
| 150. | இராசலிங்கம் சண்முகதாஸ் | – |
| 151. | கறுப்பையா தம்பிராஜா | 51 |
| 152. | நாடர் சுப்பிரமணியம் | 48 |
| 153. | இளையதம்பி விநாயகமூர்த்தி | 32 |
| 154. | தங்கவேலாயுதம் சிறீஜெயலிங்கம் | – |
| 155. | செல்லையா நற்குணம் | 35 |
| 156. | மாணிக்கம் லோகேஸ்வரன் | 25 |
| 157. | வேலுப்பிள்ளை சுப்பையா | 55 |
| 158. | வைத்திலிங்கம் திருச்செல்வம் | 43 |
| 159. | அப்பாத்துரை செல்வக்குமார் | 30 |
| 160. | சின்னத்தம்பி சூரியஜெயபாவு | 27 |
| 161. | கனகரத்தினம் சவுந்தர்ராஜா | – |
| 162. | வீரபத்திரன் சிவமோகன் | 18 |
| 163. | குப்புசாமி சாந்தகுமார் | 28 |
| 164. | அல்பிரட் றொபேட்கெனடி | 29 |
| 165. | இராசையா கனகரத்தினம் | 35 |
| 166. | வரதராஜா ஜோகேஸ்வரன் | 17 |
| 167. | அழகன் தியாகராஜா | 27 |
| 168. | இராஜரத்தினம் கலாஜோகன் | – |
| 169. | வைரமுத்து பாலேஸ்வரன் | – |
| 170. | சுப்பிரமணியம் முருகேசு | – |
| 171. | சந்திரசேகரம் சந்திரேஸ்வரன் | 16 |
| 172. | ஜயாத்தரை ஜெகதீஸ்வரன் | 21 |
| 173. | மகாநிரஞ்சனி இரத்தினசிங்கம் | – |
| 174. | சின்னையா லவன்குமார் | 25 |
| 175. | சுப்ரமணியம் நடேசலிங்கம் | – |
| 176. | நாகரத்தினம் நித்தியானந்தன் | 23 |
| 177. | நடராசா விஜயகுமார் | 20 |
| 178. | கணபதிப்பிள்ளை சுபாஸ்குமார் | 27 |
| 179. | சிவசாமி அன்ரனி பிறேமச்சந்திரன் | 26 |
| 180. | நவரட்ணராஜா செல்வக்குமார் | 21 |
| 181. | ஆரோக்கியம் ராஜப்பன் | 35 |
| 182. | வைரவி மாணிக்கம் | 80 |
| 183. | பாலராஜா நாகேஸ்வரன் | 40 |
| 184. | குமார் புலேந்திரராஜா | 34 |

**பதிவு செய்யப்பட்டவர்களுள் இராணுவத்தால் கொலை செய்யப்பட்டதாக ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டவர்களின் விபரம்**

| | | |
|---|---|---|
| 01. | கனகலிங்கம் துரைச்செல்வம் | 36 |
| 02. | ஆண்டியப்பன் மலையாண்டி | 46 |
| 03. | வண.இனாசி அருள்பாலன் | 42 |
| 04. | பிரான்சிஸ் மிராண்டா ஜோசப் | 57 |
| 05. | ஜோசப் சுரேந்திரன் | 17 |
| 06. | முத்தையா கிருஸ்ணமூர்த்தி | – |
| 07. | சிவகுரு சண்முகசுந்தரம் | 42 |
| 08. | குப்புசாமி சந்திரகுமார் | 28 |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# 01.07.99 - 29.07.99

20.06.99 அன்று கொக்குவில் பகுதியில் சுற்றி வளைக்க முற்பட்ட இராணுவத்தினருடனான நேரடி மோதலின்போது போராளிகள் இருவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

**மேஜர் இன்பன் அல்லது கலைஅழகன்.**
தர்மலிங்கம் சுகந்தன்
யாழ்.மாவட்டம்
த.மு. திருநகர் யோகபுரம் மல்லாவி

**கப்டன் மணிவண்ணன்**
சர்வானந்தம் ராஜ்குமார்
யாழ். மாவட்டம்
த.மு. அண்ணாசிலையடி ஸ்கந்தபுரம்

23.06.99 அன்று தென்மராட்சி வரணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**கப்டன் வண்ணன் அல்லது றெஜி**
தங்கராசா அழகேந்தி
யாழ்ப்பாணம், த.மு. ஸ்கந்தபுரம்

கடந்த 26.06.99 அன்று பள்ளமடு மோதலில் வீரச்சாவடைந்த 25 போராளிகளின் விபரம்:

**மேஜர் செழியன்**
கிருஸ்ணபிள்ளை சத்தியநாதன்
யாழ். மாவட்டம், த.மு. சில்வா வீதி வட்டக்கச்சி

**மேஜர் ராஜன்**
மரியநேசன் அன்ரூமார்ட்டின்
யாழ். மாவட்டம், த.மு. சுரேஸ் குடியிருப்புத் திட்டம் கைவேலி, புதுக்குடியிருப்பு

**மேஜர் யாழிசை**
பராசசிங்கம் மங்கையற்கரசி
யாழ்.மாவட்டம், த.மு. மூன்றாம் கண்டம் கெருடாமடு முத்தையன்கட்டு

**மேஜர் தேன்மொழி-திலானி**
தில்லைநாயகம் யூரிஸ்ரா திலகம்
யாழ்.மாவட்டம், த.மு. நாலாம் வட்டாரம் புதுக்குடியிருப்பு

**மேஜர் கலைமகள்**
ராமலிங்கம் பிரித்தா
யாழ்.மாவட்டம்,
த.மு. சில்வா வீதி, வட்டக்கச்சி

**கப்டன் சுதன்**
நாதன் சண்முகவரதன்
யாழ்.மாவட்டம், த.மு. சுபாஸ் குடியிருப்பு, அண்ணா சிலையடி, அக்கரயான்

**கப்டன் பைந்தமிழினி**
நாகலிங்கம் மாலாதேவி
16ம் கட்டை, உடையார்கட்டு சுதந்திரபுரம்

**கப்டன் தமிழேந்தி**
வில்லியம் றோகான்
யாழ். மாவட்டம்

**கப்டன் ரஜனி**
கந்தையா மஞ்சுளாதேவி
யாழ். மாவட்டம், த.மு. விசுவமடு கிழக்கு, விசுவமடு

**கப்டன் செல்வரந்தன்**
ஈதிதோர் யூலியற்
மன்னார் மாவட்டம்

**லெப்.சதா**
செல்வராசா சிவமலர்
வவுனியா மாவட்டம்

**லெப்.இளங்கோவன்**
சிவராசா விக்கினேஸ்வரன்
யாழ். மாவட்டம்

**லெப்.மருதநம்பி**
கிருஸ்ணமூர்த்தி மதனரூபன்
யாழ். மாவட்டம்,
த.மு. மூன்றாம் யுனிற் யோகபுரம் மல்லாவி

**லெப். பண்டாரவன்னியன்**
நடராசா ஆறுமுகசாமி
திருமலை மாவட்டம், த.மு. தமிழர் புனர்வாழ்வுக் கழகம், நடுவப் பணியகம், உடையார்கட்டு

**லெப். புரட்சிக்காவலன்**
பாலசுப்பிரமணியம் ராஜ்கபூர்
யாழ்.மாவட்டம், த.மு. 2ம் திட்டம் காட்டு அம்மன் கோவில் அருகாமை அண்ணா சிலையடி ஸ்கந்தபுரம்

**வீரவேங்கை புரட்சி நெறியன்**
சின்னத்துரை சக்திவேல்
யாழ். மாவட்டம், த.மு. மன்னார்

**வீரவேங்கை சிறீமுகுந்தன்**
தங்கராசா ராசேந்திரன்
மட்டக்களப்பு மாவட்டம்

**வீரவேங்கை ரவிதேவன்**
யோகராசா யோகேஸ்வரன்
மட்டக்களப்பு மாவட்டம்

**வீரவேங்கை சிறிதரன்**
கந்தையா ஞானப்பிரகாசம்
மட்டக்களப்பு மாவட்டம்

**வீரவேங்கை அகப்பாலவன்**
கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி
அம்பாறை மாவட்டம்

**வீரவேங்கை அகலயன்**
கோவிந்தராசா கருணாகரன்
மட்டக்களப்பு மாவட்டம்

**வீரவேங்கை கனகசுந்தரம் -கனகராஜ்**
வேலுப்பிள்ளை விமலேஸ்வரன்
மட்டக்களப்பு மாவட்டம்

**வீரவேங்கை கதிர்நிலவன்**
கிருஸ்ணசாமி மாரியப்பன்
வவுனியா மாவட்டம், த.மு. மன்னார் மாவட்டம்

**வீரவேங்கை ஐயன்**
சூரியகாந்தி உதயசூரியன்
யாழ்.மாவட்டம்,
த.மு. மங்கை குடியிருப்பு, மல்லாவி

**வீரவேங்கை சொக்கன்**
பூவண்ணன் சாந்தன்
மன்னார் மாவட்டம்

27.06.99 அன்று வவுனியா மாவட்டத்தில் எதிர்பாராத வெடிவிபத்தின்போது போராளிஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை அன்பன் அல்லது இறைஒளியோன்**
சின்சன் துரைராசா பிலிப்ஜெயக்குமார்
தர்மபுரம் பரந்தன்

28.06.99 அன்று மணலாறுப்பகுதியில் விடுதலைப் புலிகள் நிலை மீது தாக்குதல் நடத்திய இராணுவத்தினர் மீது திருப்பித்தாக்கியதில் இராணுவத்தினர் சேதங்களுடன் பின்வாங்கி ஓடிவிட்டனர். இதன் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**2ம் லெப். தயாணி அல்லது தயாளினி**
விஸ்வலிங்கம் சுகிதா
யாழ். மாவட்டம்
த.மு. புளியடி ஒழுங்கை பல்லவராயன்கட்டு ஜெயபுரம்

28.06.99 அன்று பெரியமடுப்பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் விழும்புண் அடைந்திருந்த போராளிஒருவர் 27.07.99 அன்று வீரச்சாவடைந்துள்ளார்

**வீரவேங்கை அவர்ணா**
இராஜசிங்கம் வசந்தி
யாழ்ப்பாணம்
த.மு. புனர்வாழ்வுக்கழகம் அருகாமை மல்லாவி

29.06.99 அன்று மன்னார்ப்பகுதியில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை தமிழடியன்**
வயிரமுத்து தனசேகர்
யாழ்ப்பாணம்
த.மு. வன்னேரிக்குளம் பாடசாலையடி
- வன்னேரிக்குளம் கிளிநொச்சி

01.07.99 அன்று பரந்தன் சுட்டதீவுப் பகுதியில் நேற்றையதினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிமோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**2ம் லெப் சுபாஜினி**
அருளானந்தம் கௌசலாதேவி
திருகோணமலை
த.மு. நாதன் குடியிருப்பு பிரமந்தனாறு விசுவமடு

02.07.99 அன்று வவுனியா வைரவப் புளியங் குளத்தில் வைத்து இராணுவத்தினர் மற்றும் புளட் குழுவினர் மீதான தாக்குதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**கப்டன் ஈழநேசன்**
வேலாயுதன் பிரபாகரன் (பிரபு)
யாழ். மாவட்டம்

02.07.99 இன்று வன்னி மாவட்டத்தில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை குமணன்**
கணபதிப்பிள்ளை மதன்
திருமலை, த.மு. பாலசிங்கம் சரசு, கடற்கரைச் சந்தி முல்லைத்தீவு

03.07.99 அன்று மன்னார் மாவட்டத்தில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது போராளி ஒருவரும், துணைப்படை வீரர் ஒருவரும் வீரச்சாவடைந்துள்ளனர்.

**மேஜர் பொபி அல்லது நெடுங்கீரன்**
கார்த்திகேசு புஸ்பகாந்தன்
யாழ்ப்பாணம் - த.மு. வவுனியா

**(துணைப்படைவீரர்) கப்டன் செபஸ்ரியன்**
பேதுரு பர்ணாந்து மிக்கேல் பர்ணாந்து
மன்னார் மாவட்டம், த.மு. நாச்சிக்குடா

04.07.99 அன்று தென்மராட்சிப்பகுதியில் இராணுவத்துடன் எதிர்பாராமல் ஏற்பட்ட மோதலின்போது இரண்டு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**கப்டன் பொளிலன்**
சிவசுப்பிரமணியம் கிருஸ்ணகுமார்
யாழ். மாவட்டம்
த.மு. நாகபடுவான் நாச்சிக்குடா மன்னார்

**லெப் அமை அறிஞ்ஞன்**
மகாலிங்கம் செல்வம்
பழைய புளியடி விசுவமடு




04.07.99 அன்று மணலாற்றுப் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை அண்ணல்**
சின்னரெட்டியார் சிவநேசன்
வவுனியா

04.07.99 அன்று மணலாற்றுப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின்போது போராளிகள் இருவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

**லெப். சுடர்விழி**
பெரியசாமி திலகராணி
திருமலைமாவட்டம்
த.மு. மூங்கிலாறு உடையார்கட்டு

**லெப் சோபனா**
பாலசிங்கம் தமிழ்செல்வி
கிளிநொச்சி மாவட்டம்
சுண்டிக்குளம் சந்தி விசுவமடு

05.07.99 அன்று வவுனியா கொழும்பு வைத்த குளம் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை ஆனந்தரூபன்**
பெருமாள் சுரேஸ்குமார்
கண்டி, த.மு. அம்மான் நகர் குறிசுட்ட குளம்
கனகராயன்குளம்

05.07.99 அன்று மன்னார்ப்பகுதியில் இராணுவத்தினருடனான மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை காவிரிநாதன்**
தர்மரட்ணம் அகிலன்
மட்டக்களப்பு மாவட்டம்

05.07.99 அன்று மன்னார்ப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை சுதா**
வீரப்பன் இலட்சுமணன்
இந்தியா, த.மு. இராசம்மா அம்பலப்பெருமாள் சந்தி ஸ்கந்தபுரம்

05.07.99 அன்று மன்னார் பள்ளமடுப்பகுதியில் இராணவத்தினருடன் ஏற்பட்ட நேரடிமோதலில் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

**கப்டன் கமலன்**
சவரிமுத்து வரப்பிரகாசதாசன் (தேவா)
நெடுந்தீவு, த.மு. மா.றொபேட்கெனடி சிநாயகபுரம் சந்திவனம் நாச்சிக்குடா

**லெப் குமரன்**
ஐயாத்துரை கோபாலரட்ணம்
யாழ்ப்பாணம்

07.07.99 அன்று பள்ளமடுப் பகுதியல் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை ஆதித்தன் அல்லது ரவிநாதன்**
செல்லத்துரை விஜயகுமார்
மட்டக்களப்பு மாவட்டம்

08.07.99 அன்று மன்னார் பள்ளமடுப் பகுதியில் இராணவத்துடன் ஏற்பட்ட மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை குலோத்துங்கன்**
அழகையா சுந்தரராஜன்
மட்டக்களப்பு மாவட்டம்

08.07.99 அன்று மணலாற்றுப் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலின்போது இருபோராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**வீரவேங்கை கானமதி அல்லது மேகலா**
இராசரட்ணம் அம்பிகாபதி
கிளிநொச்சி, த.மு. 3ம்யூனிற் யோகபுரம் மல்லாவி

**வீரவேங்கை தணிகைத்தேவி**
தர்மலிங்கம் யசோதா
யாழ்மாவட்டம், த.மு. குளாய்க்கிணறு ஒழுங்கை வீதி அம்பலப் பெருமாள் சந்தி அக்கராயன்

09.07.99 அன்று ஒட்டுசுட்டான் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை செந்தூரா அல்லது நாமகள்**
சிவபாதம் சுபத்திரா
திருமலை மாவட்டம், த.மு. 4ம் கட்டை அமைதிபுரம் அக்கராயன்

09.07.99 அன்று மணலாற்றுப் பகுதியில் சிங்கள இராணுவத்துடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலின் போது போராளிகள் இருவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

**வீரவேங்கை சுமலதா**
தவராசா கோகிலவதனா
யாழ்மாவட்டம், த.மு. மன்னார்

**வீரவேங்கை மாலதி**
சின்னத்துரை மோகனரூபா
யாழ்மாவட்டம், த.மு. 69, கொல்ல விளாங்குளம் வவுனிக்குளம் மல்லாவி

12.07.99 அன்று மணலாறுப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை பவான்**
மார்க்கண்டு சிவனேஸ்வரன்
வவுனியா

15.07.99 அன்று மன்னார் மாவட்டம் கன்னார் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது போராளிகள் இருவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

**லெப். சின்னத்தம்பி**
செல்லையா விஜயகுமார்
உருத்திரபுரம், த.மு.அண்ணாசிலையடி ஸ்கந்தபுரம்

**வீரவேங்கை மறைவாணன்**
விநாயகமூர்த்தி மகேந்திரன்
திருமலைமாவட்டம்

15.07.99 அன்று புல்மோட்டைப்பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடிமோதலில் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

**லெப். ஈழச்செல்வன்**
சரவணமுத்து சித்திரவேல்
திருமலை, த.மு. திலக் அண்ணாச்சி குடியிருப்பு கைவேலி

**லெப். தருமன்**
ஞானசேகரம் யுவராசா
திருமலை மாவட்டம்

15.07.99 அன்று மன்னார் பள்ளமடுப் பகுதியில் இராணுவத்துடன் ஏற்ப்பட்ட மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை ஏந்தன்**
சீகாம்பரராசா மகேந்திரராசா
மட்டக்களப்பு

17.07.99 அன்று பனங்காமம் பகுதியில் இராணுவத்துடன் எதிர்பாராத மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை சந்தியா**
யோசப் சண்முகநாயகி
மாத்தளை
த.மு. 25, ரதீஸ் குடியிருப்பு தேராவில் விசுவமடு

20.07.99 அன்று மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளை எனும் இடத்தில் விசேட இதிரடிப்படையினருடனான எதிபாராத மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்

**மேஜர் அருள்ராஜ்**
நல்லதம்பி நவநாதன்
மட்டக்களப்பு மாவட்டம்

*(தொடர்ச்சி 15-ம் பக்கம்)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுதிபிசகும் மனிதநேயக்குரல்கள் !

## போலிகளின் மனிதநேயத்தராசில்?, தமிழன் பச்சை உயிருக்கு நிறை குறைவு.

சிறீலங்காவைப் பொறுத்தவரை அடுத்த ஆண்டு, அமர்க்களமான தேர்தல் ஆண்டு. சனாதிபதித் தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் நடத்தப்பட இருக்கின்றன. இந்நிலையில், தேர்தலை வெற்றிகொள்ள கவர்சிகரமான சாகசம் ஒன்றைச் செய்துகாட்ட வேண்டிய, வித்தையாளனுக்குரிய நிலையில் சந்திரிகாவின் பொதுசன ஐக்கிய முன்னணி உள்ளது. பொதுசன நலனுக்கு உகந்த நல்ல காரியங்கள் எதனையும் செய்து தமது அரசியல் ஸ்திரத்தன்மையை நிலைநாட்டிக்கொள்ள முடியாத சிங்களப்பேரினவாதக் கட்சிகள், தமிழ்மக்களின் மீதான தாக்குதல்களை, இராணுவ வெற்றிகளை நம்பியே தேர்தல்களைச் சந்திக்கவேண்டிய நிலை அன்றும் இருந்தது, இன்றும் தொடர்கின்றது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள, வன்னிப்பகுதியில், கணிசமான நிலப்பரப்பை ஆக்கிரமித்துக் கொள்வதென்றாலும், அல்லது குடாநாட்டுக்கான தரைப் போக்குவரத்துப் பாதையை திறக்கின்ற முயற்சியில் சில கிலோமீற்றர்களாவது முன்னேறுவதாக இருந்தாலும், மாரிகாலம் சாத்தியமில்லை. அதன் பாரிய படை நகர்வுகளுக்கு, குந்தகமான காலநிலை இந்த மாரிகாலம். சிங்களப்படையினர் பெரும் இழப்புக்களை இந்த மாரிகாலத்தில் சந்திக்கவேண்டிவரும்.

ஆகவே அதற்கு முன்னராக, அவசர அவசரமாகத் திட்டமிடப்பட்டு, பாரிய படைபலத்துடன், ரணகோச ஐந்து என்ற இராணுவ நடவடிக்கை முடிக்கிவிடப்பட்டது.

சிறீலங்காவின் இராணுவ அவமானத்தின் அடையாளமான ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை கைவிடப்பட்டு, பிரதான பாதையின் கிழக்குப் புறத்தே, ஒட்டிசுட்டானை ஆக்கிரமிக்க ரிவிபல இராணுவ நடவடிக்கை, கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்டது.

கிழக்குப்புறத்தேயான இராணுவ நடவடிக்கையும் கைவிடப்பட்டு, இந்த ஆண்டு மார்ச் மாதம் ரணகோச என்ற குறியீட்டுப் பெயருடன் பிரதான பாதையின் மேற்குப் புறத்தே இராணுவ நடவடிக்கையை சிறீலங்காப்படை ஆரம்பித்தது.

ரணகோச நாலாம் கட்டம்வரை, குறைந்த எதிர்ப்புக்களுடன் முன்னேறிய சிங்களப் படையினர், வன்னிப்பெருநிலப்பரப்பில், நிலங்களை கையகப்படுத்துவதில் குறியாய் இருந்தனர். அதேவேளை அதனை வைத்து பிரச்சாரம் செய்வதில் சந்திரிகா அரசோ அதிதீவிரமாய் இருந்தது.

ரணகோச நான்கின் இரண்டாம் கட்டம், சிறீலங்காப்படையினருக்கு பெரும் சோதனைக்கட்டமாக அமைந்தது. விடுதலைப் புலிகள், சிறீலங்காப் படையினரை மேற்கொண்டு நகர அனுமதிப்பதில்லை என உறுதியெடுத்துக்கொண்டு தாக்கியது போல், தாக்குதலின் கடுமை தீவிரமாய் இருந்ததுடன், சிறீலங்காப்படையினரின் இழப்பும் அதிகமாய் இருந்தது.

இவ்வாண்டு, மே, யூன் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட ரணகோச நான்கின், முதலாம் இரண்டாம் கட்டங்களின் பின், நிறுத்தி வைக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை, கடந்த பன்னிரண்டாம் திகதி, ரணகோச ஐந்தாக ஆரம்பிக்கப்பட்டது. வன்னியில், பிற பகுதிகளில் இருந்து குவிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினருடன், டாங்கிகள் கவசவாகனங்கள் சகிதம் பெரும் நம்பிக்கையுடன், தேர்தல் தேவையின் அவசியத்துடன் மேற்கொள்ளப்பட்ட ரணகோச ஐந்து இராணுவ நடவடிக்கை எடுத்தஎடுப்பிலேயே தோல்வியைத் தழுவிக்கொண்டது. மிகமோசமான இழப்புக்களுடன் ரணகோச படையினர் தமது பழைய நிலைகளுக்கே பின் வாங்கிக்கொண்டனர்.

இந்த ஆண்டு ரணகோச படையினர் சந்தித்த பெரும் இழப்பு இதுவாகவே கருதப்படுகின்றது. ரணகோச சந்தித்த பெரும் எதிர்ப்பும் இதுவாகவே உள்ளது. விடுதலைப் புலிகளின் ஆட்டிலறிகள், மோட்டார்கள், ஆர்.பி.ஜி.க்கள் என நாலாபுறமும் பொழிந்து தள்ளின. பள்ளமடு, பெரியமடு, சிராட்டிக்குளம் என, மும்முனைகளில் முன்னேறிய சிறீலங்காப் படையினரை, மும்முனைகளிலும் தடுத்து நிறுத்தியும், உள்வாங்கியும் விடுதலைப் புலிகள், சூழ்நிலைக்கேற்ப தந்திரோபாயகங்களை வகுத்து, தாக்குதல் நடத்தினர்.

ஆக, சிறீலங்காஅரசின் தேர்தல் முதலீடு ஒன்று, தோல்வியில் முடிவடைந்துள்ளது என்பதுடன், கொண்டமுதலுக்கு நஸ்டமும் ஏற்பட்டுள்ளது. சிறீலங்கா அரசின் முன்னைய இராணுவ வெற்றிகளின் மாயை சரிந்துபோயுள்ளது. பத்து மணித்தியாலயங்களுக்குள், ஆயிரத்திற்கு மேற்பட்ட படையினர், சண்டைக்களத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டனர் என்பதில் இருந்து, இச்சமர்க்களத்தின் தீவிரம் புரிந்துகொள்ளக் கூடியதே. இந்த பத்து மணிநேரச் சண்டையில் நூறுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டு, நூறுக்கு மேற்பட்டோர் படுகாயப்படுத்தப்பட்டு, மேலும் எழுநூறு வரையான படையினர் காயமடைந்த நிலையை, சிங்களப் பத்திரிகைகளே, தற்போது மெல்லமெல்ல வெளியிட ஆரம்பித்துள்ளன.

இதில் இன்னொரு சிறப்பும் உள்ளடங்கிக் கிடக்கின்றது. இதுவரை, ரணகோச இராணுவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் பலகல்ல அக்கட்டளைஇடும் அதிகாரப்பொறுப்பில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு, புதியவர் ஒருவர் அதற்கு நியமிக்கப்பட்டிருந்தார். ரணகோச நான்கின் இரண்டாம் கட்டம் பெரும் தோல்வியைச் சந்தித்ததில் அரசிற்கு அதிருப்தி. புதியவர் ஒருவரை அதிலும் விசேட பயிற்சிகள் பெற்ற ஒரவரை இதற்கு நியமித்து, புதிய இராணுவ நடவடிக்கையை பெரும் எடுப்பில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது.

முன்னர் பூநகரி இராணுவகடற்படைக் கூட்டுத்தளம்மீது விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட தவளை இராணுவ நடவடிக்கையின்போது, ஒருவாறு தப்பிப்பிழைத்து தற்போது மேஜர் ஜெனரலாக உள்ள வசந்த பெரேராவிடம், ரணகோச ஐந்தை நடத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

இதற்கு முன்னராக, இராணுவத்தளபதி, கடற்படைத் தளபதி, விமானப்படைத் தளபதி, உள்ளிட்ட உயர்மட்ட இராணுவ அதிகாரிகளுடன் சிறீலங்கா பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை நடந்திய படை நகர்வு குறித்த, ஆலோசனைக் கூட்டத்தில், இந் நடவடிக்கைக்கு உகந்த காலமாக இது படவில்லை என, இராணுவத் தளபதி சிறீலால் வீரசூரியா கருத்துத் தெரிவித்திருந்தார். இராணுவ புலனாய்வு தகவல்களும் அங்கு விவாதிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள், ரணகோச படையினரை எதிர்கொள்ள தயாராக இருக்கின்றனர் என்ற தகவல் எச்சரிக்கை விளக்காக முன்வைக்கப்பட்டது. எனினும், இவற்றை அலட்சியம் செய்துவிட்டு; ரத்வத்தையின் இராணுவ நடவடிக்கைக்கான இறுதித்தீர்மானமே அங்கு எடுபட்டது. அது அரசின் தேர்தல் வெற்றியுடன் பின்னிப்பிணைந்து நின்றதால், ரணகோச ஐந்தின் தேவையின் அவசியத்தை ரத்வத்தை நிரம்பவும் உணர்ந்து, புதிய இராணுவ நடவடிக்கைக்கு கட்டளையிட்டிருந்தார்.




> அமெரிக்கா சென்று, இராணுவ வல்லுனர்களிடம் இராணுவச் செயற்பாட்டின் நெளிவுசுழிவுகளை உயர்கற்கைமுறையில் கற்றுத்தேர்ந்து திரும்பிய வசந்த பெரேராவால், வன்னிக்களத்தை வெற்றிகொள்ள முடியவில்லை. இராணுவ வளங்களை அதிகமாகக்கொண்டும், படைபலத்தை அதிகப்படுத்தியும், இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டபோதும், தமிழீழத்தேசியத் தலைவரின் வழிகாட்டலில், அவரின் அற்புதமான போரியல் நுணுக்கங்களை மனதில் இருத்திப் போரிடும் புலிகளின் படையணிகளின் முன்னால், அவர்களால் நிற்கமுடியவில்லை.

அமெரிக்கா சென்று, இராணுவ நடவடிக்கைகளை திட்டமிட்டு நடத்துவதில், கைக்கொள்ளவேண்டிய தந்திரோபாயங்கள் குறித்து, கற்றுத்தேர்ந்து அண்மையிலேயே சிறீலங்கா திரும்பிய மேஜர் ஜெனரல் வசந்த பெரேராவிடம் ரணகோச ஐந்தை வெற்றிகரமாய் நடத்துவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. எனினும், அமெரிக்கா சென்று, இராணுவ வல்லுனர்களிடம் இராணுவச் செயற்பாட்டின் நெளிவுசுழிவுகளை உயர்கற்கைமுறையில் கற்றுத்தேர்ந்து திரும்பிய வசந்த பெரேராவால், வன்னிக்களத்தை வெற்றிகொள்ள முடியவில்லை. இராணுவ வளங்களை அதிகமாகக்கொண்டும், படைபலத்தை அதிகப்படுத்தியும், இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டபோதும், தமிழீழத்தேசியத் தலைவரின் வழிகாட்டலில், அவரின் அற்புதமான போரியல் நுணுக்கங்களை மனதில் இருத்திப் போரிடும் புலிகளின் படையணிகளின் முன்னால், அவர்களால் நிற்கமுடியவில்லை.

இவ் இராணுவத்தோல்வி, தேர்தல் வெற்றிக்கான முதலீடு கொண்டமுதலுக்கே நட்டமாகிப்போய்விட்டதில் ஏற்பட்ட கொதிப்பு, மனப்புளுக்கம், சிங்கள அரசை, அடுத்த கட்ட நகர்வுக்கு கொண்டுசென்றது.

புலிகளோடு போரிட்டு, சாத்தியப்படாத வெற்றியை, மக்களைக்கொன்று சாதிக்க சிங்களப்படை திட்டமிட்டது. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சிங்களத்தின் உயிர் உருவிகளின் இலக்கானது. சந்தைப்பகுதியில், மக்கள்கூடும் காலை நேரம் திட்டமிட்டு குண்டுகள் போடப்பட்டன. இருபத்தியிரண்டு அப்பாவிப் பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகினர். நாற்பதுக்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகாயங்களுக்கும் காயங்களுக்கும் உள்ளாகினர். குடிசைகள், வீடுகள், கொட்டில்கள், சிதைந்து சின்னாபின்னமானது.

மனித நாகரிகத்திற்குச் சவால்விடும் இந்தப் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட்ட சிறீலங்கா அரசு, அது புலிகளின் இலக்குகள் என்று கூறியது. பின்னர், மக்கள் அங்கு புலிகளால் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்றது. சில சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் நடந்த கொடுமையை உறுதிப்படுத்தி, கண்டனம் தெரிவிக்க முனைகையில், சிறீலங்கா பிரதிப் பாதுகாப்பமைச்சரோ, விசாரணைகள் நடத்துவதாக அறிவித்தார். எல்லோரது சந்தேகத்தையும் தீர்க்கும் வண்ணம் கூடவே, எப்போது விசாரணைகள் முடியும் என்பதை தன்னால் தெரிவிக்கமுடியாது எனவும் தெரிவித்தார்.

சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவின் நேரடிக்கட்டுப்பாட்டில் இருக்கும், விமானப் படையால் நடத்தப்பட்ட இப்பயங்கரவாதம் குறித்து, அப்பாவித் தமிழர்கள் துடிக்கத் துடிக்க கொல்லப்பட்டது குறித்து, சந்திரிகா வாய்திறந்து மன்னிப்புக் கோருவார் என்றோ, தமிழர்மீது பரிவுகொண்டு ஆறுதல்சொல்லுவார் என்றோ எதிர்பார்ப்பது நியாயமாகாது. இதற்கு ஒரு சாட்டுத்தேடுவது குறித்தே அவர் தற்போது, அவசரமாக ஈடுபட்டிருப்பார்.

அதுதான் இருக்கட்டும், ஆனால், மனித நேயக் காவலனாக தூக்கிப்பிடித்து, நீலன் திருச்செல்வத்தின் மரணத்திற்கு கண்டனமும், அனுதாபமும் அள்ளிவழங்கிய அந்த மனிதநேயக்குரல்களை, தமிழர்கள் கொடுமையாகக் கொல்லப்பட்ட இந்த நேரத்தில் கேட்கமுடியவில்லையே என்பதுதான் விசித்திரமாகப்படுகின்றது. ஒருவேளை இந்தவகை மனிதநேயக்குரல்கள் இரண்டுவிதமான அளவுகோல்களை வைத்திருக்கக்கூடும்.

**சுப்பு**

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (23.09.1999)

# இது பயணத்தின் கதை

ஷெல் விழுந்த இடம் போல மேற்கு வானத்தில் சிகப்புத் தீற்றல்கள் சிதிலமாயிருக்க; அன்றைய பொழுது மயங்கிச் சரிந்து கொண்டிருந்தது. சின்னனும் பெரிசுமாகச் சாயம்போன கட்டடங்களின் கூரைகளிலிருந்த காகங்கள் கூட்டிற்குப் போவதற்கு முன்பு தொண்டைத் தண்ணீர் வற்றும்வரை கத்திக்கொண்டிருந்தன. 'இன்னும் எப்பன் இருட்டுவதற்கு முதல் எந்த மூலைக்குள்ளாவது போய் முடங்கிக் கொள்ளவேணும்' என்ற பதகளிப்போடு பயணப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு நின்று வம்பளக்க நிமிர்ந்து வானத்தைப்பார்க்க எங்கே நேரமிருக்கப் போகிறது.

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அந்த நகரத்திற்கென்றொரு அழகும் பழமையும் இருந்தது. எப்போதும் குறைவிலாத சனநெரிசலும் இடைவிடாத வாகன இரைச்சலுமான ஊர்களையும், பசுமை படர்ந்த தோட்ட வெளிகளையும், பரந்து விரிந்த வயல்களையும், அலையெறியும் ஆழ் கடலையும், நிமிர்நத கரிய பனைகளையும் கொண்ட பல ஊர்களை உள்ளடக்கியிருந்த அந்தப் பெருநகரத்தின் அமைதி இப்போதெல்லாம் தொலைந்து போய்விட்டது. தன் மடியில் ஊர்ந்து திரியும் அரியண்டங்களை ஒதுக்கித் தள்ளிவிட முடியாமல் தன் மன வெப்பியாரங்களை வெளியில் சொல்லியழ முடியாமல் சன்னப் பொத்தலிட்ட கன்னங்களில் காய்ந்து போன இரத்தப் பெருக்குகளோடு இப்போதும் இந்த நகரம் கம்பீரமாகத்தான் இருக்கின்றது.

நகரத்தின் ஒதுக்குப்புறமான கடற்கரையை அண்டியதான அந்த ஊர் எனக்கு ஏற்கனவே பரிச்சயமானது. சுற்றிவர உயர்த்திக்கட்டப்பட்ட மதில்களுக்குள்ளே அழகாக வெட்டி வளர்க்கப்பட்ட குரோட்டன் செடிகளின் இலைகளில் வானவில்லின் நிறங்களைப்பார்க்கலாம். ஜன்னல்களுக்குள்ளால் கொடுக்கல் வாங்கல் செய்யும் நெருக்கத்தோடு கட்டியெழுப்பப்பட்ட வீடுகளில் அந்த ஊர்மக்களின் உழைப்பு பளபளக்கும். நானும் அவளும் அந்தப்பழக்கப்பட்ட ஒழுங்கைகளுக்குள்ளால் நடந்து கொண்டிருக்கின்றோம். இப்போது இருட்டு பயங்கரமான அமைதியுடன் 'அம்' மென்று இருந்தது. வானத்தில் நட்சத்திரங்கள் மட்டும் கொஞ்சங்கூடப் பயமில்லாமல் சிமிட்டிக் கொண்டிருந்தன. ஏனோ எனக்குச் சிரிப்பு வந்தது. இப்போது நானும் அவளும் கைகளை இறுகப் பிணைத்தோம். பையிற்குள் எல்லாம் பத்திரமாக இருந்தன. வீட்டு மதில்களின் நிலைகளை அண்டி சருகுகள் சரசரக்காமல் நடந்து கொண்டிருந்தோம். வீதிகள் வெறிச்சிட்டிருந்தன. ஆங்காங்கே ஓரிரு வீடுகளில் நாய்கள் இடைவிடாது குரைத்துக் கொண்டும் ஊளையிட்டுக் கொண்டுமிருந்தன.

பகலே பார்த்துவைத்திருந்த அந்த இடத்திற்கு பின்புறத்தால் உள்நுழைந்தோம். இருட்டுக்கூடாகவே ஏதாவது அசுமாத்தங்கள் தெரிகின்றனவா? என ஆராய்ந்துவிட்டு அந்த மறைவிடத்தில் பதுங்கிக் கொண்டோம். சற்று நேரம் புலங்களைக் கூர்மையாக்கிக் கொண்டு அமைதியாக இருந்தோம். நாய்கள் இப்போதும் ஓய்வில்லாமல் ஊளையிட்டுக் கொண்டேயிருந்தன. நீண்ட தூரம் நடந்து வந்ததால் களைத்துப்போன கால்களை நீட்டிக் கொண்டு இருவரும் படுத்துக்கொண்டோம். பையை எனது நெஞ்சோடு அணைத்துக் கொண்டேன். அதற்குள்ளேதான் எமது உயிரே இருப்பதுபோல இருந்தது. நினைத்துப்பார்த்தேன். நேற்றுமுன்தினம் எம்மவர்களுடன் இருந்து பம்பலடித்துச் சாப்பிட்ட பிறகு இருவரும் நாலைந்து தடவைகள் தண்ணீர் குடித்ததைத்தவிர வேறேதும் சாப்பிட்டதாய் ஞாபகமாயில்லை.

'ம்....... நீ எப்பனுக்குப்படு நான் முழுச்சிருக்கிறன் பிறகு நீ இரு நான்படுக்கிறன்'


என்று குசுகுசுத்தவாறு அவள் எழும்பிச் சுவரோடு சாய்ந்து குந்தினாள். தூரத்தே ஒரு இரைச்சல் அது வாகனமாயிருக்கவேணும். மிகவேகமாக வீதியில் விரைந்து வருகின்ற சத்தம் இருவரும் மௌனமாக ஆனால் எதற்கும் தயாராக இருந்தோம். நான் பையைப் பத்திரமாக இறுக்கித் தழுவிக் கொண்டேன். அந்த இரைச்சல் ஒரு கூரான கத்தியைப் போல இருளைக் கிழித்துக் கொண்டு எம்மைக் கடந்து போனது.

'யாரைக் கொண்டுபோய் எந்தக் கிடங்கை நிரவப் போறாங்களோ'

மனம் குமுறிக் கொண்டது.

ஒரு அமானுஸ்யமான பயங்கரத்துடன் அந்த இரவு கரைந்து போக, எண்ணெயிடாத இரும்புக் கம்பியொன்றின் 'கிறீச், கிறீச்' என்ற பலவீனமான சத்தத்தோடு காலை புலர்ந்து கொண்டது.

இப்போது நாங்கள் அந்தப் பிரதான வீதி



யின் முகப்பில் நடந்து கொண்டிருக்கிறோம். எனக்கருகில் நடந்து வந்து கொண்டிருந்தவளைப்பார்த்தேன். மிக அழகாக இருந்தாள். கண்களில் மலர்ச்சி இதழ்களில் மெல்லிய சிரிப்பு, புறப்படுகையில் சிறிய கைக்கண்ணாடியில் பார்த்தபோது நானும் அழகாக இருப்பதாகவேபட்டது. இருவரின் தோள்களிலும் நவநாகரிக பைகள் அசைந்து கொண்டிருந்தன.

அந் ஊரின் பிரதான சந்தியில் அமைந்துள்ள காவலரண் இன்னும் ஒரு சில மீற்றர்களில்தான் இருந்தது. இப்போது வீதியின் சலசலப்புக் குறைந்துபோய்விட்டது. பாடசாலைப் பிள்ளைகள், வேலைக்குச் செல்பவர்கள் எல்லோரும் சென்றுவிட்ட பின்னரான அமைதி. வெயில் வெளியில் மட்டும் 'சுரு சுரு' வென ஏறிக் கொண்டிருந்தது.

தூரத்தே அந்த இரும்புத் தொப்பிகள் தெரிந்தன. நாம் மிக நிதானமாக நடந்து கொண்டிருந்தோம். அடிக்கடி உல்லாசமாகப் பேசிச் சிரித்துக் கொண்டோம். அந்தக் காவலரண் பகுதியிலிருந்து ஒரு சைக்கிளில் இரு சீருடையினர் வந்து கொண்டிருந்தனர். ஏதோ உரத்துப் பேசியபடி வந்தார்கள். எமக்கருகில் வந்ததும் சைக்கிளால் எம்மை இடிப்பது போல

'ஏய், ஏய்'.....

எனக்கத்திக் கொண்டே கிட்டவந்தார்கள். நாமிருவரும் வீதிக்கரையோடு ஒடுங்கி நின்று அவர்களைப் பார்த்து இமைகளைப் படபடத்துக் கொண்டோம்.

'ஐயோ'.....

என்று செல்லமாய் கைகளை உதறிப் பயந்து கொண்டோம். அவர்கள் சிரித்துக் கொண்டே திரும்பித் திரும்பிப் பார்த்தபடி விலகிச் சென்றார்கள். எம்மிருவரின் கண்களும் ஒன்றோடு ஒன்று உரசி நமுட்டாய் சிரித்துக் கொண்டன. காவலரண்களை நெருங்கிவிட்டோம். அங்கே பல இரும்புத் தொப்பிகள் நின்றன. வீதியால் போய்வருபவர்களை மறித்துச் சோதனை செய்தன. சைக்கிளில் வந்த இரு பெண் பிள்ளைகளை மறித்துக் கதைத்துச் சிரித்துக் கொண்டிருந்தன. சைக்கிளின் முன் கைப் பிடியைப் பற்றியவாறு ஒருவன் வழிந்து கொண்டிருந்தான். இவ்விடத்தை விட்டு அகன்றாலே போதுமென்று அந்தப் பெண்கள் அவதிப்படுவது தெரிந்தது. அந்தக் காவலரணுக்குப் பக்கவாட்டாக ஒரு கடையிருந்தது. நாம் அந்தக் கடைக்குப் போனோம்.

'அண்ணை குடிக்கிற தண்ணி தாறீங்களோ'.

என என்னுடன் வந்தவள் கேட்க நான் பையை அணைத்தவாறு காவலரண் பக்கம் நோட்டமிட்டேன். ஏழு பேரளவில் நின்றார்கள் சிலர் துப்பாக்கிகளைத் தோளில் கொழுவியிருக்க சிலர் தமது துப்பாக்கிகளை காவலரண் சுவர்களில் சாத்திவைத்திருந்தார்கள்.

தீப்பொறி

ஏரியல் இழுத்துவிடப்பட்ட நிலையில் ஒரு சிறிய வானொலி ஏதோ பாடிக் கொண்டிருந்தது. இப்போது அந்தப் பெண்கள் போய் விட்டார்கள்.

கடையில் நாம் இனிப்பு வாங்கிக் கொண்டிருந்தோம். அவர்கள் எம்மைக் கண்டு விட்டார்கள் போல, ஒருவன் கைதட்டிக் கூப்பிட்டான் அப்போதுதான் பார்ப்பது போலத் திரும்பிப் பார்த்து 'என்னையோ' என்பது போல இயல்பாகச் சைகையால் கேட்டேன். இரண்டு பேரும் என இரு விரல்களைக் காட்டிக் கூப்பிட்டான். அவள் மிகுதிப்பணத்தைக் கணக்குப்பார்த்து வாங்கிக் கொண்டிருந்தாள். அந்தக் கடைக்காரர் சொன்னார்.

'பிள்ளையள் கெதியாய்ப் போய் ஐ.சீயைக் காட்டுங்கோ உந்த நாயள் எப்பதான் துலையப் போகுதுகளோ'

எனத் தலையைக் குனிந்தபடி வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டார். நான் அவரைப் பார்த்து மெலிதாய்ச் சிரித்துவிட்டு அவளைப் பார்த்தேன். அவள் மென்மையாய்ச் சிரித்தவாறே போவோம் எனக் கண்களால் சொன்னாள். நாமிருவரும் அவர்களை நெருங்கத் தயாரானோம். ஒய்யாரமான சிரிப்பை இதழ்களில் ஒட்ட வைத்துக் கொண்டு மெதுவாக அவர்களை நெருங்கினோம்.

இரு இளம்பெண்கள் சிரிப்போடு தம்மை நெருங்கி வருவது அந்த இரும்புத் தொப்பிகளுக்குக் கிளர்ச்சியூட்டியிருக்க வேண்டும். ஆர்வத்தோடு எம்முடன் பகிடி சேட்டைகள் விடுவதற்கு அல்லது அதற்கும் மேலான எதிர்பார்ப்புடன் வக்கிரமாய் இளித்தார்கள்.

'ஏய் ஐ.சீ காட்டு, காட்டு எங்க போற நங்கி? நல்லவடிவு, நாம லவ் பண்ணுவமா?'

எனப் பல குரல்கள் நெருங்கி ஒலிக்க, நாமிருவரும் அந்தச் சிரிப்பு மாறாமலே ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். அடையாள அட்டைகளை எடுப்பதற்காக எமது பைகளை அவதானமாகத் திறந்தோம்.

தயாராகப் பளபளத்துக் கொண்டிருந்த கருவிகளின் ரவைகள் மிக நெருங்கி நின்ற இலக்குகளைத் துளைத்துக் கொண்டு சீறிப் பறந்தன. அடுத்த கணம் காவலரணுக்குள் உருண்ட கைக்குண்டுகளால் அந்தப் பகுதியில் பெரும் புகைமண்டலம் எழுப்பியது. துப்பாக்கியைத் தூக்கக்கூட நேரமில்லாமல் செத்துச் சரிந்த உருவங்களின் இரும்புத் தொப்பிகள் வீதியின் குறுக்கும் மறுக்குமாய் சிதறிக்கிடந்தன. நடந்துவிட்டது என்ன என்பதையே உணர முடியாதவனாய் காயப்பட்ட நிலையில் ஒருவன் தன் இறுதி முயற்சியாக கனரக ஆயுதத்தை ஏதோ ஒரு திசையில் திரும்பி சன்னங்களைத் துப்பிக்கொண்டிருந்தான். பின்பக்கத்தால் அவனை நெருங்கிக் கையிலிருந்ததால் அவன் தலையில் ஒரு சன்னத்தைப் பாய்ச்சிவிட்டு வேகமாகப் பின்வாங்கத் தொடங்கினோம். இனிப்பு வாங்கிய கடைக்காரரைக் காணவில்லை. முன் கதவைச் சாத்தாமலே ஓடிப் போயிருக்க வேண்டும். அந்தக் கடைக்குள்ளே புகுந்து மீண்டும் ஒருகணம் தலையைத் திருப்பிக் காவலரண்களைப் பார்த்தேன். அது சிதைந்து போய் புகைந்து கொண்டிருந்தது. திருப்தியுடன் கடையின் பின்வாசலால் ஓடத் தொடங்கினோம். மக்கள் படலைகளையும், கதவுகளையும், ஜன்னல்களையும் இறுக்கிச்சாத்திக் கொண்டிருந்தார்கள். வேகம்....... வேகம் ....... அந்த வேகத்தை என்னால் வடிவமிட்டுக் கூறமுடியவில்லை. என்னுடன் வந்தவள் நொண்ட ஆரம்பித்தாள். கால்களில் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

'ம் ரவுண்ஸ் பட்டிட்டுது. உடன தெரியேல்ல இப்பதான் எரியுது.'

'ஓ.... கொஞ்சம் பொறு'

நாங்கள் அணிந்திருந்த இரு தலைத் துண்டுகளையும் சேர்த்து அவளுடைய காயத்திற்கு மேலாக கட்டினேன். இரத்தம் கொப்பளிப்பது ஓரளவு குறைந்திருந்தது. தலையைத் தன் தோளிலேயே சரித்துக் கண்களை மூடிக் கொண்டாள். அந்தப்பகுதி எந்த அசுமாத்தங்களும் இல்லாமல் அமைதியாக இருந்தது. வேர்த்துக் களைத்திருந்த அவள் முகத்தில் தலைமயிர்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. சிறிய அனுங்கல்கூட இல்லாமல் உதடுகளை அழுத்தி மூடியிருந்தாள் ஆனாலும் காயத்தின் வேதனை முகத்தில் பச்சையாய் அப்பியிருந்தது. மெதுவாக அவளின் தலைமயிரைக் கோதி முகத்தை என் உடுப்பால் துடைத்துவிட்டேன். அவள் கண்களைத் திறந்து என்னை ஆழமாய்ப் பார்த்தபடி எனது கையைப் பற்றிக் கொண்டாள்.

'இந்த இடம் ஆபத்தானது. உடன மாற வேணும். நீ என்னைப் பார்க்க வேண்டாம் ........ போ'

வெடுக்கெனக் கையை உதறிக்கொண்டு கண்களை உருட்டி அவளைப் பார்த்தேன். எனக்குள் எக்கச்சக்கமான கோபம் ஏறியிருந்தது.

'உனக்கென்ன விசரா?'

அடிக்குரலில் சீறினேன். அவள் என் கண்களைப் பார்த்தபடி உறுதியாகச் சொன்னாள்.

'இரண்டு பேரும் அநியாயமாய் மாட்டக் கூடாது'

'நீ வாயை மூடிக்கொண்டிரு. நாங்கள் இவனிட்ட கடசிமட்டும் மாட்டப் போறதில்லை'

ஒரு தரம் கண்களை மூடித்திறந்தவள். தள்ளாடியபடியே எழுந்து நின்றாள்.

'வா போவோம்'

என்றபடி நடந்தாள். வேலிகளையும், மதில்களையும் தாண்டிப் போய்க்கொண்டிருந்தோம். கீறல்களும், உரசல்களுமாய் கைகால்களெல்லாம் சிராய்ப்புற்று எரிந்தது. எதேச்சையாய் எம்மைக் கண்டுவிட்ட சிலரின் விழிகள் வியப்பால் விரிய கலக்கத்துடன் படக்கென ஜன்னல்களைச் சாத்திக்கொண்

(தொடர்ச்சி 13ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாழ்வு தந்து போனவர்கள்

## வழித்தடம்



ஒரு ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசம். அது எப்படி இருக்கும்? கனத்த இரவுகள்; அவற்றின் நிசப்தத்தைக் கிழிக்கும் ஓரிரண்டு துப்பாக்கிச் சூடுகள்; யார் யாருக்கு அந்தச்சூடுகளோ என அந்தரிக்கும் இதயங்கள். விடிகின்ற போதினில் திடீர் திடீரென சுற்றிவளைக்கப்படும் கிராமங்கள்; அச்சத்துடன் யன்னல் திரை விலக்க, வேலிகளின் மேலால் தெரியும் சட்டித் தொப்பிகள்; பாயிலிருந்து தட்டியெழுப்பப்பட்டு கோயிலுக்கோ இல்லை பாடசாலைக்கோ........ எங்கோ ஓரிடம் நோக்கிச் சாய்க்கப்படும் மக்கள். விசாரணைகள்; முகமூடிகள்; தலையாட்டிகள்; கைதுகள்; சித்திரவதைகள்; புதைகுழிகள்; இப்படித்தான் - இப்படித்தான் இருக்கும் ஒரு இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசம்.

– அன்பு

1996இல் யாழ் குடாநாடு எதிரியால் முற்றாக ஆக்கிரமிக்கப்பட்டது முதல் ஒரு புதிய போரரங்கை அங்கே திறந்தனர் புலிகள். மக்கள் கவசத்தில் மக்களுடன் மக்களாக, கெரில்லா அணிகளாக, இராணுவ இயந்திரத்தை அந்த ஆக்கிரமிப்பு பிரதேசத்தில் செயல் இழக்கச் செய்யப் புறப்பட்டனர் புலிகள். அந்த ஆக்கிரமிப்பு வலயத்தில் காண்கின்ற இடம் எல்லாம் காவலரண் என்றான நிலை. புலிகளின் ஊடுருவலைத் தடுக்கவென குடாநாட்டைச்சுற்றி இராணுவ தடுப்பரண்கள். சில நூறு மீற்றர்களுக்கு ஒரு காவலரண். அந்தப் பகுதியில் வேலைசெய்யும் போராளிகள் இத்தனையும் தாண்டித்தான் அந்த ஆக்கிரமிப்பு வலயத்தில் உள்நுழையவேண்டும்.

உண்மையில் அந்தப் பிரதேசத்தில் எமது வாழ்வு என்பது எப்போதும் கத்தி முனையில் நடப்பதாகவே இருக்கும். பிரச்சினையில்லைப் போகலாம் என வேவு பார்த்து நடக்கிற போதில் திடீரென வேலியோர புற்களில் இருந்து துப்பாக்கி முனைகள் உயரும். கணப்பொழுதில் நெஞ்சில்திட்டம் ஒன்று விரிய, எங்களின் துப்பாக்கிகள் அனல் உமிழும். எதிரிகள் சிலரை வீழ்த்த முற்றுகை உடையும், திக்குக்கு ஒன்றாய் சிதறி ஓடி மீண்டும் சொல்லப்பட்ட இடத்தில் சந்திக்கும் போது சில வேளைகளில் எங்களில் ஒருவனை நாம் இழந்திருப்போம்.

நகரத்து வீதிகளில் சைக்கிளில் கடக்கும் போது எதிரி கைதட்டிக் கூப்பிடுவான். நெஞ்சுக்குழிகளில் நீர் வற்றும். என்ன செய்வோம் என சிந்திக்கும் முன் சைக்கிள் கான்றிலில் பிடிப்பான். இறங்கி ஐ.சி. தேடுவதாய்ப்பாசாங்கு செய்து, கைத்துப்பாக்கியை எடுத்து சடுதியாய் சுட்டுவிட்டு ஓட, எதிரிகளின் துப்பாக்கி ரவைகளால் நின்ற இடம் சல்லடையாகும்.

எதிரி கலைக்கக் கலைக்க ஓடி, நாவரண்டு நீர்தேட, இரு நாளாய் உணவற்ற தேகம் ஓய்விற்கு மன்றாட, ஓர் வீட்டுக் கதவு தட்டி அம்மா! பசி தண்ணீ எனக் கேட்கின்ற போதில் தொண்டை ஒட்டிக் கண்கள் இருளும்.

இப்படித்தான் ஒவ்வொரு கணமும் திகிலோடு கழிய எம் வாழ்வு நீளும். எனினும் பசியுடனும் நித்திரையற்ற விழிகளுடனும் விழிகள் இலக்குத் தேடும். எங்கள் நிலத்தை ஆக்கிரமித்தவனைப் பழிவாங்க நெஞ்சம் தன்னிடமிருக்கும் எஞ்சிய உணர்வுகளை ஒன்றாக்கி உணவு தரும்.

நித்திரை, குளிப்பற்று நீண்ட அலைச்சலின்பின் ஒரு வீட்டில் படுத்துவிட்டால், நாய்களின் குரைப்பொலி துயில் எழுப்பும் நடந்ததை உணர்ந்து சுத்தரிக்கு முன் வீட்டுப்படலை மிதிபடும், கதவுகள் தட்டப்பட நெஞ்சு சிலிர்க்கும். கைகள் கழுத்தில் குப்பியைத்தடவ, கடைசி நேர முயற்சிக்காய் உயிர்ப்பறவை ஆணையிடும். முன் கதவால் எதிரிக்கு குண்டு அடித்து விட்டு, பின்கதவு திறந்து ஓடும்போது பாட்டியொருத்தி வழிசொல்வாள்.

தம்பி கோயிலடி எல்லாம் நிக்கிறான்களாம். இத்தனைக்குள்ளும் எங்கள் மக்கள் எங்களைக் காத்தார்கள். உணவற்று வந்தபோது உணவு தந்து, காயப்பட்டு வந்த போது மருந்து தந்து, மறைவிடம் தேடியபோது மறைப்புத்தந்து, அவர்களின் சிறகுகளுக்குள்ளேயே எங்களின் ஒவ்வொரு கணமும் கழிந்தது.

எதிரியின் கண்காணிப்புக்கள் இறுகிய 1999 இன் முற்பகுதியில் ஒரு நாள். எதிரி மிக நெருக்கமாக தன் முகாங்களை அமைத்து தன்னைப் பலப்படுத்தியிருந்தான். நகர முமற்றுக், கிராமமுமற்றிருந்த அந்தக் கோப்பாய் - இருபாலைப் பகுதியில் இராணுவம் புகுந்தது. அது ஒரு தகவல் அறிந்த திடீர் சுற்றிவளைப்பு. ஆம் அங்கே போராளிகள் இருந்த தகவலை யாரோ ஒரு தேசத் துரோகி எதிரிக்கு சொல்லிவிட்டிருந்தான். திடீரென சுற்றிவளைக்கப்பட்ட கிராமம் கலவரப்பட எதிரி அவன் இருந்த வீட்டைநெருங்குகிறான் முடிவு? ஒன்றேயொன்றுதான்.

சண்டை! எதிரியுடன் சண்டையிடுவதைத் தவிர அங்கே நின்ற போராளிகளுக்கு வேறு ஒரு வழியும் இருக்கவில்லை. நின்று நிதானித்து எதிரி நெருங்கச் சடசடக்கின்றது அவனது துப்பாக்கி.

அந்த ஆக்கிரமிப்பு பிரதேசத்தில் போராட்டத்தின் ஒரு இரகசிய.வேலையை செய்துகொண்டிருந்த அவன், ஒரு விடுதலைப் போராளி. மக்களை நேசிக்கும், மக்களால் நேசிக்கப்படும் ஒரு கெரில்லா வீரன். தனது இலட்சியத்தை இறுதிவரை மறக்காத அவனது துப்பாக்கி சுடச்சுட. ரவைகள் முடிகின்றன. எதிரியோ எண்ணிக்கையில் அதிகம். எப்போதும் வரலாம் எனக் காத்திருந்த அந்தப் போராளியின் சாவுக்கான நேரம் நிமிடக் கணக்கில் இருந்து செக்கன்களாக மாறிக்கொண்டிருந்தது. எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற விடுதலைப் புலிகளின் போரியல் மரபுப்படி அவன் தனது குப்பியை வாயினுள் வைத்துவிட்டு தன்னிடம் இறுதியாக எஞ்சியிருந்த கைக்குண்டின் கிழிப்பைக் கழற்றுகின்றான். நேரம் செக்கன்களாக நகர்ந்துகொண்டிருக்க அவன் தன்முடிவை மாற்றவில்லை. முடிவிற்கான வழியை மாறுகின்றான். வெடிக்கத் தயாரான குண்டை தனது முகத்தின் அருகில் கொண்டுவந்து தானும் குண்டுடன் சேர்ந்து வெடிக்கின்றான்.

அவன் தன்னை அழித்துக் கொண்ட முறை ஒரு சாதனை. அந்த இறுதிக் கணத்தில் அவனது மனக்கண்முன் தெரிந்தவை அவனை நேசித்த மக்கள். உணவு தந்து, மருந்து தந்து, தம் சிறகுக்குள் காத்த மக்களின் எதிர்காலம். அவனது முகத்தை இனம்கண்டு இராணுவம் செய்யப்போகும் விசாரணைகள். அதனால் அவனை ஆதரித்த மக்கள் படப்போகும் துன்பம். அவனது முகம் இனங்காட்டப்படுவதால் அம்பலமாகப் போகும் அவனது இரகசிய வேலைத் திட்டம். இவையே நிச்சயம் அவனை அவ்வாறு முடிவெடுக்கச் செய்தது.

மேஜர் சிலம்பரசன், தான் மட்டுமல்ல தன் சாவின் பின்னால் தன்னை இனம் காட்டும் முகம் கூட எதிரியிடம் அகப்படக் கூடாது என்பதற்காக, இதுவரை காலமும் தன்னைக் காத்த மக்கள் தன்னால்



துன்பப்படக்கூடாது என்பதற்காக, அவன் எடுத்த முடிவு உன்னதமானது.

எதிரியிடம் பிடிபடும் சந்தர்ப்பத்தில், துப்பாக்கியில் ரவைகள் எல்லாம் முடிந்த அந்த இக்கட்டான நிலையில், எல்லோரும் அடுத்த முடிவிற்காய் அந்தரிக்கும் இந்த இறுதிக் கணத்தில் அவன் கலங்கவில்லை. நிதானமாக முடிவெடுத்தான். அவன் குப்பிகடிக்கவில்லை. வெறுமனே குண்டை வெடிக்கவைக்கவும் இல்லை. தன் இறப்பின் மூலம் தன்முகமே சிதைய வேண்டும் என முடிவெடுத்தான். நினைக்க மயிர் கூச்செறிகின்றது.

உலக வரலாற்றில் எங்கும் எப்போதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புக்களும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன என்ற தலைவர் அவர்களின் கூற்றை வலுப்படுத்திச் சென்றவன் அந்தப் போராளி. அவனது வீரமான அந்த இறுதிநேரத் தீர்மானம், தன்னை நேசித்த மக்களைகாக்க அந்த விடுதலைப் போராளி கொண்ட அவா, இவையே இன்றும் விடுதலைத் தேரை ஒரு மக்கள் போராட்டமாக அசைத்துக் கொண்டிருக்கின்றது. அவனைக் காத்த சிறகுகளை, அவனது அந்த உயரிய தீர்மானம் காத்துக் கொண்டதால், இன்றும் அதே சிறகுகளுக்குள் அவன் போன்ற விடுதலைப் போராளிகள்.

---

(12ம் பக்கத் தொடர்ச்சி)

## ஒரு பயணத்தின் கதை

டார்கள். நடந்த சம்பவத்தை அறிந்திருந்தாலும் மனத்தின் சந்தோசத்தை முகத்தில் துப்பரவாய்த் துடைத்துவிட்டு அடுத்து என்ன நடக்கப் போகிறதோ என்ற எண்ணத்துடன் தத்தமது வீடுகளுக்குள்ளேயே ஒடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

அன்றைய பொழுதும் அடங்கிக் கொண்டிருந்தது. அவள் முற்றிலும் தளர்ந்து போயிருந்தாள். நாங்கள் போய்ச்சேர வேண்டிய இடத்திலிருந்து வேறெங்கோ பாதை மாறி விட்டிருப்பது புரிந்தது. பைகளுக்குள் எமக்காக எஞ்சியிருந்தவைகளையும், எமக்குள்ளிருந்த ஆழமான தன்னம்பிக்கையையும் தவிர வேறெதுவுமே இப்போது மீதமிருக்கவில்லை. ஒரு மதிலோடு அண்டிய மதகருகே பதுங்கியிருந்தோம். அந்த கருக்கல் பொழுதில் ஒரு பெண்ணின் நிழலுருவம் ஒழுங்கையால் வந்துகொண்டிருப்பது தெரிகிறது. அவ்வுருவம் மிகவும் நெருங்கி வந்துவிட்டது. நூல்சேலையும், ஓரளவு நரைத்த தலையுமாக இருந்தாலும் நடையில் கம்பீரத்திற்கு குறைவிருக்கவில்லை. வேகமாக வந்து கொண்டிருந்தவரின் முன்னால் நாம் நின்று கொண்டிருந்தோம். ஏனோ எனக்குப் பட்டென்று எனது அம்மாவின் நினைவுகள் மின்னலாய்த் தோன்றின.

'அம்மா'

சட்டென நின்றவர் எங்களைக் கூர்ந்து பார்த்தார். கண்கள் இமைக்க மறந்தன. மறுகணம் பார்வை எரிந்தது.

'என்ன?'

சினமான கேள்வி

'அம்மா எங்களுக்கொருக்கா........... பாதையைக்காட்டி விடுங்கோ'

'பாதையோ? எனக்கொரு பாதையும் தெரியாது'

என்றவாறு தன்பாட்டில் நடக்க ஆரம்பித்தார்.

காயப்பட்டவள் மெல்லிய மயக்கத்தோடு என்மேல் சாய்ந்திருந்தாள். அவளின் காயத்தில் உறைந்திருந்த இரத்தத்தின் வெடில் மணம் சகிக்க முடியாததாய் இருந்தது.

'அம்மா'

என மீண்டும் கூப்பிட்டேன் அவர் மெதுவாகத் திரும்பி சந்தேகத்தோடு எம்மை நோக்கி வந்தார்.

'ஒரு துணியாவது தாங்கோம்மா காயத்திற்கு கட்டுப்போட வேணும்'

'நீங்கள் ஆர்? ஆரெண்டு சொல்லுங்கோ முதல்ல'

அந்தக் குரலில் சினம் அப்படியேயிருந்தது. நான் அவரை நிமிர்ந்து பார்த்தேன். அவர் என் கண்களுக்குள் கூர்ந்து எதையோ தேடிக்கொண்டிருப்பது புரிந்தது. அவரின் கைகளைப் பற்றியவாறு கண்களைப் பார்த்துச் சொன்னேன்.

'அம்மா நாங்கள் விடுதலைப் புலிகள்'

அவரின் கண்கள் குத்திட்டு நின்றன.

'மெய்யாவோ.......... அப்ப...... இண்டைக்கு அதில அடிச்சது'

'நாங்கள் தான்'

அம்மா எமது கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள், இரத்தப் பிசுக்கேறிய கரங்களை எடுத்து தனது கன்னத்தில் பரபரவென தேய்த்துக் கொண்டாள். வேர்த்துக் களைத்து உவர்த்துப் போயிருந்த முகங்களில் மாறி மாறி முத்தமிட்டாள்.

'என்ர பிள்ளையள்........ என்ர பிள்ளையள்'

என வாஞ்சையோடு தழுவும் அந்தத் தாய்மை சன்னதங்கொண்டு தவித்துத் துடிப்பது எனக்குப் புரிந்தது.

'பிள்ளையள் வாருங்கோ..... வாருங்கோ, என்னோட வாருங்கோ' எம்மை அணைத்தபடி நடக்கத் தொடங்கினார். பைகளைப் பத்திரமாக அணைத்தபடி நாமும் நடந்து கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் அவ்ரின் தளர்ந்துபோன கைகள் ஒரு தாய்க் கோழியின் செட்டையைப்போல.... கதகதப்பாய்...... பாதுகாப்பாய்.........



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## முதலாம் பாகம்
### அத்தியாயம் முப்பத்தியிரண்டு

தொடர்ச்சி...

'சீச்சீ அப்படிச் சொல்வது அர்த்தமற்றது. சேர், கிளெறென்ஸ் கவலைப்பட வேண்டாம். நான் தான் கவலைப்பட வேண்டும். உங்களைக் கைவிட்டுவிட்டேன்.' சுதர்லண்ட் எழுந்து கொண்டார். கண்கள் கலங்கி இருந்தன. 'எனக்குக் களைப்பாக இருக்கின்றது மிகவும் களைப்பாக இருக்கின்றது.'

'நாங்கள் உங்களுக்கு முழு ஓய்வூதியம் ஒழுங்குபண்ணுவதோடு, நீங்கள் ஓய்வு பெறும் விஷயத்தையும் எவ்வளவு அமைதியாகச் செய்ய முடியுமோ அவ்வளவு அமைதியாகச் செய்வோம். நீ என்னை நம்பலாம்' என்று சொல்லிய ரெவர் பிறவுண் தொடர்ந்தும், புரூஸ் இங்கு வரும் போது பாரிசில் தங்கியிருந்த நேரத்தில் நெடியோடு நீண்ட நேரம் கதைத்தேன். உன்னுடைய அவல நிலையைப்பற்றி அவளிடம் சொன்னேன். நான் சொல்வதைத் தயவுசெய்து கேள். நீ சிறிது ஊக்குவித்தால்..... நீங்கள் இருவரும் மீண்டும் இணைந்து கொள்ளலாம். நெடிக்கு நீ மீண்டும் தேவைப்படுகிறாய் உனக்கும் அவள் உதவி அவசியமாகிவிடும்

சுதர்லாண்ட் அவசர அவசரமாக இல்லையெனத் தலையசைத்தார். 'நானும் நெடியும் பல வருடங்களாக ஒட்டாமலே தான் வாழ்ந்தோம். எங்களுக்கிடையில் ஏதாவது அர்த்தமுள்ள தொடர்பு இருந்ததென்றால் அது இராணுவம் தான். இராணுவம் தான் எங்கள் இருவரையும் ஒன்றாக வைத்திருந்தது.'

'சரி ஏதாவது வேறு திட்டமிருக்கிறதா?'

'இந்த சைப்பிரசில் இருந்த மாதங்கள் எனக்குள் ஏதோ மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கின்றன சேர் கிளறென்ஸ். விசேடமாக இந்த கடந்த சில வாரங்கள்.... நீங்கள் இதை நம்பாமல் இருக்கலாம். ஆனால் நான் தோற்கடிக்கப்பட்டது போல் உணரவேயில்லை. ஆனால், ஏதோ பெரிதான ஒன்றை வென்றெடுத்த உணர்வே வரப்பார்க்கின்றது. இந்த ஒன்று நான் பல வருடங்களுக்கு முன்பு தோற்றுவிட்ட ஒன்றாகும்.

'அது என்ன?'

'உண்மைதான் அது. இந்த இடத்தில் நான் கடமையேற்ற நாள் எப்போ என்று ஞாபகம் இருக்கிறதா? அப்போது சரியிலும், பிழையிலும் இயங்கும் ஒரே ராட்சியம் மோட்சத்தில் இருக்கிறது என்றும், இங்கிருக்கும் ராஜ்யங்கள் மசகெண்ணையில் இயங்குகின்றன என்றும் சொன்னீர்கள்.'

'அது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது.' ரெவர் பிறவுண் பதிலிறுத்தார்.

'ஆமாம்' என்ற சுதர்லணட் தொடர்ந்து 'இந்த எக்ஸோடஸ் விஷயத்தில் இருந்து நான் அதைப்பற்றி மிக ஆழமாகச் சிந்தித்தேன். என்னுடைய வாழ்க்கை முழுவதும் உண்மையைப் பற்றி அறிந்திருந்தேன். சரியிலிருந்து, பிழையை வேறுபடுத்த அறிந்திருந்தேன், உண்மையை அறிந்திருப்பது ஒன்று. வாழ்வாக அதைக் கைக்கொள்வதற்கு..... மோட்ச ராட்சியத்தை உலகில் நிறுவுவது வேறு. ஒரு மனிதன் வாழ்நாளில் தான் வாழ்வதற்காக தன் மனம் வெறுக்கும் எவ்வளவு காரியங்களைச் செய்கிறான். அவமானம், சித்திரவதை, மரணத்துக்கும் கூடப்பயப்படாமல் தாங்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்கும், உலகின் சிறிய தொகையினரான அந்த மனிதர்களை நான் எவ்வளவு போற்றுகிறேன் தெரியுமா? எவ்வளவு அற்புதமான மனோ அமைதியை அவர்கள் உணர்ந்திருப்பர். எங்களைப் போன்ற சாதாரண மானிட ஜென்மங்களுக்கு ஒருபோதும் தெரியவராது... அந்த சிறிய தொகையினரில் மகாத்மா காந்தியும் ஒருவர். பூலோக மோட்சம் என்று யூதர்களால் அழைக்கப்படும் அந்த மோசமான மண்ணுக்குப் போகப் போகிறேன். அந்த மண்ணைப் பற்றிப் பூரணமாக அறியப்போகிறேன். கலிலி ஜெருசலேம்...... எல்லா இடங்களைப் பற்றியும்.......'

'உன்னைப் பார்த்தால் பொறாமையாக இருக்கிறது.'

சிலவேளை நான் சபேட் (Safed) அருகில் குடியமரக்கூடும்.. அல்லது மவுண்ட் கானானில்... (Mount Canaan)

மேயர் அலிஸ்ரர் காரியாலயத்தினுள் நுழைந்தார். அவருடைய முகம் வெளுத்திருந்தது. நடுங்கும் கைகளால் ஒரு குறிப்பை ரெவர் பிறவுணிடம் வாசிப்பதற்காக கொடுத்தார். ரெவர் பிறவுண் அதை ஒருமுறை வாசித்தார், திரும்பவும் வாசித்தார். அவர் கண்களையே அவரால் நம்பமுடியவில்லை, 'எங்களை மாபெரும் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். அவர் முணுமுணுத்தார். அந்தக் குறிப்பை சுதர்லாண்டிடம் கொடுத்தார்.

அவசரம்

எக்ஸோடசுக்கான பேச்சாளரான அரி பென் கானான், நாளைமதியம் தொடக்கம் ஒவ்வொரு நாளும், தாமாகவே முன்வரும் பத்துப்பத்துப் பேர், பிரிட்டிஷ் படைகளின் கண் முன்னா



லேயே கப்பலின் உயர்ந்த பாலப்பகுதியில் தற்கொலை செய்து கொள்ளுவார்கள் என்று அறிவித்திருக்கிறார். இந்தத் தொடர் தற்கொலைகள், எக்ஸோடசை பலஸ்தீனத்துக்கு போகவிடும்வரை, அல்லது கப்பலில் இருக்கும் எல்லோரும் இறந்துபோகும் வரை நடைபெறும்.

ஹம்ப்றி கிறோபேர்ட் உடனும், வேறு அரை டசின் உதவியாளர்களுடனும், பிராட்ஷா லண்டனில் இருந்து விரைந்து கிராமப்புறத்தில், தனிமையான இடத்தில் அமைந்திருந்த சிறிய வீட்டுக்குச் சென்றார். எக்ஸோடசில் தற்கொலைகள் ஆரம்பமாவதற்கு முன் ஏதாவது நடவடிக்கை எடுக்க அவருக்கு பதினான்கு மணி நேரம் இருந்தது.

அவர் முழுவிடயத்தையும் தவறாகக் கணிப்பிட்டிருந்தார். முதல் விஷயம் கப்பலில் இருக்கும் பிள்ளைகளின் உறுதி, திடசங்கற்பம் ஆகியவை. இரண்டாவது இந்த விடயம் சிருஷ்டித்த பிரச்சாரம். கடைசியாக, அரி பென் கானான் தற்காப்பிலிருந்து தாக்குதலுக்கு இவ்வளவு தூரத்திற்கு தீவிரமாக முனையலாம் என எதிர்பார்க்காதது. பிராட்ஷா ஒரு பிடிவாதமான மனிதன். ஆனால், தான் தோல்வியைச் சந்திக்கும் நேரங்கள் அவனுக்குத் தெளிவாகத் தெரியும். ஆகவே இப்போது கௌரவத்துடனான, தீர்வு ஒன்றை எட்ட முயன்றார்.

பிரட்ஷாவும் அவரது உதவியாளர்களும், அமெரிக்கா, பலஸ்தீனம், இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்த பத்துப் பன்னிரண்டு யூத தலைவர்களை இதில் தலையீடு செய்யும்படி கேட்டு கேபிளிலும், தொலைபேசியிலும் தொடர்பு கொண்டார்கள். குறிப்பாகப் பலஸ்தீனத் தலைவர்கள் பென் கானானுக்குப் புத்தி கூறமுடியும் என எதிர்பார்த்தார்கள். ஆகக் குறைந்தது பிரட்ஷா மாற்றுத் திட்டம் ஒன்றை ஒழுங்குபண்ணும் வரையாவது, நடவடிக்கையை நிறுத்தி வைக்கக்கூடும் என எதிர்பார்த்தார்கள். பென் கானானைப் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக் கொள்ள வைத்தால், எக்ஸோடசைப் பேசிப் பேசியே தொலைத்துவிடலாம் என மனப்பால் குடித்தான். ஆறு மணி நேரத்துள், யூதத் தலைவர்களிடம் இருந்து பதில்கள் வந்துசேர்ந்தன. அவர்கள் எல்லோரும் ஒரே சீரான, மறுமொழிகளை அனுப்பி இருந்தார்கள். 'நாங்கள் தலையிடமாட்டோம்.'

அடுத்ததாக, சைப்பிரசில் இருக்கும் ரெவர் பிறவுணோடு தொடர்பு கொண்டார். அவர் பிரிட்டிஷார் மாற்றுத்திட்டம் ஒன்றை ஆராய்ந்து கொண்டிருப்பதாகவும், காலக்கெடுவை இருபத்திநாலு மணிநேரத்தால் பின்போடும் படியும், எக்ஸோடசைக் கேட்டுக் கொள்ளுமாறும் அவருக்கு அறிவுறுத்தினார்.

இந்த அறிவுறுத்தல்களைச் செயல்படுத்திய ரெவர் பிறவுண் பென் கானானின் பதிலை இங்கிலாந்துக்குத் தெரியப் படுத்தினார்.

அவசரம்

பென் கானான் பேசித் தீர்ப்பதற்கு ஒன்றும் இல்லை என அறிவித்து விட்டான். ஒன்றில் எக்ஸோடஸ் பயணப் படும். அல்லது பயணப்படாது என்று தெரிவித்தான். கப்பலில் இருக்கும் பலஸ்தீனியருக்கு பொது மன்னிப்பளிப்பது நிபந்தனைகளின் பகுதியாகும் என்றும் மேலும் தெரிவித்திருக்கின்றான். பென் கனான் எனது மக்களைப் போகவிடு என்று சொன்னான். ரெவர் - பிறவுண்

செசில் பிராட்ஷாவுக்குத் துயில் கொள்ள முடியவில்லை. அவர் முன்னும் பின்னுமாக, முன்னும் பின்னுமாக நடைபயின்றார். எக்ஸோடசின் பிள்ளைகளின் தற்கொலை முயற்சி தொடங்க இன்னும் ஆறே மணித்தியாலங்கள் இருந்தன. ஒரு முடிவை எடுத்து மந்திரி சபையிடம் கையளிக்க இன்னும் மூன்றே மணித்தியாலங்கள் இருந்தன. ஒரு வித விட்டுக் கொடுப்புக்களையும் எட்ட முடியவில்லை.

அவர் ஒரு வெறியனோடா போராடுகிறார்? அல்லது தன்னை ஒரு பொறிக்குள் ஆழமாக அழைத்துச் சென்று விட்ட இந்த அரி பென் கானான் ஒரு நயவஞ்சகமான, இதயமில்லாத சூழ்ச்சிக் காறனா?

என் மக்களைப் போகவிடு!

பிராட்ஷா தன் மேசைக்குப் போய் விளக்கைப் பற்றவைத்தார்.

அவசரம்

அரி பென் கான்ான், எக்ஸோடசுக்கான பேச்சாளர், நாளை மதியத்திலிருந்து ஒவ்வொரு நாளும் தற்கொலை செய்து கொள்வார்கள் என அறிவித்திருக்கிறார்—

தற்கொலை.......... தற்கொலை .......... தற்கொலை.

கையில் வைத்திருந்த தாள் கீழே விழுமளவிற்கு பிராட்ஷாவின் கை நடுங்கியது.

அவருடைய மேசை மீது பல்வேறு அமெரிக்க ஐரோப்பிய அரசுகளிடமிருந்து வந்திருந்த ஒரு டசின் கடிதங்களும் கிடந்தன. இராஜதந்திரிகள் பாவிக்கும் அந்த மரியாதையான பாஷையில் அவர்கள் எக்ஸோடஸ் நிலைமை பற்றிக் கவலை தெரிவித்திருந்தார்கள். அதை விடவும் ஒவ்வொரு அரபு நாட்டுத் தலைவரிடமும் இருந்து, எக்ஸோடசைப் போகவிடுவது ஒவ்வொரு அராபியனையும் அவமானப்படுத்துவது போலாகும் என்று தொனிக்கும் குறிப்புகளும் அவர் கையில் இருந்தன.

**லியோன் யூறிஸ்**

செசில்- பிராட்ஷா இப்போது குழப்பம் அடைந்திருந்தார். கடந்த சில நாட்கள் நரகத்தில் வாழ்வது போலிருந்தது. இவை எல்லாம் எப்படி ஆரம்பமாயின மத்திய கிழக்கு கொள்கைகளை முப்பது வருடம் நெறிப்படுத்திய பின் இதுவரை கண்டிராத மோசமான பிரச்சினையில் கேவலம் ஒரு ஆயுதம் தரிக்காத மீட்பு இழுவைப்படகினால் சிக்கிக் கொண்டார்.

விதியின் எந்த விசித்திரமான கரங்கள் தனக்கு ஒரு அடக்குமுறையாளன் என்ற பட்டத்தைத் தேடித்தந்திருக்கின்றன? ஒருவரும் அவரை யூத எதிர்பாளனாக குற்றஞ்சாட்ட முடியாது. அந்தரங்கத்திலோ, பலஸ்தீன யூதர்களை மதிப்புடன் போற்றி வந்தார். பலஸ்தீனத்துக்குத் திரும்புவது என்பது யூதருக்கு எப்படி அர்த்தப்படும் என்பதை நன்றாக விளங்கிக் கொண்டிருந்தார். மாநாட்டு மண்டபங்களில், சியோனிஸ்டுகளுடன் நடத்திய விவாதங்களை அவர் மிகவும் ரசித்திருக்கிறார். அவர்களின் தலைசிறந்த பேச்சாளர்களுடன் விவாதம் புரிந்தும் இருக்கிறார்.

எனினும், ஒரு ஆங்கிலேயன் என்ற ரீதியில் இங்கிலாந்தின் நலன்களுக்காக அரபு சார்பு கொள்கைகள் கடைப் பிடிக்கப்பட வேண்டும் என ஆத்மார்த்தமாக நினைத்தார் ஆயினும் பலஸ்தீனத்தில் குடியேற்றம் ஐந்து இலட்சத்திற்கும் மேல் போய்விட்டது. அரபுகளோ தங்கள் நடுவில் யூத நாடு ஒன்றை சிருஷ்டிக்க பிரிட்டன் உதவுவதாகவும் பிடிவாதமாக சொல்லிவந்தனர்.

இத்தனை வருடகால சேவையின் போதும், தன்னைப் பொறுத்துவரை ஜீவகளையோடுதான் இருந்தார். என்ன நடந்துவிட்டது தன்னுடைய சொந்தப் பேரப்பிள்ளைகள் எக்ஸோடசின் மேல் தளத்தில் கிடப்பது போன்ற உணர்வை அவர் அடைந்தார். நன்றாக வளர்க்கப்பட்ட எந்த ஆங்கிலேயனைப்போல பிரட்ஷாவும் பைபிளை நன்றாக அறிந்தார், ஆழமான மதப்பற்று இல்லாவிட்டாலும், அதிகமான ஆங்கிலேயரைப் போல, கௌரவ உணர்வுகளோடு (Sense of Honour) வாழ்ந்து வந்தார். எக்ஸோடஸ் இறை வழிகாட்டலுக்கு உட்பட்டிருப்பது சாத்தியமா? இல்லை. அவர் ஒரு நடைமுறை ராதந்திரி இயற்கைக்கு மாறான சக்திகளை நம்பாதவர்.

எக்ஸோடசையும், மற்றைய சட்ட விரோதக் கப்பல்களையும் தகர்த்து எறிய, இராணுவம், கடற்படை அதிகாரம் எல்லாம் கையில் இருந்தும் செயல்படுத்த முடியாத நிலையில் இருந்தார்.

எகிப்தின், பாரோவுக்கும் இப்படியான சக்தி இருந்திருக்கக்கூடும். முகத்தில், பிரட்ஷாவுக்கு வியர்வை பெருக்கெடுத்தோடியது. எல்லாம் முட்டாள்தனம் அவர் களைத்திருப்பதோடு, வேலையின் அழுத்தங்கள் அதிகமாயிருந்தன. என்ன மடத்தனமான யோசனைகள்.

என் மக்களைப் போகவிடு!

பிராட்ஷா நூலகத்துக்குச் சென்று பைபிளை எடுத்து யாத்திராகமத்தின் வரிகளைப் பதற்றத்துடன் வாசித்தார். எகிப்து நாட்டின் மீது கடவுள் அனுப்பிய பத்துக் கொள்ளை நோய்களைப் பற்றியும் வாசித்தார்.

நான் பாரோவா? ஒரு சாப மழை பிரிட்டனை அழிக்குமா? அவர் தனது அறைக்குச் சென்று ஓய்வெடுக்க முயன்றார். ஆனால் அவர் மூளைக்குள் இயந்திர கதியில் ஒரே ஒரு வரிமட்டும், கட கடத்துக் கொண்டிருந்தது.

என் மக்களைப் போகவிடு......... என் மக்களைப் போகவிடு..........

என் மக்களைப் போகவிடு..........

குறோபேர்ட்,... குறோபேர்ட் கத்திக் கூப்பிட்டார்.

குறோபேர்ட் தன் இரவுடையைக் கட்டிக் கொண்டே ஓடி வந்தார். 'கூப்பிட்டீர்களா?'

'குறோபேர்ட் சைப்பிரசில் இருக்கும் ரெவர் பிறவுனுடன் உடனடியாகத் தொடர்பு கொள் - எக்ஸோடசை செல்ல அனுமதிக்கும் படி அவனுக்குச் சொல்.'

**முதல் பாகம் முற்றிற்று.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறீலங்கா விமானப்படை விமானங்கள் புதுக்குடியிருப்பு மக்கள் குடியிருப்பு மீது கொடூரமான மனிதப் படுகொலை

கடந்த 15.09.1999, புதன்கிழமை அன்று சிறீலங்கா விமானப்படை விமானங்கள் புதுக்குடியிருப்பு பொதுமக்கள் வாழிடங்களைக் குறிவைத்து ஈவிரக்கமற்ற கொடூர குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. இந்தக் கண்மூடித்தனமான தாக்குதலில் 22இற்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் உடல் சிதறிப் பலியானார்கள். மேலும் 33 வரையான பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இடம்பெயர்ந்த பொதுமக்கள் சிறு குடிசைகளை அமைத்து நெருக்கமாக வாழ்ந்துவந்த பகுதியையும், இப்பொதுமக்கள் காலை வேளையில் ஒன்றுகூடித் தமது அன்றாட சிறுதேவைகளைப் பூர்த்தி செய்யும் சந்தைப் பகுதியையும் இந்த மிலேச்சத்தனமான குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளன. இப்படுகொலைத் தாக்குதலில் சந்தைப் பகுதியில் சிறு வியாபாரம் செய்துகொண்டிருந்த ஏழை வியாபாரிகளும் பொருட்களை வாங்கக் கூடிநின்ற மக்களும் குடியிருப்பில் வாழ்ந்துவந்த அப்பாவி மக்களுமாகப் பலர் கொல்லப்பட்டும் படுகாயமடைந்துமுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட அனைவருமே அப்பாவிப் பொதுமக்களாவார்கள்.

குண்டுவீச்சுக்கு இலக்கான சந்தைப் பகுதியும் குடியிருப்புப் பகுதியும் பேரழிவுக்குள்ளான பிரதேசமாக காட்சி தருவதோடு 50இற்கு மேற்பட்ட சிறு குடிசைகள், சிறு கடைகள், சந்தைப்பகுதியில் இருந்த சிறு கொட்டில்கள் அனைத்தும் அழிந்து சிதைந்துபோயுள்ளன. கொல்லப்பட்ட பொதுமக்களின் தலைகள், கைகால்கள், சிதறுண்ட சதைத் துண்டங்கள் பல இடங்களிலும் வீசப்பட்ட நிலையில் பார்ப்பவர் மனதை உருக்கும் வண்ணம் மிகப் பயங்கரமாகக் காட்சிதருகின்றன.

கொல்லப்பட்டவர்களின் சிதறுண்ட உடற்பகுதிகளையும் அவர்கள் அணிந்திருந்த உடைகள் மற்றும் ஏனைய அடையாளங்களையும் வைத்தே அவர்களின் உறவுகள் கதறித் துடித்துகொண்டு அடையாளங்காட்டிய காட்சிகள் பார்ப்பவர் நெஞ்சங்களை உருக்குகின்றன.

## இதுவரை கொல்லப்பட்டு அடையாளம் காணப்பட்டவர்களின் விபரங்களைக் கீழே தருகின்றோம்.

1. கந்தப்பிள்ளை செல்லமாணிக்கம் (70 பெண்) 7ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு
2. அரியநாயகம் சயந்தினி (12 பெண்) 8ம் வட்டாரம் மந்துவில் புதுக்குடியிருப்பு
3. செல்லையா ஆறுமுகம் (59 ஆண்) வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால்
4. கணபதிப்பிள்ளை யோகராசா (36 ஆண்) வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால்
5. அன்ரனி தவராசா திரேசம்மா (50 பெண்) மந்துவில் சந்தி, 8ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு
6. பாக்கியநாதன் றீற்றம்மா ( 56 பெண்) 8ம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிருப்பு
7. அன்ரனிலியோ கிறிஸ்ரிலீடா புளோரன்ஸ் ( 54 பெண்) 8ம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிருப்பு
8. பத்மராசா ஜெனிற்றா (15 பெண்) 8ம் வட்டாரம், மந்துவில் பிள்ளையார் கோவிலடி, புதுக்குடியிருப்பு
9. ஞானசேகரம் லட்சுமிப்பிள்ளை (43 பெண்) 8ம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிருப்பு
10. அந்தோனிப்பிள்ளை செபமாலைமுத்து (45 ஆண்) மணற்குடியிருப்பு, முல்லைத்தீவு
11. தனராஜ் ஜெனோபி ( 25 பெண்) 8ம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிருப்பு
12. சின்னையா ஜெயபாலசிங்கம் (35 ஆண்) 6ம் வட்டாரம், ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு
13. சவரியோன் தம்பிராசா (55ஆண்) 8ம் வட்டாரம், மந்துவில் சந்தி ,புதுக்குடியிருப்பு
14. சின்னத்தம்பி தம்பு (55 ஆண்) 6ம் வட்டாரம், ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு
15. தம்பையா சுப்பிரமணியம் (59 ஆண்) 6ம் வட்டாரம், ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு
16. அலன்ரோஸ் கொன்போசியஸ் (20 ஆண்) பனையடி, முள்ளியவாய்க்கால்
17. இராசநாயகம் உதயரூபன் (18 ஆண்) பனையடி, முள்ளியவாய்கால்
18. தேவநாயகம் செபஸ்தியாம்பிள்ளை (52 ஆண்) பழைய மாத்தளன், அந்தோனியார் கோவிலடி, முள்ளியவாய்க்கால்
19. ஆறுமுகம் ஜெயராமன் (50 ஆண்) 6ம் வட்டாரம், மந்துவில் சந்தி, புதுக்குடியிருப்பு
20. ஜெயராமன் சந்திரகுமார் (20 ஆண்) 6ம் வட்டாரம், மந்துவில் சந்தி, புதுக்குடியிருப்பு
21. ஜேம்ஸ் ஜெயசங்கர் (33 ஆண்) 6ம் வட்டாரம், மந்துவில் சந்தி, புதுக்குடியிருப்பு
22. அன்ரனிலியோ மெல்றோஸ் (29 பெண்) 8ம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிருப்பு

(04ம் பக்கத் தொடர்ச்சி)

# சமரும் மருத்துவமும்

கொள்கின்றன. விழைவு பல பொதுமக்கள் உடல்கள் சின்னாபின்னமாகச் சிதம்பிக்கிடக்கின்றன. இன்னும்பலர் படுகாயமடைந்து ஈனக்குரல் எழுப்புகின்றனர். தாக்குதல் சிறிது ஓய்ந்தவுடன் மீட்புப் பணியில் பொதுமக்களும், போராளிகளும் ஈடுபடுகையில் மீண்டும் அக்கிராமம் வான், எறிகணைத் தாக்குதல்களினுள் சிக்கிக் கொள்கிறது. வானையும் மண்ணையும் புகைமண்டலம் இணைத்திருக்க அதனூடு மீட்கப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு பொது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர். பெருமளவில் மக்கள் காயமடைந்திருந்தனர். எல்லோருக்கும் சிகிச்சையளிக்கப் போதிய வசதி அம் மருத்துவமனையில் இருக்கவில்லை. அதனால் அவர்களில் பலர் விடுதலைப் புலிகளின் சந்திரசிகிச்சைக் கூடங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றனர். அவசர அவசரமாக உயிர் காத்தலுக்கான சிகிச்சையளிக்கப் படுகின்றனது.

இவ்வாறு எதிரி பெருமெடுப்பில் எம் மக்கள் மீது திடீரெனத் தாக்குதல் தொடுக்கும்போது பெருமளவில் மக்கள் காயமடைவர். மேலும் விரைவான உறுதியான வெற்றிகள் வேண்டி இராணுவ விஞ்ஞானத்தினுள் இதுவரை இணையாத பல முறைகளில் எதிரி மீது தாக்குதல் தொடுக்கும்போது ஒருசில மணிகளினுள் பல நூறு போராளிகள் பலவகைக் காயங்களுக்கு உள்ளாவர். இதன் பொழுது இவர்களிற்கும் உயிர்காத்தலுக்கு முன்னுரிமை கொடுத்து சிகிச்சையழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. எங்களின் மருத்துவ மற்றும் ஏனையவளங்களும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் ஒவ்வொருவருக்கும் நீண்டகால நோக்கில் பூரண திருப்தி தரக்கூடிய வகையில் சிகிச்சை செய்ய முடிவதில்லை. இதனால் பொருந்தும் என்புகளில் ஒழுங்கின்மை அறுந்த நரம்புகள் சீரிய முறையில் பொருத்தப்படாமை, முகம் போன்ற பகுதிகளில் அவலட்சணம் தரும் தோற்றங்கள் காணப்படுதல் போன்ற பாதிப்புக்கள் பலரில் தொடர்கின்றன. இவ்வாறான பாதிப்புக்களின் தாக்கத்தைக் குறைப்பதற்கு துறைசார் நிபுணத்துவ உதிவி தேவைப்படுகின்றது. மேற்படி செய்தியை போர்ச்சிலுவை சுமக்கும் மக்கள் சார்பில் உலகெங்கும் பரந்துவாழும் எம்மினிய உறவுகளின் கவனத்திற்கு கொண்டுவர "களத்தில்" முனைகின்றது.


# தியாக தீபம் திலீபனின்

## 12-ம் ஆண்டு எழுச்சி விழா

**02.10.1999 சனி**
**பிற்பகல் 3.00 மணி**

Paulusheim, Moosmattstr. 4,
6005 Luzern



தேசியக் கொடியேற்றம்
அமைதி வணக்கம்
திலீபன் தியாகச்
சுடரேற்றல்
மலர் வணக்கம்
திலீபன் கீதாஞ்சலி

வில்லுப் பாட்டு
வழக்காடு மன்றம்
பேச்சு

எழுச்சி கானங்கள்
நாடகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
கலை பண்பாட்டுக் கழகம்
(சுவிஸ் பணியகம்)

''நான் நேசித்த தமிழீழ மண்ணில் வாழ்கின்ற அனைவரும் எமது உரிமையை மீட்பதற்கான பெரும் புரட்சிக்குத் தயாராக வேண்டும்''
—லெப்.கேணல் திலீபன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தமிழீழ விடுதலைப் புலிகள் (சுவிஸ் பணியகம்)


(10-ம் பக்கத் தொடர்ச்சி)

20.07.99 இன்று பள்ளமடுப் பகுதியல் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை சக்தி**
**அந்தோனிப்பிள்ளை மரியராதா**
கடற்கரை, நாச்சிக்குடா, முழங்காவில், மன்னார்.

20.07.99 அன்று மன்னார் பேசாலைப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**லெப். கீதன் அல்லது மாதவன்**
**சீமான் சேவியர்றோஸ் ஜெயகாந்**
மன்னார் மாவட்டம்

20.07.99 அன்று மன்னார் பேசாலைப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்

**வீரவேங்கை ஜீவா**
**மோகராசா ஜெகநாதன்**
அம்பாறைமாவட்டம்
த.மு. 3ம் வாய்க்கால், புலவர்கமம், கிளிநொச்சி

21.07.99 அன்று மாங்குளம் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை தூயவன்**
**சிவப்பிரகாசம் சசிக்குமார்**
மட்டக்களப்பு

21.07.99 அன்று மன்னார் மாவட்டத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை சேயோன்**
**பாலசிங்கம் சந்திரன்**
முரசுமோட்டை
த.மு. தொட்டியடி விசுவமடு

21.07.99 அன்று கிளாலிக் கடற்பரப்பில் சிறீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் விழுப்புண் அடைந்திருந்த போராளி 28.07.99 அன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

**மேஜர் அமுதப்பிரியன்**
**ஐயாத்துரை விஜயராசா**
யாழ்மாவட்டம்

25.07.99 அன்று வன்னி மாவட்டத்தில் எதிர்பாராத வெடிவிபத்தில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை கேஞ்சலா**
**முத்துப்பிள்ளை புஸ்பராணி**
மட்டக்களப்பு மாவட்டம்

26.07.99 அன்று ஒட்டுசுட்டான் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**கப்டன் நம்பி**
**தம்பிராசா நேசராசா**
யாழ்ப்பாணம்
த.மு. பணியாரம்குளம், 3ம் யுனிற் மல்லாவி

29.0799 அன்று தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் போராளிஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை மலையரசன் அல்லது காவலன்**
**காளிமுத்து சுரேன்**
தமபிரசாபுரம், உழவனூர்
தர்மபுரம் விசுவமடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்த மண்ணும் அந்த இனியநாட்களும்

எழுவான் திசையைக் குருதிச் சேறாக்கி
வானத்தில் பிரசவம் நடக்கும்.
முகம்மலர்த்திப் பிள்ளைச் சூரியன் பிறப்பான்.
பனிநீராடிய மரங்கள் குங்குமப் பொலிவோடு சிரிக்க
இருள் விலகும்.
கானும் பொருளனைத்துக்கும்
யார்தான் காற்கொலுசு பூட்டுவரோ?
எல்லாமே செல்லமாகச் சிணுங்கியபடி சிலிர்க்கும்.
மெல்லியகுளிரும் பூவாசமுமாக முற்றமிருக்கும்.
கூடுவிட்டு விடுதலைப் பண்பாடி
விரித்தசிறகெடுத்துக் குருவிகள் வந்திறங்கும்.
வேலிவிட்டிறங்கும் கோழிகள்.
வெறுந்தரையானாலும்
விளைந்த வயலானாலும்
அவையழகு ஆயிரம் கோடிக்குத் தகும்.
ஏதோ உலகஇயக்கமே தன்னசைவிற்தான் என்பது போல்
கோயில் மணிகளின் நாதம் காற்றிலிழையும்.
கோபுரப் பறைவகைகள் சிறகடித்துப் பறந்து
திரும்பவும் வந்து குந்தும்.
பூமி ருதுப்பெறும் பொழுதிதுதான்.
கட்டவிழ்த்த கறவைமாடுகள் மேச்சலுக்குப்
போகும்.
ஏரிநிமிர்த்தி வயலேகும் நாம்பன்கள்.
புத்தகச் சுமையோடு பள்ளிக்குச் செல்லும்
வண்ணத்துப் பூச்சிகளால் தெருக்கள்
வடிவுபெறும்.
கலகலத்தோடும் அந்தச் சிறுநதிகளின்
பிஞ்சுப்பாதங்கள் தொடும் வீதிகள்
புண்ணியம் செய்தன.
நகர்நோக்கிப் போகும் பேருந்துகள்
ஊரில் ஏகாந்த அமைதிகுலைத்து ஏகும்.
வண்டில்கள் - தாளச்சுருதிக்குச் சரியாகக் குடக்கடித்து
கிடுகேற்றி வரும்.
இப்படித்தான் - எத்தனை அழகோடு
இந்த மண்ணின் அந்த நாட்கள் இருந்தன.
நெஞ்சில் சுமையற்ற நிறைவுடன்
மண்ணுடன் இணைந்த வாழ்விலொரு மகிழ்விருந்தது.
தெருவிளக்குகளற்ற இருள்கவிந்த வீதிகளெனினும்
பயமற்றிருந்த பரவசம் எமக்கு.
அச்சமில்லாத வாழ்வின் அழகில்
எம் ஜீவிதத்துக்கு ஒரு அர்த்தமிருந்தது
மரங்களுடன்கூட இழைபிரியா உறவிருந்தது.
வேலையும் உழைப்புமாகப் பகலும்
ஆடலும் பாடலுமாக இரவும்
வருவதும் போவதும் அறியாமல் கழிந்ததெம் காலம்.
வெளியுலகம் விஞ்ஞானத்தைச் சுற்றிச் சுழன்றது.
எங்கள் வாழ்வுமட்டும் அதே அழகுடன்
அதே எளிமையுடன்
அதே பேரமைதிப் பொலிவுடன்
முகத்தில் இதழ் பிரியாச் சிரிப்புடன் இருந்தது.
உலகெங்கும் ஊர்கள் இப்படித்தான்
இருந்ததெனினும்
அழகிருந்தது எங்கள் பூமியிற்தான்.
எங்கள் முகத்திலும் வடுக்கள் இருந்தன
கைகளிற் கறைகள் இருந்தன
எங்கள் பக்கங்களிலும்
இருண்டபக்கங்களிருந்தன.
எல்லாமே இருந்தனதான்.
ஆயினும் எம்மூர்களின் அழகிருக்கிறதே
அது வார்த்தைகளால் வடிவமைக்க முடியாத
பேரெழிற் சிற்பம்.
கவிதைகளால் கட்டமைக்கமுடியாத கட்டுமானம்.
ஒருநாளெனினும் இங்கு வாழ்ந்தவர்களுக்கே
இதை உருவகமாக்கி உணர்த்தமுடியும்
வையப் பரப்பெங்கும் அகதிகளாக அலையும்
தேசபுத்திரர்களின் நரம்புகளைச் சுரண்டிப் பாருங்கள்
அந்த உணர்வுக் கொப்பளிப்பில்
ஊரின் அழகே தெரியும்.



கால நிர்ப்பந்தத்தினால் அலையெற்றிய சருகாய்
எங்கெங்கோ கரையொதுங்கிய இதயங்களைக் கேளுங்கள்
விழிக்கசிவுடன் வெளியே வழிவது
ஊரின் உந்நதங்களே.
நீரடித்துப் பிரியாத நீராய்
தாயடித்து நோவாத சேயாய்
மறக்கமுடியுமா அந்த மகோன்னதமான நாட்கள்?
இத்தனை அழகையும் தான்
அடித்து வாயிற்போட வந்தனர் அவர்கள்
எல்லாவற்றையும் இல்லாதனவாக்கினர்.
சின்னக் கூடுகட்டி வாழ்ந்த ஜீவிதத்துக்கும்
வண்ணம் கலையாதிருந்த எங்கள் வாழ்வுக்கும்
என்னதான் நடந்தது?
ஒரு விளக்கியெடுத்த குத்துவிளக்குப் போல
கன்னம் குழிவிழச் சிரிக்கும் சின்னக் குழந்தையைப் போல
நிர்மலமாகக்கிடக்கும் நீலவான விதானத்தைப் போல
இருந்த வாழ்வைத்தானே இல்லாமற்செய்தனர்.
வேர்கருகிக்கிடக்கிறது விருட்சம்.
துக்கித்துக் கிடக்கிறதெம் சோபிதம்.
ஏர்கீறிய எங்களின் தாய்மடியை
இன்று யந்திரயானைகள் உழக்குகின்றன.
பழங்கள் மட்டும் விழுந்த பூமியின் மேனியில்
இன்று குண்டுகள் விழுந்து
குழியாக்குகின்றன.
எந்த நேரமும் எதுவும் நடக்கலாம்
செவ்வந்திப்பூவாய் சிரிப்புப் பூப்பூத்திருந்த தேசம்
கம்பிகளுக்குள்ளே இப்போ கண்ணீர்வடிக்கிறது.
கள்ளிச்செடிகளின் கையிடுக்குகளுக்கிடையே தான்
முல்லைப்பூக்களிப்போ மூச்சுவிடுகின்றன.
குயிலிருந்து பாடிய கொம்புகளிலிருந்து
ஆந்தைகள் அலறுகின்றன.
சாக்காடாய் போனது சந்தனப்பூமி
நாமெல்லாம் தனித்தனித் தீவுகளாகி
நிர்ப்பந்த நீர் சூழ்ந்துள்ளோம்.
எட்டாத் தொலைவில் எல்லா உறவுகளுமொன்றாச்சு.
தும்மினாலே ஓடிவந்துபார்க்கும் சொந்தங்கள்
செத்தாலே வரமுடியாத் தொலைவென்றாச்சு
எப்படிச் சிரிக்கும் எங்கள் முகங்கள்
ஒப்பாரியும் எம்தேசமுமே இப்போது உறவாச்சு.
பனிவிழும் தேசங்களிலும்
பாலைவனச் சுடுபுழுதியிலும்
பூமிப்பந்தின் எல்லாப் புள்ளிகளிலும்
வகை தொகையின்றி வாழும் எம் சொந்தங்களே
இனிக் கவலைகளைக் காச்சிப் பாகுசெய்து
மதுரச் சுவையாக்கி மகிழ்வோம்.
என்றினிக் காண்போமென்ற ஏக்கத்தைத் தொலைத்து
ஊர் திரும்ப நீங்களும் நாங்களும் உழைப்போம்.
வாழுமெம் தொப்பிள்கொடி உறவுகளே
தாய்நிலத்தை மீளமைக்கும் பணிக்கு
நாமிருக்கிறோம் என்ற உங்களின் குரல்கள்
வந்தெம் காதுரசும்போது எத்தனை
மகிழ்ச்சியாக இருக்கிறது.
சிறைப்பட்டிருக்கும் சிட்டுக்குருவிகளாய்
நாங்களிங்கு சிக்குண்டுள்ளோம்.
எனினும் விரைவில் விலங்குடைத்து
மீண்டும் சிறகுவிரிப்போம்.
கூண்டுடைத்து வெளியே குதிப்போம்
வசந்தம் வரும்
குயிலின் குக்கூச் சத்தம் அடிவளவு
மாமரத்தில் எழும்.
முகம் திருத்திய முற்றத்துப் பூமரத்தில் பூக்கள்
குங்குமம் பூசிக் குதூகலிக்கும்.
நீங்கள்; வருவீர்கள்
நீங்கள்; வந்திறங்கும் வாசலில் நாங்கள் வழிபார்த்திருப்போம்.
மீண்டும் இங்கே வசந்தத்தின் பூவாசம் வந்து
எம் மேனிதழுவும்.
பாட்டும் கூத்துமாக எம் பகலிரவு கழியும்.




– வியாசன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்